அறிஞர் மார்க்ஸ்

அறிஞர் மார்க்ஸ்

(வரலாறும், கொள்கையும்)

Y. M. C.
ASSOCIATION
PAGANERI.

*

எழுதியவர் :
ஆர். ராமநாதன்

தினசரி வெளியீடு

PRESENTED BY:
V. M.
KASI CHETTIAR
PAGANERI.

கிடைக்குமிடம் :
சக்தி காரியாலயம்
சென்னை : மதுரை : கோயமுத்தூர் : திருநெல்வேலி

முதல் பதிப்பு: அக்டோபர் 1946
உரிமை பதிவு செய்யப் பெற்றது

ரூபாய் ஒன்றரை
(தபால் செலவு தனி)

அச்சிட்டோர்:
சென்னை, ராயப்பேட்டை
சக்தி பிரஸ் லிமிட்டெட்
(சாந்தி பிரஸ்)

3286,

முகவுரை

மனித சமூகத்தின் சரித்திரத்தை அலங்கரிக்கும் மகா புருஷர் காரல் மார்க்ஸ். இந்த மகா புருஷரின் தத்துவத்தைத்தான் நாம் மார்க்சியம் என்கிறோம். மார்க்சின் தத்துவம் லோகாயதத்தை அடிப்படையாகக் கொண்டது. புதிய சகாப்தத்தின் புதிய தத்துவம்—விஞ்ஞான ரீதியான சோஷலிஸம்—மார்க்சிஸம் சோஷலிஸ்டு சமூக நிர்மாண வேலையில் சுய சிரமஜீவிகளின் சரித்திர ரீதியான ஸ்தானம் என்ன என்பதை மார்க்சிஸம் தெளிவு படுத்துகிறது.

மார்க்சிஸம் உண்மையானது—விஞ்ஞான ரீதியானது. இதனால்தான் அது மிக வலிமை படைத்த சக்தியாக விளங்குகிறது. இது வளரும் சக்தி. இது எதிர் காலத்தின் நம்பிக்கை.

மார்க்சிஸம் சர்வ வியாபகமானது. பிரபஞ்சத்தையும், நிகழ்ச்சிகளையும் லோகாயத அடிப்படையில் ஆராய இது மனித சமூகத்திற்குத் துணை புரிகிறது.

பழைய பாணியில் மார்க்சின் சரித்திரத்தை வரிசைக் கிரமமாகச் சொல்லுவது நமது நோக்கமல்ல. இது தவறும் கூட.

மார்க்சின் சரித்திரம் புரட்சியின் சரித்திரம். புரட்சியின் சரித்திரத்திலிருந்து மார்க்சின் சரித்திரத்தைப் பிரிக்க முடியாது. எனவே, புரட்சியின் சரித்திரத்தை விளக்குவதன் மூலம்தான் மார்க்சின் சரித்திரத்தை விளக்க முடியும். இந்த அடிப்படையில்தான் இந்த நூலை எழுதியிருக்கிறோம்.

புரட்சி உணர்ச்சியும், பேரம் பேசும் மனப்பான்மையும் முட்டி மோதும் இந்தக் காலத்தில், புரட்சிக் கலையின் தந்தை மார்க்சின் சரித்திரத்தை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் கருத்துடன் இந்த நூலை விநயத்துடன் தமிழர் முன் சமர்ப்பிக்கிறோம்.

சென்னை,
21-9-46

ஆர். ராமநாதன்.

தயாராகிறது

இந்நூலாசிரியர்

எழுதிய

லெனின்

(வாழ்க்கைக் குறிப்பும், கொள்கையும்)

●

சக்தி வெளியீடு

3286,



மார்க்ஸின்

மனைவி

ஜென்னி மார்க்ஸ்

ஹெகல்

பெடரிக் ஏங்கெல்ஸ்

முதல் அத்தியாயம்

"ஜீவராசிகளின் பரிணாம விதிகளை டார்வின் கண்டு பிடித்ததுபோல், சமூக சரித்திரத்தின் இயக்க விதிகளை மார்க்ஸ் கண்டு பிடித்தார்......முதலாளித்வ உற்பத்தி முறையையும், முதலாளித்வ உற்பத்திமுறை சிருஷ்டி செய்த சமுதாயத்தை இயக்குவிக்கும் விதிகளையும் மார்க்ஸ் கண்டு பிடித்தார்......மார்க்ஸ் இணையற்ற புரட்சிக்காரர். முதலாளித்வ சமுதாயத்தை அடித்துத் தகர்த்துவிட்டு, வர்க்கபேத மற்ற புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதை வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டவர் மார்க்ஸ்" என்கிறார் ஏங்கல்ஸ்.

மனித சமூகத்தின் சரித்திரத்தை அலங்கரிக்கும் மகா புருஷர் காரல் மார்க்ஸ். சிந்தனையில் தெளிவு, ஆராய்ச்சியில் ஆர்வம், கொள்கையில் பற்று, சேவையில் ஊக்கம் ஆகிய அரும் குணங்கள் படைத்த ஒருசிலரைத்தான் நாம் சரித்திரத்தில் காண முடியும். இந்த இனத்தைச் சேர்ந்தவர் மார்க்ஸ். உண்மையில் மார்க்சுக்கு இணை, மார்க்ஸ்தான்.

மனித சமூகம் இயற்கையை எதிர்த்துப் போர் புரிந்து, வெற்றி பெற்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமூக அமைப்பை எதிர்த்து ஜனங்கள் போர் புரிந்து, வெற்றி பெற்றார்கள். எழுதப்பட்ட மனித சமூகத்தின் சரித்திரம் வர்க்கப் போராட்டத்தின் சரித்திரம் என்பது மார்க்ஸ் கண்ட முடிவு. இந்தச் சரித்திரத்தின் பிரதிநிதி காரல் மார்க்ஸ்.

வறுமையாலும், துன்பத்தாலும் வாடின மனித சமூகத்திற்கு அவர் மார்க்சிஸம் என்னும் பொக்கிஷத்தை அளித்தார். அது வற்றாத ஊற்று. இயற்கை, சமூகம், சரித்திரம், வளர்ச்சி, சிந்தனை ஆகியவைகளின் விஞ்ஞானம் மார்க்சிஸம். இந்த உண்மையை இன்று சமூகம் அங்கீகரிக்கிறது. இந்த அங்கீகாரத்தைப் பெற மனித சமூகத்தின் மலர்கள் செய்திருக்கும் தியாகம் கொஞ்சமல்ல.

சந்தர்ப்ப வாதிகளிட மிருந்தும், பிற்போக்காளர்களிட மிருந்தும் மார்க்ஸிஸத்தைக் காக்க மார்க்ஸ் இடைவிடாது போராடினர்; அவருக்குப் பிறகு அவர் கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் இடைவிடாது போராடி வருகிருர்கள். மார்க்ஸிஸத்தை—புரட்சியின் தத்துவத்தை—ஆழக் குழி தோண்டிப் புதைக்க முதலாளித்வம் இடைவிடாது போர் புரிந்தது—போர் புரிகிறது. அதே போன்று, மார்க்ஸிஸத்தைப் பாதுகாப்பதற்காக எண்ணற்ற வீரர்கள் போர்க்களத்தில் நிற்கிருர்கள். இந்தப் போரில் மார்க்ஸிஸம் வெற்றி பெறும். ஏன்? அது வளரும் சக்தி; அது புது யுகத்தின் தத்துவம்; அது விஞ்ஞானம்.

மார்க்ஸிஸம் ஏட்டுச் சுரைக்காய் என்று பலர் எள்ளி நகையாடின காலம் ஒன்றிருந்தது. முதலாளித்வத்தின் கூலிப் பண்டிதர்களும், குற்றேவல் புலவர்களும் மார்க்ஸிஸத்தைப் பழித்தார்கள்—பழிக்கிருர்கள். மார்க்ஸிஸம் அனுஷ்டானத்திற்கு ஒத்து வராத தத்துவம் என்று சொன்ன காலம் மலையேறிவிட்டது. மார்க்ஸிஸத்தின் வெற்றியின் சின்னமாக இருபத்து ஒன்பது வருடங்களாக விளங்குகிறது சோவியத் யூனியன். மார்க்ஸ் தர்க்க ரீதியாக எடுத்துக் காட்டியதைப்போல், மனித சமூகம் முதலாளித்வ சகாப்தத்தைத் தாண்டி இன்பம் கொஞ்சும் சோஷலிஸ்டு சாம்ராஜ்யத்தில் பிரவேசித்துத்தான் தீரும் என்பதற்கு உதாரணம் சோவியத் நாடு. முதலாளித்வம் அதிக காலம் உயிர் வாழ முடியாது என்பதற்கு எடுத்துக் காட்டு சோஷலிஸ்டு குடியரசு. சோவியத் யூனியனின் வெற்றி, மார்க்ஸிஸத்தின் வெற்றி; உலகத் தொழிலாளர்களின் வெற்றி. பெரிய சோதனைகளுக்கும், முதலாளித்வத்தின் ஏகோபித்த தாக்குதலுக்கும் அசைந்து கொடுக்காத சோஷலிஸ்டு சுடர் விளக்கு உலக மக்களின் கவனத்தை ஈர்த்தது. மார்க்ஸிஸம் அனுஷ்டானத்திற்கு ஒத்து வராத தத்துவம் என்று கூறினவர்கள் மூலை தேடி ஓடினர்.

சோவியத் நாடு திடீரென்று தோன்றவில்லை. நீண்ட காலப் போராட்டத்தின் பலன் அது. மார்க்ஸிஸம் என்னும் புரட்சிகரமான, விஞ்ஞான ரீதியான திட்டத்தை

ஆயுதமாகக் கொண்டு, புது யுகச் சிற்பி லெனின் தலைமையில் முறையாகவும், கட்டுப்பாடாகவும் போர் புரிந்து, ருஷ்ய மக்கள் புது உலகத்தைச் சிருஷ்டித்தார்கள். உலக மக்களைப் பீடித்து வாட்டும் நோயைத் தீர்க்கும் அரு மருந்து மார்க்சிஸம்தான் என்பதை ஜனங்கள் மேலும் மேலும் உணர்ந்து வருகிறார்கள். "தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் தத்துவமும், திட்டமும் மார்க்சிஸம்" என்பது லெனின் முடிவு.

மார்க்ஸ் *தர்க்கவியல் லோகாயத சாஸ்திரத்தை உலகிற்கு அளித்தார். மார்க்சுக்கு முந்தின தத்துவ ஞானிகள் தர்க்கவியல் லோகாயத சாஸ்திரத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்கள் என்றாலும், அதைப் புரட்சியின் தத்துவமாக உருவகப் படுத்தின பெருமை மார்க்ஸைச் சார்ந்தது. இயற்கையை லோகாயதக் கண்களுடன் பார்க்கும் ஒரு விஞ்ஞானமாக மாற்றி, தர்க்கவியல் லோகாயத சாஸ்திரத்திற்குப் புதிய உயிர் கொடுத்தார் மார்க்ஸ். இயற்கை, தர்க்கவியல் லோகாயதத்தின் உரைகல்.

பிரபஞ்சத்தில் எதுவும் ஸ்திரமானதல்ல என்பது தர்க்கவியல் லோகாயத சாஸ்திரத்தின் தீர்ப்பு. உலகில் எல்லாம் மாறுகின்றன — அழிகின்றன — புதுமை தோன்றுகின்றன. எல்லாவற்றிலும் அழிவின் விதையைக் காண்கிறது தர்க்கவியல் லோகாயதம். அழிவை ஆக்கம் பின்தொடரும்; ஆக்கத்தை அழிவு பின் தொடரும். எல்லாம் முடிவின்றிக் கீழ் நிலையிலிருந்து மேல் நிலைக்குத் தாவும்.

"வெளி உலகம், சிந்தனை ஆகியவைகளின் அசைவின் பொது நியதிகளை விளக்கும் விஞ்ஞானம் தர்க்கவியல் லோகாயதம்" என்கிறார் மார்க்ஸ்.

விஷயத்தை, அல்லது பொருளை, முறையாக, சரித்திர ரீதியாக ஆராய வேண்டும். முதலில் பொருளின் விசேஷ குணங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்; பிறகு, அதன் பொதுக் குணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறப்பு, வளர்ச்சி, அழிவு ஆகியவைகளையும் தெளிவாக ஆராய வேண்டும். பொருளில் ஏற்படும் அளவு

*Dialectical Materialism.

மாற்றம் எப்பொழுது குணமாற்றத்தை உண்டுபண்ணும் என்பதையும், குணம் எப்பொழுது அளவு மாற்றத்தை உண்டு பண்ணும் என்பதையும் கண்டு பிடிக்க வேண்டும். முரண்பாடுகளின் தற்காலிக ஒற்றுமையையும், விரோதத்தையும் ஆராய வேண்டும். *நிஷேதத்தின் நிஷேதத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

வளர்ச்சி நேர் கோடில் பிரயாணம் செய்யாது என்பதையும், அது வளைந்து வளைந்து செல்லும் என்பதையும் மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். புதுமை தோன்றுகிறது; அது படிப் படியாக வளர்கிறது; புரட்சி ஏற்படுகிறது; அது அழிகிறது; மீண்டும் புதுமை தோன்றுகிறது, புதிய வடிவத்தில். உதாரணமாக, மனித சமூகத்தின் சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். புராதனக் கம்யூனிஸ்டு சமுதாயம் அழிந்தது (இதைக் கோட்பாடு என்போம்); தனிச்சொத்துமுறை பிறந்தது (இதை எதிர்மறை என்போம்); மீண்டும் கம்யூனிஸ்டு சமுதாயம் தோன்றும் (இதைப் புதுமை என்போம்); ஆனால், மீண்டும் தோன்றும் கம்யூனிஸ்டு சமுதாயம் புராதனக் கம்யூனிஸ்டு சமுதாயத்தைப் போன்றிராது. புதிதாகத் தோன்றும் கம்யூனிஸ்டு சமுதாயம் மிக உயர்ந்ததாக இருக்கும். இதே நியதி இயற்கை, சிந்தனை முதலிய எல்லாப் பிரிவுகளுக்கும் பொருந்தும். இந்த விஞ்ஞானம், பிரபஞ்சத்தையும் நிகழ்ச்சிகளையும் ஆராயப் புதிய திருஷ்டி அளித்தது.

மார்க்ஸ் †சரித்திர வியல் லோகாயத சாஸ்திரத்தை உலகிற்கு அளித்தார். மார்க்சுக்கு முந்தின லோகாயத வாதம், குறைகள் நிறைந்தது என்பது மாத்திரமல்ல, அது ‡சமூக சாஸ்திரத்தைத் திரும்பியும் பார்க்கவில்லை. எனவே, "சமூக சாஸ்திரத்தை லோகாயத அஸ்திவாரத்தில் அமைக்க" முடிவு செய்தார் மார்க்ஸ். "இயக்கம்தான் போதத்தை நிர்ணயிக்கிறது" என்றால், "சமூக இயக்கம் தான் சமூக போதத்தை நிர்ணயிக்கிறது." "மனிதனுக்கு இயற்கையுடன் இருக்கும் தொடர்பை யந்திரக்கலை தெளிவு படுத்துகிறது; வாழ்க்கைக்காக அவன் நேரடியான உற்பத்திச் செயலில் ஈடுபடுவதையும் இது விளக்கு

* Negation of Negation. † Historical Materialism. ‡ Social Science.

கிறது. இது சமூக உறவுகளையும், அதன் விளைவாக ஏற்படும் மனோ நிலைகளையும் புட்டுக் காட்டுகிறது" என்கிறார் மார்க்ஸ். இந்தத் தத்துவத்தை—லோகாயத தத்துவத்தை—அடிப்படையாகக் கொண்டு மனித சமூகத்தையும், அதன் சரித்திரத்தையும் அவர் ஆராய்ந்தார்.

"வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பொழுது மக்கள் நிர்ணயமான, அவசியமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். இது அவர்கள் விருப்பத்தைச் சார்ந்ததல்ல. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குப் பொருத்தமான உற்பத்தி உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர். இந்த உற்பத்தி உறவுகள்தான் சமூகத்தின் பொருளாதார அமைப்பின் அஸ்திவாரம். இந்த உண்மையான அஸ்திவாரத்தின் மீதுதான் சட்ட அரசியல் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. இதைத் தொடர்ந்து, இதற்குப் பொருத்தமான சமூக* போதம் தோன்றுகிறது. பொதுவாக, வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் முறைதான் வாழ்க்கையின் சமூக, அரசியல், அறிவுப் போக்கை நிர்ணயிக்கிறது. மனிதன் போதம் அவன் இயக்கத்தை நிர்ணயிக்கவில்லை; ஆனால், அவன் சமூக இயக்கம் தான் அவன் போதத்தை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட நிலையில், சமூகத்தின் லோகாயத உற்பத்தி சக்திகள் அமுலில் இருக்கும் உற்பத்தி உறவுகளுடன் முட்டி மோதுகின்றன. இதைச் சட்ட பாஷையில் சொல்லுவதானால், அவை அதுவரையில் அசைந்து கொண்டிருந்த சொத்து உறவுகளுடன் முட்டி மோதுகின்றன. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த இந்த உறவுகள், அவைகளின் முட்டுக்கட்டையாக மாறுகின்றன. பிறகு சமூகப் புரட்சி சகாப்தம் ஆரம்பமாகிறது. பொருளாதார அஸ்திவாரம் மாறுவதைத் தொடர்ந்து கட்டிடம் முழுதும் விரைவில் மாறுகிறது. இந்த மாற்றங்களை நாம் பரிசீலனை செய்யும்பொழுது உற்பத்தியின் பொருளாதார நிலைகளில் ஏற்படும் லோகாயத மாற்றங்களையும்—இந்த மாற்றத்தை இயற்கை விஞ்ஞானத்தைப் போன்று நிர்ணயமாக நிர்ணயிக்க முடியும். சட்ட, அரசியல், மத,

* Conciousness

தத்துவத் துறையில், சுருங்கச் சொன்னால், தத்துவ வடிவங்களில் ஏற்படும் மாற்றங்களையும் நாம் தெளிவாகப் பிரித்தறிய வேண்டும். இந்தப் போராட்டத்தை மக்கள் உணர்ந்து, போர் புரிவார்கள்.

"ஒருவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என்பதைக் கொண்டு நாம் அவனை மதிப்பிட மாட்டோம். அதே போன்று, புரட்சி சகாப்தத்தை அதன் போதத்தைக் கொண்டு நாம் மதிப்பிடமாட்டோம். அதற்கு மாறாக, லோகாயத வாழ்க்கையில் ஏற்படும் முரண்பாடுகளின் விளைவுதான், சமூக உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் நடக்கும் போராட்டம்தான் இந்தப் போதம் என்பதை நாம் விளக்க வேண்டும்" என்கிறார் மார்க்ஸ். மார்க்ஸின் சரித்திரவியல் லோகாயத சாஸ்திரம் சரித்திரத்தைத் தூய்மைப் படுத்திற்று. சமூக — பொருளாதார அமைப்புகளின் தோற்றம், வளர்ச்சி, அழிவு ஆகியவைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள இந்தச் சாஸ்திரம் துணைபுரிகிறது.

மக்கள் தங்கள் சரித்திரத்தைச் சிருஷ்டிக்கிறார்கள். அவர்கள் நோக்கத்தை நிர்ணயிக்கும் சக்தி எது? முரண்பட்ட எண்ணங்களைத் தோற்றுவிக்கும் சக்தி எது? வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்வதை முடிவு செய்யும் நிலைகள் எவை? இந்த நிலைகளை வளர்க்கும் நியதிகள் எவை? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் மார்க்ஸின் சரித்திரவியல் லோகாயத சாஸ்திரம் விடை அளிக்கிறது.

உற்பத்திமுறை மாறும் தன்மை உடையது என்பதைச் சரித்திரவியல் லோகாயதம் தெளிவு படுத்துகிறது. உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றம் சமூக அமைப்பையே தலைகீழாக மாற்றுகிறது.

உற்பத்தி சக்திகளின் மாற்றம் உற்பத்தி முறையை மாற்றுகிறது. உற்பத்தி சக்திகள் மாறும்பொழுது உற்பத்தி உறவும் மாறுகிறது. இப்படிச் சொல்லுவதால் உற்பத்தி சக்திகளின் மாற்றத்திற்கும், உற்பத்தி உறவுகளுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று யாரும்

கருதலாகாது. உற்பத்தி சக்திகளின் மாற்றத்துக்கு உற்பத்தி உறவுகள் துணைபுரிகின்றன. ஆனால், உற்பத்தி சக்தி தான் முடிவான சக்தி. உற்பத்தி முறைக்குத் தகுந்த வாறு உற்பத்தி உறவு ஏற்படுகிறது. ஆனால், இது தானாக ஏற்படாது; புரட்சிக்குப் பிறகுதான் இந்த நிலை ஏற்படும்.

மார்க்ஸ் உலகத்திற்கு அளித்த அரசியல் பொருளாதார சாஸ்திரம் முதலாளித்வ உற்பத்தி முறையின் தன்மையையும், அதன் வளர்ச்சியையும், அதன் அழிவையும் மிகத் தெளிவாக விளக்குகிறது.

"முதலாளித்வ சமூகத்தின் பொருளாதார நியதியின் அசைவை விளக்குவதுதான் தமது நூலின் நோக்கம்" என்னும் சுலோகத்துடன் மார்க்ஸ் முதலாளித்வ உற்பத்தி முறையை அலசி அலசி ஆராய்கிறார். முதலாளித்வ சமூகத்தின் செல்வம் பண்ட உருவில் திகழ்கிறது. எனவே, முதலில் அவர் பண்டத்தின் தன்மையை விளக்குகிறார்.

பண்டம் மனிதன் தேவையைப் பூர்த்தி செய்கிறது. எனவே, அதற்கு உபயோக மதிப்பு இருக்கிறது. உபயோக மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பைப் பண்டத்திற்கு அளிக்கிறது. பரிவர்த்தனை மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறது? பண்டத்தில் பொதிந்து கிடக்கும் மனித உழைப்பால் பரிவர்த்தனை மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. பண்டங்கள் எல்லாவற்றிலும் மனித உழைப்புப் பொதிந்து கிடக்கிறது. இந்த உழைப்பை, பொதுவான மனித உழைப்பு என்கிறார் மார்க்ஸ். ஒவ்வொரு பண்டத்திலும் சமூகத்திற்கு அவசியமான வேலை நேரத்தின் ஒரு பகுதி பொதிந்து கிடக்கிறது. இந்தச் சமூகத்திற்கு அவசியமான வேலைநேரம்தான் பண்டத்திற்கு மதிப்பைக் கொடுக் கிறது. ஆரம்பத்தில் பண்ட மாற்று முறை—ஒரு பண்டத் தைக் கொடுத்து இன்னொரு பண்டத்தை வாங்கும் முறை —அமுலில் இருந்தது. இந்த முறை மாறுகிறது. பணம் சமூகத்தில் இடம் பெறுகிறது. அதன் பிறகு, பணம் பரி வர்த்தனையின் நடு நாயகமாகிறது.

பண்ட உற்பத்தி வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட நிலையை அடையும்பொழுது பணம் மூலதனமாக மாறு

கிறது. உடனே பணம்—பண்டம்—பணம் என்னும் முறை அமுலுக்கு வருகிறது. முதலாளிகள் லாபத்திற்கு விற்பதற்காகப் பண்டத்தை வாங்குகிறார்கள். இதனால் போடப்பட்ட மூலதனத்தைவிட அதிகப் பணம் கிடைக்கிறது. இதை "அதிக மதிப்பு" என்கிறார் மார்க்ஸ். அதிக மதிப்பு, பண்டப் பரிவர்த்தனையால் ஏற்பட முடியாது; ஏனெனில் பண்டம், சம மதிப்புடைய வேறு பண்டத்திற்காகத்தான் மாற்றப்படும். பண்டத்தின் விலை ஏறுவதால் அதிக மதிப்பு ஏற்படாது; ஏனெனில், வாங்குவோர் விற்போரின் லாப நஷ்டம் ஈடு செய்யப்படுகிறது. அப்படியானால் அதிக மதிப்பை எது உண்டுபண்ணுகிறது? மனிதனுடைய உழைக்கும் சக்திதான் அதிக மதிப்பை உண்டு பண்ணுகிறது. பணமூட்டை இந்த உழைக்கும் சக்தியை வாங்குகிறது. இதன் மதிப்பும் சமூகத்திற்கு அவசியமான வேலை நேரத்தால்—தொழிலாளியின் உழைக்கும் சக்தியின் மதிப்பு அவனும், அவன் குடும்பமும் தொழிலாளியாக வாழப் போதுமானதை ஆதாரமாகக்கொண்டு—நிர்ணயிக்கப்படுகிறது. மனித உழைக்கும் சக்தியை வாங்கின முதலாளி அதை உபயோகிக்கிறான். தொழிலாளி நாள்தோறும் பன்னிரண்டு மணிநேரம் வேலை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் ஆறு மணி நேரம் அவசியமான வேலை நேரம். (இந்த ஆறு மணி நேரத்தில் தனக்குக் கொடுக்கும் கூலிக்குச் சமமான மதிப்பை உண்டுபண்ணுகிறான் தொழிலாளி); ஆறு மணி நேரம் அதிகமான வேலை நேரம் (இந்த ஆறு மணி நேரம் வேலை செய்வதற்கு முதலாளி அவனுக்குக் கூலி கொடுக்கவில்லை.) அதிக மதிப்பை உண்டு பண்ணுகிறது.

மார்க்ஸ் மூலதனத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார். ஸ்திர மூலதனம்; மாறும் மூலதனம். உற்பத்திச் சாதனங்களுக்காகச் (யந்திரம், கருவிகள் முதலியன) செலவு செய்யப்படும் மூலதனம், ஸ்திர மூலதனம். இது அதிக மதிப்பை உண்டுபண்ணாது. உழைக்கும் சக்திக்காகச் செலவு செய்யப்படும் மூலதனம், மாறும் மூலதனம். இதுதான் அதிக மதிப்பை உண்டுபண்ணுகிறது. எனவே, லாபத்தைக் கணக்கிடும்பொழுது மொத்த முதலீட்டை ஆதார

மாகக் கொண்டு இதைச் செய்யலாகாது ; ஆனல், மாறும் மூலதனத்தை ஆதாரமாகக் கொண்டுதான் இதை நிர்ணயிக்க வேண்டும்.

காலப்போக்கில் அதிக மதிப்பைப் பெருக்குவதற்காக முதலாளிகள் யந்திரங்களை அபிவிருத்தி செய்வார்கள். இது முதலாளித்வத்தின் நிலையை ஆபத்திற்குள்ளாக்கும். முதலாளித்வக் குத்தகை உற்பத்தி முறைக்குக் குறுக்கே நிற்கும். சமூக மயமாக்கப்பட்ட உற்பத்தி முறையை முதலாளித்வத்தால் நிர்வகிக்க முடியாத நிலை ஏற்படும். "முதலாளித்வ தனிச் சொத்து முறையின் சாவு மணி கேட்கும். சுரண்டுவோர் சுரண்டப்படுவர்" என்கிறார் மார்க்ஸ்.

மார்க்ஸ் விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தை உலகத்திற்கு அளித்தார். முதலாளித்வ சமூகத்தின் பொருளாதார நியதியின் அசைவைத் தெரிந்து கொண்ட மார்க்ஸ், முதலாளித்வ சமூகம் அழிந்து, சோஷலிஸ்ட் சமூகம் தோன்றும் என்ற முடிவுக்கு வந்தார். உற்பத்தி முறை மேலும் மேலும் சமூக மயமாக்கப் படுமென்றும், பெரும் படியான உற்பத்தி முறை தலை தூக்குமென்றும், இதைத் தொடர்ந்து "கார்டல்களும், சின்டிகேட்டுகளும், டிரஸ்டுகளும்" வளருமென்றும், பண்ரூப மூலதனத்தின் பிடிப்பு உறுதியாகுமென்றும் மார்க்ஸ் கூறினர். முதலாளித்வத்தை எதிர்த்து சுயசிரம ஜீவிகள் நடத்தும் போராட்டம் பல்வேறு வடிவங்களை எடுக்குமென்றும், இறுதியில் அது முடிவான வர்க்கப் போராட்டத்தில் முடியுமென்றும் தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி, "சுயசிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வத்தை" ஸ்தாபிக்குமென்றும் மார்க்ஸ் கருதினர். சோஷலிஸ்டு சமுதாயம் வர்க்க வேற்றுமைக்கு முற்றுப்புள்ளி வைக்குமென்றும், இதன் மூலம் சர்க்காருக்கும் விடை கொடுக்குமென்றும் மார்க்ஸ் எண்ணினர்.

"சமூகத்தின் நன்மைக்காக உற்பத்திச் சாதனங்களைப் பொதுவாக்கும் புதிய ஆட்சி முறையின் முதல் செயல், சர்க்கார் என்ற முறையில் அதன் கடைசிச் செயலாகவும் இருக்கும். சமூக உறவில் சர்க்கார் தலையிடு

அவசியமற்றதாகும். சர்க்கார் அழிக்கப்படமாட்டாது; அது மங்கி மறையும்" என்கிறார் எங்கல்ஸ்.

மேற்கண்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக அவர் போர் முறையையும் சமூகத்திற்கு அளித்தார்.

மார்க்ஸிஸம் ஒரு ஜீவனற்ற தத்துவமல்ல; அது மாருத கோட்பாடும் அல்ல. அது ஒரு விஞ்ஞானம்; அது போர் முறை. புதிய ஆராய்ச்சிகளும், புதிய கண்டு பிடித்தங்களும் விஞ்ஞானத்தை வளர்ப்பதைப் போன்று, புதிய அனுபவமும், சுற்றுச் சார்புகளும் மார்க்ஸிஸத்தை வளர்க்கின்றன. ஏகாதிபத்தியத்தின் தத்துவத்தை உலகிற்கு அளித்து, மார்க்ஸிஸத்தை விரிவுபடுத்தினார் லெனின்; சோவியத் ஆட்சி முறையைக் கண்டு பிடித்து, சுயசிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வத்தை லெனின் வளர்த்தார்; ஏகாதிபத்திய சகாப்தத்தில் காலனி மக்களின் ஸ்தானம் என்ன என்பதைத் தெளிவு படுத்தி, மார்க்ஸின் போர் முறையை அவர் கூராக்கினார்; போல்ஷவிக் கட்சியை ஸ்தாபித்து புதிய போராட்ட ஸ்தாபனத்தைத் தொழிலாளி வர்க்கத்திற்கு அவர் அளித்தார். மார்க்ஸிஸத்தை அடிப்படையாகக் கொண்டு சோஷலிஸ்டு சமூகத்தை நிர்மாணித்து, மார்க்ஸிஸத்தை வளர்த்தார் ஸ்டாலின். உலகமெங்கும் மார்க்ஸிஸ்டுகள் நடத்தும் போராட்டம் மார்க்ஸிஸத்தை மேலும் மேலும் வளர்க்கிறது. மார்க்ஸிஸம் ஒரு உரை கல். புதிய நிலையின் தன்மையைத் தெரிந்து கொள்ள இந்த உரை கல் மனித சமூகத்திற்கு உதவி புரிகிறது. மார்க்ஸிஸம் வளர்ந்து, விரிவடைகிறது. அது வளரும் சக்தி.

மார்க்ஸ் விரிந்த உள்ளம் படைத்தவர்; அவர் மனிதாபிமானி. மனித சமாஜத்தை அவர் ஹிருதய பூர்வமாக நேசித்தார். தமது மனைவி மக்கள் மீது அவருக்கு அளவு கடந்த பற்று. நண்பர்களை அவர் பெரிதும் நேசித்தார். ஞாயிற்றுக் கிழமை குடும்ப தினம். அன்று அவர் வேலை செய்யமாட்டார். அன்று அவர் உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பார். குழந்தைகள் அவரை நேசித்தன; அவர் குழந்தைகளை நேசித்தார். அன்புக்கு உறைவிடம் காரல் மார்க்ஸ். ஆனால், மார்க்ஸின் எதிரிகள் இதை

ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் அவரை "அரக்கனாக"ச் சித்தரித்தார்கள்.

மார்க்ஸ் சர்வதேசவாதி. உண்மையான தேசியவாதி சர்வதேசவாதியாகத்தான் இருக்க முடியும் என்பது அவர் முடிவு. அவர் உலகப் பிரஜை! எனவே, பல நாட்டுப் புரட்சிகளில் அவர் நேரடியாகக் கலந்து கொண்டார். பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய நாடுகளில் மார்க்ஸ் வசித்த பொழுது அந்த நாடுகளில் புரட்சி இயக்கத்தை வளர்க்க அவர் பெரு முயற்சி செய்தார். "நான் உலகப் பிரஜை. எனவே, எந்தத் தேசத்தில் நான் வாழுகிறேனே, அந்தத் தேசத்தின் விடுதலைக்காக நான் பாடுபடுவேன்" என்றார் மார்க்ஸ்.

சரித்திரம், இயற்கை, விஞ்ஞானம், பொருளாதாரம் ஆகியவைகளை முறையாகக் கற்றதுடன் மார்க்ஸ் திருப்தி அடையவில்லை. பல பாஷைகளில் வெளிவந்த நூல்களை அவர் படிக்க விரும்பினார். எனவே, அவர் பல பாஷைகளைக் கற்றார். பல பாஷைகளில் அவர் அழகாக எழுதுவார். அவர் ஆராயாத சாஸ்திரம் இல்லை; அவர் எழுதாத விஷயம் இல்லை.

"பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ச்சியின் முன்னணியில் நின்ற மூன்று நாடுகளில் வளர்ந்த தத்துவங்களைப் பூர்த்தி செய்தார் பேறிஞர் மார்க்ஸ். ஜெர்மன் தத்துவத்தையும், ஆங்கில அரசியல் பொருளாதார சாஸ்திரத்தையும், பிரெஞ்சுப் புரட்சியுடன் பிணைபட்டுக் கிடந்த பிரெஞ்சு சோஷலிஸத்தையும் அவர் பூர்த்தி செய்தார்" என்கிறார் லெனின்.

இரண்டாம் அத்தியாயம்

ஜெர்மனி அன்று முதலாளித்வ சகாப்தத்திற்கும், இறந்து கொண்டிருந்த பிரபுத்வ சமூகத்திற்கும் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆங்கில முதலாளிகளைப் போன்று ஜெர்மன் முதலாளிகள் பக்குவம் அடைந்திருக்க வில்லை; அனுபவசாலிகளாகவும் இருக்கவில்லை. பிரபுத்வத்தை அழித்துவிட்டு, முன் செல்ல அவர்களால் முடியவில்லை. இது வாழ்க்கையின் சகல துறைகளிலும் பிரதிபலித்தது.

பிரபுத்வ காலத்தில் உற்பத்தியாளர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்காகவோ, அல்லது தங்கள் எஜமானர்களின் உபயோகத்திற்காகவோ பொருள்களை உற்பத்தி செய்தனர். இந்த இருவரின் தேவைக்கு மிஞ்சின பொருள்கள் விற்கப்பட்டன. அந்தக் காலத்தில் பண்ட உற்பத்தி குழந்தைப் பருவத்தில் இருந்தது. "ஆரம்ப காலப் பண்ட உற்பத்தி" என்று இந்த முறையை அழைத்தார் மார்க்ஸ். ஆரம்பகாலப் பண்ட உற்பத்தி பிரபுத்வத்துடன் பலமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த உற்பத்தி முறை வளர முடியவில்லை.

அந்த நிலையில் நீராவி யந்திரம் தோன்றி உற்பத்தி முறையில் தலை கீழ் மாற்றத்தை உண்டுபண்ணிற்று. அதன் பிறகு, உற்பத்தி சக்தி அமோகமாக வளர்ந்தது. வளரும் உற்பத்தி சக்தியும், வளர்ச்சிக்குக் குறுக்கே நின்ற பழைய உற்பத்தி முறையும் முட்டி மோதின; முதலாளித்வமும், பிரபுத்வமும் உக்ரமாகப் போர் புரிந்தன. இந்தப் போரில் முதலாளித்வம் வெற்றி பெற்றது.

1789ஆம் வருட பிரபுத்வத்திற்கு விடை கொடுத்து விட்டு, முதலாளித்வ சகாப்தத்தில் பிரவேசித்தது பிரான்ஸ். இங்கிலாந்தில் முதலாளித்வ உற்பத்திமுறை தலை தெறிக்கும் வேகத்தில் வளர்ந்தது. உண்மையில், இங்கிலாந்து முதலாளித்வத்தின் கோட்டையாக விளங்கிற்று. ஹாலந்

திலும் முதலாளித்வ உற்பத்திமுறை வளர்ந்தது. ஆனால், ஜெர்மனியில் முதலாளித்வ உற்பத்திமுறையும், பிரபுத்வ உற்பத்தி முறையும் அருகருகே இயங்கின. அரசியல் அதிகாரம் நிலச் சுவான்தார்களிடம் இருந்தது. பிரபுத்வத்தின் உரிமைகள் அமுலில் இருந்தன. பிரபுத்வத்தை வீழ்த்தி, அதிகாரத்தைக் கைப்பற்ற, ஜெர்மன் முதலாளிகளுக்கு வலிமை இருக்கவில்லை. எனவே, ஜெர்மனியில் குழப்பம் குடி கொண்டது. அரசியலில் குழப்பம்; தத்துவத்தில் குழப்பம்; சிந்தனையில் குழப்பம்; செயலில் குழப்பம்!

முதலாளித்வ உற்பத்தி முறை அமுலுக்கு வந்ததும், புதிய சமூக அமைப்பு உருவெடுத்தது. முதலாளித்வ உற்பத்தி முறைக்குத் தகுந்தவாறு தத்துவம், அரசியல், சட்டம், சமூக சாஸ்திரம் முதலியன மாறின. முதலாளித்வ சமூக அமைப்புக்குத் தகுந்தவாறு தத்துவத்தைத் திருத்தி அமைக்கப் புதிய தத்துவ ஞானிகள் முயன்றனர். "சரித்திரத்தை நிர்ணயிக்கும் சக்தி உற்பத்தியும், புனர் உற்பத்தியும்தான் என்பது சரித்திர வியல் லோகாயத சாஸ்திரத்தின் முடிவு" என்றார் எங்கல்ஸ். (ஆண்டி—டுஹறிங், பக்கம் 475) உற்பத்திமுறை மாறினால், அதைத் தொடர்ந்து சமூகம் தலைகீழாக மாறும் என்பதை இங்கே வலியுறுத்துகிறார் எங்கல்ஸ்.

ஜெர்மனியில் பிரபுக்களும், முதலாளிகளும் அதிகாரத்திற்காக மறைமுகமான போராட்டம் நடத்திக் கொண்டிருந்த காலத்தில், பலஹீனமான முதலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாமல் திண்டாடின சமயத்தில், முதலாளித்வ சகாப்தத்தில் காரல் மார்க்ஸ் உலகில் தோன்றினார்.

1818 ஆம் வருடம் சரித்திரத்தை அலங்கரிக்கும் வருடம். அந்த வருடம் மே மாதம் ஐந்தாம் தேதி ரைன்லாந்தில் பிறந்தார் காரல் ஹீன்ரிச் மார்க்ஸ். அன்று ரைன்லாந்து நெப்போலியன் காலடியின் கீழே விழுந்து கிடந்தது.

ஓயாத படையெடுப்பால் ஜெர்மனி தளர்ந்திருந்தது. ஜனங்களின் வாழ்க்கை நிலை கேவலமாக இருந்தது. சார

மற்ற வாழ்க்கையை ஜனங்கள் வெறுத்தனர். துன்பத்தை அனுபவித்துச் சலித்த மக்கள் முடியாட்சிக்கு விடை கொடுக்க விரும்பினர். ஆனால், பிரபுக்கள் அசாதாரண வெறியுடன் ஜனங்கள் மீது பாய்ந்தனர். ஏனெனில், ஜனங்கள் கிளர்ந்தெழுந்தால் பிரபுத்வம் சாகும் என்பது பிரபுக்களுக்குத் தெரியும். ஆனால், வளரும் பூர்ஷுவாக்கள் அன்று செயலாற்ற வில்லை.

மூன்றாவது பிரெடரிக் வில்லியமும், அவருக்குப் பக்கபலமாக நின்ற நிலச் சுவான்தார்களும் பிற்போக்கு சக்திகளை அவிழ்த்து விட்டனர். போலீசார் தேசத்தை ஆண்டனர். ஜெர்மனி ஒரு "சுடுகாடாக" மாறிற்று.

நெப்போலியன் ஆட்சியில் யூதர்கள் சிறிது நன்மை அடைந்தனர். "சட்டத்திற்கு முன் எல்லோரும் சமம்" என்ற நியதி அமுலுக்கு வந்தது. அதன் பிறகு, அது வரையில் யூதர் காணாத உலகில் பிரவேசிக்கப் புதிய சட்டம் யூதர்களுக்குத் துணை புரிந்தது. அந்த உலகில் யூதர்கள் உற்சாகத்துடன் பிரவேசித்தனர்.

நெப்போலியன் வீழ்ச்சிக்குப் பிறகு நெப்போலியன் பிறப்பித்த சட்டங்களை ஜெர்மன் மன்னர் பறித்தார். எந்த வாழ்க்கையை யூதர்கள் உற்சாகத்துடன் மேற்கொண்டார்களோ, அந்த வாழ்க்கை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. திடீரென்று பெற்ற பார்வையை யூதர்கள் மீண்டும் இழந்தனர். பார்வை இழந்த யூதர்கள் திகைத்தனர். அன்று அவர்களுக்கு முன்னிருந்த வழிகள் இரண்டு: ஒன்று பழைய வாழ்க்கையை—தீண்டப்படாதார் வாழ்க்கையை—மௌனமாக ஏற்பது; மற்றொன்று தங்கள் பெயர், நம்பிக்கை, பழக்க வழக்கம் முதலியவைகளை மாற்றிக் கொண்டு புதிய வாழ்க்கையை மேற்கொள்வது. ஹெர்ஸ்செல் லெவி (மார்க்சின் தந்தை) அந்த நூற்றாண்டின் நிலைக்கு ஒரு எடுத்துக் காட்டு. அவர் யூதர். அவர் குடும்பம் பழைய முறையில் வாழ்ந்தது. ஆனால், அன்று ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து கிடந்த ஐரோப்பியர்களைத் தட்டி எழுப்பிய புரட்சித் தீ இளம் ஹெர்ஸ்செல் லெவியினையும் ஓரளவு ஆட்கொண்டது. ஹெர்ஸ்செல் அறிவியல் வாதி. எனவே, புதிய நிலைக்குத் தகுந்தவாறு, அவர்

எளிதில் பழமையை உதறித் தள்ளினர். தமது பெயரையும் அவர் மாற்றிக் கொண்டார். ஹீன்ரிச் மார்க்ஸ் என்னும் புதிய பெயரை அவர் ஸ்வீகரித்தார். புதிய உருவில் அவர் வெளி வந்ததும், புதிய மனிதர்களுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. தொழிலிலும் அவருக்கு வெற்றி கிடைத்தது. எனவே, வாழ்க்கைச் சக்கரம் இன்பமாகச் சுழன்றது. அப்பொழுது (1816 ல்) யூதர் எதிர்ப்புச் சட்டம் அமுலுக்கு வந்தது. யூதர் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது என்பது இதன் பொருள். ஹீன்ரிச் மார்க்ஸ் யூதர் ஆசாரங்களை அனுஷ்டிக்கவில்லை என்றாலும், புதிய சட்டம் அவரையும் விடவில்லை. ஏன்? அவர் யூதர் வகுப்பில் பிறந்தவர்! அவர் வாழ்க்கை பாழாயிற்று.

ஹீன்ரிச் மார்க்ஸ் நன்கு கல்வி கற்றவர். வால்தேர், காந்த் முதலியோரை அவர் ஏற்றிப் போற்றினர். அவர் மன்னர் ஆட்சியை ஆதரித்தார். அவர் ஒரு ப்ரஷ்ய தேசிய வாதி.

நியாயமான சமூக அரசியல் சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவது, நீதி நெறி தவருத மன்னன் கடமை என்று ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினர் ஹீன்ரிச். அவ்வளவுதான். தேச பக்தர்களை வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்ட போலீசார் திருஷ்டி அவர் மீது விழுந்தது. இந்தச் சம்பவம் நடந்த பொழுது காரல் மார்க்சுக்கு வயது பதினறு.

காரல் மார்க்சின் புத்திக் கூர்மையையும், பெருமையையும் ஹீன்ரிச் உணர்ந்தார். வியக்கத் தக்க அறிவு, சுயேச்சையில் விருப்பம், ஆராய்ச்சியில் ஆர்வம், சிந்தனையில் தெளிவு முதலிய அரும் குணங்கள் மார்க்சிடம் குடிகொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார் தந்தை. அதே சமயத்தில் இது தந்தைக்குக் கவலையையும் அளித்தது. ஏனெனில், மேற்கூறிய அரும் குணங்கள் படைத்த மார்க்ஸ் எதிர் காலத்தில் சொல்லொணுக் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவிக்க நேரும் என்று ஹீன்ரிச் கருதினர். எனவே, உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும்படியும், அடக்கத்துடன் நடக்கும்படியும் அவர் மார்க்சுக்கு ஓயாது உபதேசம் செய்தார்.

மார்க்ஸை ஹிருதய பூர்வமாக நேசித்தார் ஹீன்ரிச். தமது புதல்வன் எதிர்காலத்தில் இன்பமாக வாழவேண்டும் என்பது தந்தையின் ஆசை. அவர் நிம்மதியான, சாதாரண வாழ்க்கையை இன்பமான வாழ்க்கையாக மதித்தார். ஆனால், புரட்சி வாழ்க்கைதான் இன்பம் கொஞ்சும் வாழ்க்கை என்று மார்க்ஸ் கருதினர். 1838 ஆம் வருஷம் ஹீன்ரிச் இறந்தார்.

காரல் மார்க்சின் வளர்ச்சியில் ஹீன்ரிச் அதிகக் கவனம் செலுத்தினர். ஹீன்ரிச் அறிவியல் வாதி என்று கூறினேம். இயற்கையில் மனிதன் நல்லவன் என்பது அவர் முடிவு. ஆனால், இந்த அம்சம் தலை தூக்காமல் இருப்பதற்குக் காரணம் இயற்கைக்கு முரண்பட்ட தடைகள் சமூகத்தில் ஏற்பட்டதுதான் என்பது அவர் தீர்ப்பு. இயறகைக்கு முரண்பட்ட தடைகள் நீங்கினல் மனிதன் உயருவான் என்று அவர் கருதினர். இது அந்தக் கால முதலாளிகளின் வேதாந்தம்.

ஆனல், மார்க்சின் வழி வேறு. அவர் விஞ்ஞானி. சமூக இயக்க விதிகளை அவர் நம்பினர். சமூகம் அபிவிருத்தி யற்றுத் தேங்கி நிற்காதென்றும், சமூகம் அபிவிருத்தி அடையுமென்றும், உற்பத்தி முறை மாறும் பொழுது சமூகம் ஒரு நிலையிலிருந்து இன்னெரு நிலைக்குத் தாவுவது வளர்ச்சியின் அறிகுறியென்றும் மார்க்ஸ் கருதினர். இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியை மார்க்ஸ் நம்பவில்லை. அவர் எண்ணத்தை ஹெகலிஸம் ஆட்கொண்ட காலம் ஒன்றிருந்தது என்ருலும், அவர் என்றும் ஹெகலின் மானசிக வாதத்திற்கு அடிமைப்படவில்லை. "மனம் முந்தினதா, ஜடம் முந்தினதா" என்னும் கேள்வி அன்று சிந்தனையாளர்களை உலுக்கிக் குலுக்கிக் கொண்டிருந்தது. மனம்தான் முந்தினது என்பது மானசிக வாதிகள் முடிவு; ஜடம்தான் முந்தினது என்பது லோகாயத வாதிகள் தீர்ப்பு. பின் கூறப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர் மார்க்ஸ்.

1837 ஆம் வருடம் காரல் மார்க்ஸ் வெஸ்ட்பாலன் புதல்வியை மணந்தார். வெஸ்ட்பாலன் மார்க்சின் வளர்ச்சியில் கருத்துள்ளவர். மார்க்சின் திறமை வெஸ்ட்பாலனை

ஆகர்ஷித்தது. எனவே, இவ்விரு குடும்பங்களின் சமூக அந்தஸ்து மாறுபட்டிருந்தும், வெஸ்ட்பாலன் தமது அருமைப் புதல்வியை மகிழ்ச்சியுடன் மார்க்சிடம் ஒப்படைத்தார். இளம் தம்பதிகள் கை கோத்துக் கொண்டு கரடுமுரடான வாழ்க்கைப் பிரயாணத்தை ஆரம்பித்தனர்.

பதினேழாவது வயதில் மார்க்சின் ஆரம்பப் படிப்பு முடிந்தது. தந்தையின் யோசனைக் கிணங்க அவர் 1835 ஆம் வருடம் போன் சட்ட கலாசாலையில் சேர்ந்தார். சர்வ கலாசாலையில் அவர் படிப்பில் மாத்திரம் கவனம் செலுத்தவில்லை. சர்வ கலாசாலை சங்கத்தில் மார்க்ஸ் அங்கத்தினராகச் சேர்ந்தார். அந்தக் காலத்தில் அவர் பல பாக்கள் யாத்தார். கட்டுரைகள் எழுதினார். கலகம் செய்ததற்காக அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர். 1836 ஆம் வருடம் கலாசாலைப் படிப்பு முடிந்தது. அந்த வருடம் உயர்தரக் கல்வி கற்க அவர் பெர்லினுக்குச் சென்றார்.

பெர்லின் வாழ்க்கை மார்க்சின் போக்கில் மாற்றத்தை உண்டுபண்ணிற்று. அதுவரையில் அவர் கிராமத்தில் வாழ்ந்தார். அன்று ஐரோப்பாவை அசைத்த புரட்சிப் புயல் ட்ரியரில் எத்தகைய மாற்றத்தையும் உண்டுபண்ணவில்லை. யந்திரப் புரட்சி ட்ரியரில் ஏற்படவில்லை. புதிய சமூக, பொருளாதாரப் பிரச்னைகளில் ட்ரியரில் இருந்த அறிஞர்கள் கவனம் செலுத்தவில்லை. சமூக அமைப்பை மாற்ற வேண்டிய அவசியத்தை அவர்கள் உணரவில்லை. உலக ஓட்டப் பந்தயத்தில் தங்களுக்கும் ஒரு ஸ்தானம் உண்டு என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. உண்மையில், அவர்கள் பழமையில் நெளிந்தனர். மாற்றத்தைப் பற்றி மனத்தினால்கூட நினைக்காது பதினெட்டாம் நூற்றாண்டைக் கடந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரவேசித்தது ட்ரியர். ஆனால், பெர்லின் நிலை வேறு. பெர்லின் ஆளும் வர்க்கத்தின் தலைநகரம். அங்கே பல புரட்சிக்காரர்களும், சுயேச்சைச் சிந்தனையாளர்களும், மனிதாபிமானிகளும், தத்துவ ஞானிகளும் வசித்தனர். பிரான்சில் சுடர்விட்டு எரிந்த சுதந்திர விளக்கின் ஒளி பெர்லினிலும் வீசிற்று. மன்னர் ஆட்சியை ஒழிக்க ஒரு

கூட்டம் இடைவிடாது வேலை செய்தது. மக்களை நசுக்க ஆளும் வர்க்கம் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த அதே சமயத்தில், ஆளும் வர்க்கத்தை அழித் தொழிக்கத் தேச பக்தர்கள் திட்டமிட்டனர். இளம் மார்க்ஸ் தம்மைச் சுற்றி இருக்கும் நிலைமையைக் கூர்ந்து கவனித்தார். அவர் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

மூன்றும் அத்தியாயம்

அன்று ஜெர்மன் தத்துவ ஞானிகள் குழம்பிய சிந்தனைக்கு அடிமைப்பட்டனர். ஜெர்மனியின் லோகாயத நிலையில் குடிகொண்டிருந்த குழப்பம் தத்துவத்தில் பிரதிபலித்தது. முதலாளித்வத்தின் பண்டிதர்களுக்கும், பிரபுத்வத்தின் பண்டிதர்களுக்கும் கொள்கைப் போர் நடந்தது. ஜெர்மன் பூர்ஷ்—வாக்களின் பலஹீனம் தத்துவத்தையும் பாதித்தது. எனினும், முதலாளித்வ சமூகத்திற்குப் பொருத்தமான ஒரு தத்துவத்தை ஹெகல் உருவகப்படுத்தினார்.

அது ஹெகலிஸத்தின் காலம். அந்தக் காலத்தில் அறிஞர்களும், மாணவர்களும் ஹெகலிஸத்தை அங்கீகரித்தனர். ஹெகலிஸம் குறைபாடுடைய தத்துவம் என்றாலும், அதில் புரட்சிகரமான அம்சங்களும் பொதிந்து கிடந்தன. வெளி உலகம், சிந்தனை ஆகியவைகளின் பொது நியதிகளை அவர் கண்டுபிடித்தார். ஆனால், அந்தப் புரட்சிகரமான அம்சத்தை அவர் சமூக ஆராய்ச்சிக்குப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. ஹெகல் கண்டு பிடித்த தர்க்கவியல் சாஸ்திரம் சமூக சரித்திரத்தையும், வெளி உலகத்தையும், நிகழ்ச்சிகளையும் புதிய திருஷ்டியுடன் பார்க்க உதவி புரிந்தது.

இயற்கையில் மனிதன் நல்லவனென்றும், பகுத்தறிவு படைத்த எல்லோரும் சம அந்தஸ்து உடையவர்கள் என்றும் தத்துவ ஞானிகளில் பலர் கருதினர். அறிவு தழைத்தால் ஜனங்களின் அகக்கண்கள் திறந்துவிடுமென்றும், ஒரு சிலரின் சுக வாழ்விற்காக மதத்தின் பெயரிலும், மன்னனின் தெய்வீக உரிமையின் பெயரிலும், தனிச் சொத்துரிமையின் பெயரிலும் முதலாளித்வம் மக்களை எவ்வாறு சுரண்டுகிறது என்பதை எல்லோரும் உணருவார்களென்றும் அவர்கள் நம்பினர். ஆனால், அறிவு வளர்ச்சி புரட்சியை உண்டுபண்ணாது என்பதை அவர்கள் உணரவில்லை.

மனிதாபிமானம் சமூகத்தில் தலைகீழ் மாற்றத்தை உண்டு பண்ணாது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. அறிவில் ஏற்படும் புரட்சி தனிச் சொத்துரிமையை எவ்வாறு அழிக்கும் என்னும் கேள்விக்கும் அவர்கள் பதில் சொல்லவில்லை. தனிச் சொத்துரிமை மாற்ற முடியாத முறை என்று அவர்களில் பலர் கருதினர்.

ஆனால், அந்தப் பிரசாரத்தைக் கண்டு முதலாளிகள் நடு நடுங்கினர். எனவே, லோகாயத வாதத்திற்கு எதிராக ஒரு ஆத்மீக—தெய்விகத் தத்துவத்தை முதலாளிகளின் கூலிப் பண்டிதர்கள் சிருஷ்டித்தார்கள். இந்தத் தத்துவம் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டது. இந்த நம்பிக்கையை—ஆதாரமும், உபயோகமுமற்ற இந்த நம்பிக்கையை—ஜனங்களிடையே பலாத்காரத்தின் உதவியுடன் தான் நிலை நிறுத்த முடியும் என்பது முதலாளிகளுக்குத் தெரியும்.

அறிவைப் போன்று சுற்றுச் சார்பும் முக்கியமானது. மனிதனுடைய எதிர்காலத்தை முன்னதாகவே அறிய விரும்பினால், அவன் வாழும் உலகத்தையும், அதன் தன்மைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். மனிதன் இயற்கையின் அம்சம். மனிதன் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியால் நடத்தப்படவில்லை. மனித வாழ்க்கையை பௌதிகத் திருஷ்டியுடன்தான் ஆராய வேண்டும். இந்தக் கொள்கையை மெருகு படுத்தியவர் பிரெஞ்சு லோகாயத வாதி லா மெட்ரி. மனிதனை யந்திரத்துடன் அவர் ஒப்பிட்டார். அவர் கொள்கை உலகில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணிற்று. எனினும், ஹோல்பாக், என்சைக்ளோபீடியா ஆசிரியர்கள் முதலியோர் இந்தக் கொள்கையை ஆதரித்தனர். மனிதனுக்குப் பகுத்தறிவு இல்லையென்றால், அவனுக்கும் மிருகத்திற்கும் வித்தியாச மில்லை என்று லா மெட்ரி கருதினார்.

"கீழே விழும் கல் சிந்திக்க முடியுமானால், கீழே விழுவதற்குக் காரணம் தன் விருப்பம்தான் என்று அது கருதும்" என்கிறார் ஸ்பினோஸா. ஏனெனில், அது ஏன் கீழே விழுகிறது என்பது கல்லுக்குத் தெரியாது. இந்த நிலையில் அது வேறு என்னதான் நினைக்க முடியும்? அதே

போன்று, தன் நடத்தைக்கு இயற்கையான காரணம் என்ன என்பதை உணராத மனிதன் கல் நினைப்பதைப் போல் நினைக்கிறான். அறிவு இந்தப் பிரமையை நீக்கும். எனவே, லோகாயத வாதிகள், நாஸ்திகர்கள், சம்சய வாதிகள் முதலியோர் புதுமையைப் புகுத்தவும், வேதாந்திகள், மானசீக வாதிகள், ஆஸ்திகர்கள் முதலியோர் பழமையை நிலை நிறுத்தவும் உக்ரமாகப் போர் புரிந்தனர்.

தீவிர சிந்தனையாளர்கள் இயற்கையில் மனிதன் நல்லவன் என்று முடிவு செய்தார்கள்; எனவே, அறிவு பூர்வமான கல்வியின் மூலம் மனிதனைக் கஷ்டங்களிலிருந்து விடுவித்து விடலாமென்று கருதினர். அவர்களுக்குக் கெப்ளர், கலீலியோ, நியூட்டன், டெக்கார்டே ஆகியோர் அடைந்த வெற்றி ஊக்கமளித்தது. விஞ்ஞான ஆராய்ச்சிக்காக மேற் கூறியவர்கள் மேற்கொண்ட முறைகளை, தீவிர சிந்தனையாளர்கள் சமூக ஆராய்ச்சிக்காகப் பயன் படுத்திக்கொண்டனர்.

இந்த இயக்கத்தின் தந்தை என்று ஒரு தனி மனிதனைச் சொல்ல முடியுமானால் அது வால்தேராகத்தான் இருக்க முடியும். மன்னன் ஆட்சியையும், கத்தோலிக்க மதத்தையும் நிலை குலையச் செய்த பெருமை வால்தேரைச் சார்ந்தது. வால்தேரின் பெயருடன் பிணைபட்டுக் கிடக்கிறது சிந்திக்கும் சுதந்திரம். இவர் சிருஷ்டிதான் ரூஸோ. தனி விஷயங்களையும், சமூகப் பிரச்னைகளையும் சுயேச்சையாக ஆராய வேண்டுமென்னும் எண்ணம், எல்லா விஷயங்களையும் அறிவு என்னும் தராசில் நிறுத்துப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை மனித சமூகத்தில் இடம் பெற்றது. அறிவியல் சகாப்தம் அது.

அந்த நூற்றாண்டின் இறுதி வரையில் வளர்ந்து வந்த லோகாயத இயக்கத்தின் வளர்ச்சிக்கு எதிராக ஜெர்மனியில் மானசிக வாதம் உருவெடுத்தது. விஞ்ஞான ரீதியான லோகாயத வாதத்திற்குப் பதிலாக மானசிக வாதத்தை உலகிற்கு அளித்தது ஜெர்மனி.

மனிதன் இயற்கையின் ஒரு பகுதி என்றால், மனிதனுடைய நடவடிக்கைகளை நிர்வகிக்கும் சட்டங்கள்

எவை? மரணம் எவ்வாறு ஏற்படுகிறது? கோளங்கள் எவ்வாறு அசைகின்றன? மரங்கள் எவ்வாறு வளர்கின்றன? ஐஸ் தண்ணீராகவும், ஜலம் ஆவியாகவும் எவ்வாறு மாறுகின்றன? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியுமானல், மக்கள் ஏன் உண்ணுகின்றனர், உறங்குகின்றனர், காதலிக்கின்றனர், போர் புரிகின்றனர் என்பன போன்றவைகளை நம்மால் எளிதில் கண்டு பிடித்துவிட முடியும். இந்த உண்மை கண்டு பிடிக்கப்படாத வரையில் மனித சமூகத்தின் உண்மையான சரித்திரத்தை எழுத முடியாது என்று ஆரம்பகாலத் தத்துவ ஞானிகள் கருதினர். இந்த வாதத்தை நிராகரித்தார் ஹெகல். மனித சமூகத்தின் சரித்திரத்தை இந்தக் கண்ணேட்டத்துடன் பார்த்தால், அதனுல் மகத்தான தீங்கு விளையும் என்பது ஹெகல் கருத்து. சில குறுகின நியதிகளுக்குட்பட்டு சரித்திரம் எழுதினுல் உண்மையைத் திரித்துக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுமென்று ஹெகல் எண்ணினுர். லோகாயத திருஷ்டியால் சரித்திரத்தைப் பார்க்க வேண்டுமென்று ஹெகல் கூறினுர்.

உலக அரங்கத்தில் காரல் மார்க்ஸ் பிரவேசித்த பொழுது மேற்கூறிய கருத்துக்கள் சிந்தனையாளர் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன. மந்த உணர்ச்சியும், மிதமான போக்கும், தெளிவற்ற சிந்தனையும், மாறுபட்ட கருத்தும் அறிஞர்களை அசைத்தன. இந்தக் குழப்பத்திலிருந்து கரையேற யாரும் துணியவில்லை. இதற்குரிய வழியும் யாருக்கும் தெரியவில்லை. அறியாமையைவிட இது மிகப் பெரிய தீமை. அறியாமை ஒரு வழியில் தீமை என்ருல், முடிவற்ற சிந்தனை இன்னெரு வழியில் தீமை. குழப்பம் தீமைக்கு வழிகோலும். மார்க்ஸ் புதிய வழியைக் கண்டு பிடிக்க முடிவு செய்தார். அந்த வழி கரடுமுரடானது.

தத்துவத் துறையில் ஹெகல் ஒரு புரட்சியை உண்டு பண்ணினுர் என்பது உண்மைதான். ஆனுல், அவர் தத்துவம் என்னும் மாளிகையை மானசிகம் என்னும் அஸ்திவாரத்தின் மீது எழுப்பினுர். எனவே, அதனுல் நன்மையை விட, தீமைதான் அதிகமாயிற்று. சரித்திரத்

துடன் அவர் மானசிக வாதத்தை இணைத்ததால் அது பெருமை இழந்தது. ஆரம்ப காலத்தில் ஹெகலிஸம் மார்க்ஸையும் ஆகர்ஷித்தது. எனினும், மனித சமூகத்தின் தங்கு தடையற்ற வளர்ச்சிக்கு ஹெகலிஸம் முட்டுக்கட்டை என்பதை மார்க்ஸ் விரைவில் உணர்ந்தார். அன்று ஹெகலிஸம் பெருமையின் சிகரத்தில் வீற்றிருந்தது. எனவே, அதை வீழ்த்துவது அவ்வளவு எளிதான வேலையல்ல. ஆனால், அது வீழ்த்தப்பட வேண்டும். மானசிக வாதம் இடிந்து தகர வேண்டும். இந்தச் சிரமசாத்தியமான வேலையில் ஈடுபட மார்க்ஸ் முடிவு செய்தார். அவர் ஹெகலிஸத்தைக் கொண்டே ஹெகலிசத்தை வீழ்த்தினார்.

ஹெகல் முறையாகச் சரித்திரத்தையும், சுற்றுச் சார்பையும் ஆராய்ந்தாரெனினும் அவர் "பரிபூரண உண்மை" என்னும் பிற்போக்குக் கொள்கையில் அடைக்கலம் புகுந்தார். "பரிபூரண உண்மை" என்னும் தத்துவம் தவறானது. உலகம் மாறும் தன்மை உடையது, உலகிலுள்ள எல்லாம் மாறுகின்றன என்னும் உண்மையை இந்தக் கொள்கை நிராகரிக்கிறது. இந்த வாதம் ஹெகலை முதல்தரமான பிற்போக்காளராக்கிற்று. பிரஷ்ய முடியாட்சியை அவர் ஆதரித்ததற்கும், தர்க்கவியல் சாஸ்திரத்தை அவர் தவறாக உபயோகித்ததற்கும் காரணம் இதுதான்.

ஹெகலிஸம் சில அம்சங்களில் முற்போக்கானது. ஹெகலிஸம் கற்பிக்கும் வளர்ச்சி என்னும் தத்துவத்தை மேலும் விரிவுபடுத்தினால், அதன் உதவியுடன் சமூகப் பொருளாகச் சாஸ்திரத்தைத் திறம்பட ஆராயலாமென்று இளம் ஹெகலிஸ்டுகள் கருதினர். சமூக இயக்கத்தின் நியதியையும், தர்க்கவியலையும் ஹெகல் ஒப்புக்கொண்டார். "உண்மை அறிவு பூர்வமானது; அறிவு பூர்வமானது, உண்மையானது" என்னும் ஹெகலின் வாதத்தை யதாபூர்விகளும், இளம் ஹெகலிஸ்டுகளும் ஒப்புக்கொண்டனர். எதுவும் ஏக காலத்தில் தீமையாகவும், உண்மையாகவும் இருக்க முடியாது. ஏனெனில், எது உண்மையானதோ, அது நியாயமானது. உலக சரித்திரம் உலக நீதி. ஹெகலின் இந்தக் கருத்தை இரு சாராரும் அங்கீ

கரித்தனர். ஆனால், "அறிவு பூர்வமானது, உண்மை யானது" என்னும் இரண்டு சொற்களை வியாக்கியானம் செய்யும்பொழுது இரு பிரிவினரும் பிரிந்து நின்றனர்.

உண்மையானதுதான் அறிவு பூர்வமான தென்றும்' உண்மை நிலையை ஆதாரமாகக் கொண்டுதான் அறிவை அளக்க முடியுமென்றும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமூ கம் அடையும் நிலை அதன் உண்மையான தன்மையை விளக்கு மென்றும் யதாபூர்விகள் கருதினர். இதை மாற்ற விரும்புவது, அல்லது இதைத் திரித்துக்கூற முயலுவது தவறு என்பது யதாபூர்விகள் கருத்து. அப்படியானல், சமூக அமைப்பை மாற்ற முயலுவது கொடிய பாபம். ஜனங்களின் கழுத்தை நெரிக்கும் சமூக அமைப்பை மாற்ற முயலுவது மன்னிக்க முடியாத குற்றம். இந்தக் கருத்துப்படி அமுலில் இருக்கும் எல்லாம் நியாயமானவை. ஏனெனில், இயங்கும் எல்லாம் உண்மையானவை. வளர்ச் சிக்கும், புரட்சிக்கும் இந்தக் கொள்கை பெரிய முட்டுக் கட்டை. இந்தக் கொள்கையை மூன்ருவது வில்லியம் அங்கீகரித்ததற்குக் காரணம் இதுதான். இந்த வியாக்கி யானம் கொடுங்கோலாட்சியை வாழ்த்திற்று.

இளம் ஹெகலிஸ்டுகள், அறிவு பூர்வமானதுதான் உண்மையானது என்றனர். உண்மை சாச்வதமான தல்ல என்றும், மானசிக முறையில் அதை உண்மை என்று கூறுவது தவறென்றும் இளம் ஹெகலிஸ்டுகள் கருதினர். காலத்திலோ, அல்லது இடத்திலோ நிகழும் நிகழ்ச்சிகள் உண்மைக்கு ஈடாக முடியாதென்று ஹெகல் கூறியிருப்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர். எனவே, அறிவுக்கு ஒவ்வாதவைகளை நிராகரிக்க வேண்டு மென்பது இளம் ஹெகலிஸ்டுகள் வாதம். உதாரணமாக, முடி யாட்சி அறிவுக்குப் பொருந்தாத முறையாக இருந்தால், முடியாட்சி, வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக நின்ருல் அதை அழிக்க வேண்டும். அறிவு என்னும் உரை கல்லில் உண்மையை உரைக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழும் மக்களின் செய லையும், எண்ணத்தையும், அந்தக் காலத்தில் எல்லாவற்றி லும் பிரதிபலிக்கும் ஒரு சக்தியின் மூலம்தான் நிர்ண

பிக்க முடியுமென்று ஹெகல் கூறினர். இந்த வாதத்தை அழுத்தம் திருத்தமாகக் கண்டித்தார் மார்க்ஸ். ஏனெனில், லோகாயத வாதத்தை முன்னணிக்குக் கொண்டு வருவதற்குப் பதிலாக ஹெகல் மானசிக வாதத்தை முன்னணிக்குக் கொண்டு வந்தார்.

உலக நிகழ்ச்சிகளுக்கு அறிவு பூர்வமான, விஞ்ஞான ரீதியான காரணங்களைக் கண்டு பிடிப்பதுதான் புத்தி சாலித்தனம். இதுதான் மனித சமூகத்திற்குப் பிரயோஜனமாக இருக்கும். இதை விட்டுவிட்டு, மானசிக நிழலில் ஒண்ட நினைப்பது, லட்சியத்திற்குத் துரோகம் செய்வதாகும்.

மனித சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் தத்துவ ஞானிகளின் வேலை, சமூகப் புரட்சியை உண்டு பண்ணுவதுதான். உன்னத நோக்கத்தால் உந்தித் தள்ளப் பட்டு எவ்வாறு பிரெஞ்சு தேச பக்தர்கள் பழைய ஆட்சி முறையை ஒழித்தார்களோ, அதே போன்று ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களைத் தத்துவம் என்னும் சங்க நாதத்தால் எழுப்ப வேண்டுமென்பதை ஜெர்மன் தத்துவ ஞானிகள் ஒப்புக் கொண்டனர். ஆனால், அடிமைத் தளையை அறுத்தெறியப் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாதென்று அவர்கள் பிரசாரம் செய்தனர். நேரடியான போராட்டத்தில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக அவர்கள் எழுத்துப் போரில் ஈடுபட்டனர்.

ஹெகலிஸத்திற்குப் புதிய உருவம் கொடுக்க முயன்றனர் தத்துவ ஞானிகள். அதுவரையில் ஒரு தீமையற்ற தத்துவமாக ஹெகலிஸத்தை மதித்தனர், அதிகாரிகள். அந்த எண்ணம் மாறிற்று. ஹெகலிஸம் விரும்பத் தகாத தத்துவமாக மதிக்கப்பட்டது. எனவே, ஹெகலிஸ எதிர்ப்புப் போர் ஆரம்பமாயிற்று. ஹெகலின் எதிரியான ஷெல்லிங் ஹெகலிஸத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்தார்.

அன்று இளம் ஹெகலிஸ்டுகள் முன்னிருந்த வழிகள் இரண்டு: ஒன்று, அதிகாரிகளுக்கு அடிபணிவது; மற்றொன்று, லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் கொள்

கைப் போரில் ஈடுபடுவது. தீவிர வாதிகளில் பலர் பின் கூறப்பட்ட முறையை மேற்கொண்டனர்.

பெர்லின் சர்வ கலாசாலை ஹெகலிஸத்தின் கோட்டை யாக விளங்கிற்று. இளம் ஹெகலிஸ்டுகளும், யதாபூர்வி களும் அங்கே சொற்போர் நடத்தினர். காரல் மார்க்ஸ் இந்த யுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

ஹெகலிஸத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தார் மார்க்ஸ். நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு ஹெகலிஸம் குறைபாடுடையது, தவருனது என்பதை மார்க்ஸ் தெளி வாக உணர்ந்தார். ஆனல், ஹெகலிஸத்தைக் கண்டித்த துடன் அவர் நின்றுவிட வில்லை. வெறும் கண்டனத்தால் மாத்திரம் எந்த விதமான நன்மையும் ஏற்படாது. ஒரு முறையைக் கண்டித்தால், வேருரு முறையை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும். எனவே, குறைகள் நிறைந்த ஹெகலிஸத்திற்குப் பதிலாக வேருரு விஞ்ஞான ரீதியான முறையை மக்கள் முன் சமர்ப்பிக்க மார்க்ஸ் முடிவு செய் தார். இந்த முயற்சியில் அவர் உற்சாகத்துடன் ஈடுபட் டார். பல நாட்கள் இடைவிடாது வேலை செய்தார். எனவே, அவர் உடல் நலம் குன்றிற்று. அவர் ஹிருதயம் பலஹீனமாக இருந்தது. அவர் ஓய்வு பெற விரும்பினர். ஆனல், அவரால் சும்மா இருக்க முடியவில்லை. உடல் வலி குன்றி இருந்ததால் வேலை செய்யவும் முடியவில்லை. தந்தை மகனுக்கு உருக்கமான கடிதம் எழுதினர். உடம் பைக் கவனித்துக் கொள்ளும்படி உபதேசம் செய்தார். வாழ்க்கைப் பிரச்னைகளைக் கவனிக்க வேண்டிய சமயத் தில், தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் காலத்தை வீணுக்க வேண்டாமென்று தந்தை மகனுக்கு யோசனை கூறினர். ஆனல், மார்க்ஸ் சும்மா இருக்கவில்லை. பல புத்தகங்களை அவர் படித்தார்; இரவும் பகலும் அவர் படித்தார். அந்தக் காலத்தில் அவர் ப்ரூனே, எட்கர், பாயர், மாக்ஸ் முதலிய அறிஞர்களைச் சந்தித்தார்.

சர்க்காரை, ஹெகல் குடும்பம், சமூகம் ஆகிய இரு பிரிவுகளாகப் பிரித்தார். ("நியதியின் தத்துவம்") சமூக, பொருளாதார உறவுகள்தான் சமூகத்தின் முதுகெலும்பு என்பது ஹெகல் முடிவு. இந்த முடிவை மார்க்ஸ் நிரா

கரிக்கிறார். சமூக சாஸ்திரத்தின் ஒரு பிரிவுதான் அரசியல் என்பது மார்க்ஸ் முடிவு. சர்க்காருக்கு முந்தினது சமூகம் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். "நியதியின் தத்துவத்தையும், ஹெகலின் தத்துவத்தையும் இது தெளிவுப் படுத்துகிறது" என்றார் மார்க்ஸ்.

எண்ணத்திற்கு ஹெகல் முதலிடம் அளித்தார். ஆனால், மார்க்ஸ் லோகாயத உலகத்திற்கு முதலிடம் அளித்தார். "லோகாயத உலகை மனிதன் மனம் கிரகித்து, அதைச் சிந்தனை வடிவமாக மாற்றுவதுதான் எண்ணம். ஹெகல் தலைகீழாக நிற்கிறார். அவரைக் காலில் நிற்கும்படி செய்ய வேண்டும்" என்றார் மார்க்ஸ். ("மூலதனம்") இந்த வேலையில் மார்க்ஸ் ஈடுபட்டார். ஹெகலிஸத்தைச் சூழ்ந்து நிற்கும் மானசிகத் திரையைக் கிழித்து எறிந்துவிட்டு, ஹெகலிஸத்தின் நல்ல அம்சங்களை விரிவு படுத்த மார்க்ஸ் முடிவு செய்தார். "நமக்கு முந்தின தத்துவ ஞானிகள் உலகத்தை வியாக்கியானம் செய்தனர். ஆனால், தத்துவ ஞானிகளின் உண்மையான வேலை உலகத்தை மாற்றுவதுதான்" என்றார் மார்க்ஸ்.

சட்டப் படிப்பை நிறுத்தினார் மார்க்ஸ். பிறகு, முழு நேரத்தையும் தத்துவ ஆராய்ச்சியில் கழித்தார். சர்வ கலாசாலையில் ஆசிரியராக வேலை செய்ய மார்க்ஸ் முதலில் ஆசைப்பட்டார். ஆனால், இந்த எண்ணம் ஈடேற வில்லை.

பெர்லின் சர்வ கலாசாலையில் மார்க்ஸ் படித்துக் கொண்டிருந்த காலத்தில், ஜெர்மன் சிந்தனையாளர்கள் மனத் தளர்ச்சியால் வாடினர். 1840 ஆம் வருடம் புதிய மன்னர் பட்டத்திற்கு வந்தார். அவர் ஆட்சி முற்போக்கானதாக இருக்குமென்று சிலர் கருதினர். தேச பக்தி, ஜனநாயகத் தத்துவங்கள், மன்னராட்சி முதலியவைகளை ஒன்றாக இணைக்க வேண்டுமென்றும், புதிய ஆட்சி முறை அமுலுக்கு வர வேண்டுமென்றும், புதிய மன்னர் பட்டத்திற்கு வருமுன் பன்முறை கூறினர். ஆனால், அவர் அதிகாரத்திற்கு வந்த அதே நிமிடம் இவைகளை மறந்தார். இது இயற்கை. இந்தக் கொள்கைகளுக்கும், முடியாட்

சிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. பழைய ஆட்சிமுறை தொடர்ந்தது. ஜனங்கள் கொதித்தனர்.

ஜெர்மனியில் தொழிற்சாலைகள் பெருகின. தொழிற் சாலை முதலாளிகளையும், பாங்கர்களையும் கட்டுப்படுத்தப் பிரபுத்வ ஆட்சிமுறை "பகீரதப் பிரயத்தனம்" செய்தது. ஆனால், இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. முதலாளி கள் வளர்ந்தனர். பிரபுத்வ சகாப்தம் முடிவுக்கு வரு கிறது என்பதை இது அறிவுறுத்துகிறது. எனவே, நிலச் சுவான்தார்கள் கலங்கினர்.

அவரும் பாயரும் அரை குறையான தத்துவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்தனர். அவர்கள் இரு வரும் மானசிக வாதத்தைக் கண்டித்து ஒரு புத்தகம் எழுதினார்கள்.

அந்தக் காலத்தில் மார்க்ஸ் கவிதைகள் புனைவதிலும் கவனம் செலுத்தினார். அந்தப் பாக்களை அவர் ஜென்னி வெஸ்ட்பாலனுக்குச் (மனைவிக்கு) சமர்ப்பித்தார்.

மார்க்ஸ் எங்கே போகிறார் என்பதைத் தெளிவாக உணர்ந்தார் தந்தை. மார்க்ஸ் செல்லும் பாதை கரடு முரடானது என்பது தந்தைக்குத் தெரியும். பிற்போக் காளர்களை எதிர்த்துப் போராடுவதும், ஹெகலிஸத்தை எதிர்ப்பதும், சமூக அமைப்பை மாற்றுவதும் எளிதான வேலைகளல்ல என்பது ஹீன்ரிச்சுக்குத் தெரியும். எனவே, இந்த வேலைகளில் ஈடுபடாமலிருக்கும்படி அவர் மார்க்ஸை வேண்டினார்.

மார்க்சுக்கு வயது இருபத்து நான்கு. அன்று அவர் ஒரு முதிர்ந்த தத்துவ ஞானியாக விளங்கினார். அறிஞர் கள் அவரை மதித்தனர்—ஏற்றிப் போற்றினர். விஷயங் களை மார்க்ஸ் சொல்லும்முறை எல்லோரையும் ஆகர்ஷித் தது. விஷயங்களை வரிசைக் கிரமமாக விளக்குவதில் மார்க்சுக்கு இணை மார்க்ஸ்தான். எளிய நடையில், பாமர ருக்கும் விளங்கும்படி மார்க்ஸ் எழுதினார். எழுத்திலும் அவர் புரட்சியை உண்டுபண்ணினார். அதுவரையில் சாதாரண மனிதனுக்கு விளங்காத பாஷையில் தத்துவ ஞானிகள் எழுதினார்கள், பேசினார்கள். அந்தச் சம்பிர

தாயத்தை மார்க்ஸ் திரும்பியும் பார்க்கவில்லை. அவர் சாதாரண மனிதனுக்கும் விளங்கும் பாஷையில், ஜீவ நடையில் எழுதினார், பேசினார். அந்தக் காலத்தில் தத்துவ ஞானத்திற்கு ஜெர்மனியில் எத்தகைய ஸ்தானம் இருந்தது என்பதை மார்க்ஸ் கீழ் வருமாறு வர்ணிக்கிறார் :

"...நமது லட்சிய வாதிகளின் கருத்துப்படி கடந்த பத்து வருடங்களில் ஜெர்மனியில் ஒரு ஒப்பு உவமையற்ற புரட்சி நடந்திருக்கிறது...இந்தப் புரட்சியுடன் பிரெஞ்சுப் புரட்சியை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, பிரெஞ்சுப் புரட்சி ஒரு விளையாட்டு...கடந்த நூற்றாண்டுகள் எல்லா வற்றையும்விட உக்ரமான ஒரு கட்டத்தைக் கடந்தது ஜெர்மனி...இந்த மூன்று வருடங்களில் (1842-45) நடந்த புரட்சி உண்மையில் சிந்தனை லோகத்தில் நடந்த புரட்சி என்பதை லட்சிய வாதிகள் மறந்தனர்.

"உயிரின் கடைசிச்சின்னம் உடலிலிருந்து பிரிந்ததும், தேகத்தின் உறுப்புகள் மாறுகின்றன. பரிபூரண மானசிக வாதத்தை ஆதாரமாகக்கொண்டு பிழைத்து வந்த தத்துவ ஞானிகள் புதிய நிலையைப் பரிசீலனை செய்தனர். எல்லோரும் தத்தம் வேலையைச் செய்தனர். இந்த வேலை போட்டியின்றி நடைபெறாது. முதலில் போட்டி நல்ல வர்த்தக அம்சங்களுடன் கண்ணியமாக நடந்தது. ஆனால், ஜெர்மன் மார்க்கெட்டுகளிலும், உலக மார்க்கெட்டுகளிலும் இந்தச் சரக்கு இல்லாது போகவே, மட்டச் சரக்காலும், கீழ்த்தரமான செயல்களாலும் போட்டி பாழ்பட்டது. பலமான போட்டி உக்ரமான போரில் முடிந்தது..."

மேற்கண்ட நிலை உலகில் குடிகொண்டிருந்த காலத்தில், மார்க்சின் வாழ்க்கையும் அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லை. அவர் தந்தை ஏழையாக இறந்தார். மார்க்சின் செலவுக்கு அதுவரையில் தந்தை பணம் அனுப்பினார். தந்தை இறந்த பிறகு உழைத்து உண்ணவேண்டிய அவசியம் மார்க்சுக்கு ஏற்பட்டது. அவர் என்ன வேலை செய்ய முடியும்? ஆசிரியர் வேலையில் அவருக்கு ஆசை. ஆனால், மார்க்ஸை ஆசிரியராக நியமிக்க அதிகாரிகள்

இசைய மாட்டார்கள். அதிகாரிகள் மார்க்சுக்கு உத்தியோகம் கொடுக்க மறுத்ததுடன் நிற்கவில்லை, "இடதுசாரி ஹெகலிஸத்தையே" நசுக்க அவர்கள் முடிவு செய்தனர். இந்த நிலையில் மார்க்சுக்கு உதவிபுரிய முன்வந்தார் மோஸஸ் ஹெஸ். அவர் தீவிர ஹெகலிஸ்டு. அவர் கொலோனில் வசித்தார். பிரபல சோஷலிஸ்டு எழுத்தாளர்களுடன் அவருக்குத் தொடர்பு இருந்தது. அரசியல் பிரச்னைகளைவிடப் பொருளாதாரப் பிரச்னைகள்தான் முக்கியமானவை என்றும், கூலிக்கு வேலைசெய்யும் சுயசிரம ஜீவிகள் சுதந்திரம் பெற்றால்தான் மனித சமூகம் அபிவிருத்தி அடையுமென்றும் ஹெஸ் கருதினார். கூலிக்கு வேலை செய்யும் வர்க்கம் அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கும்வரையில், புதிய உலகைச் சிருஷ்டிக்க அறிஞர்கள் செய்யும் முயற்சி பலன் தராது என்பது ஹெஸ் முடிவு. ஏனெனில், பொருளாதார வேற்றுமையை அனுமதிக்கும் சமூகத்தில் நீதிக்கு இடமிராது. தனிச்சொத்துரிமைதான் தீமைகளுக்கெல்லாம் காரணம். தனிச்சொத்துரிமையையும், தேசிய எல்லைகளையும் அழித்து, அறிவையும், கூட்டுறவுப் பொருளாதார முறையையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகத்தைச் சிருஷ்டிப்பதுதான் புது உலகத்தைச் சிருஷ்டிக்க விரும்புகிறவர்களின் கடமை என்று ஹெஸ் கருதினார். மார்க்ஸை நேரில் சந்தித்து, அவர் நீண்ட நேரம் விவாதித்தார். மார்க்சின் அறிவும், தெளிவும் அவரைக் கவர்ந்தன.

"இன்று உயிருடன் இருக்கும் தத்துவ ஞானிகளில் தலை சிறந்தவர் மார்க்ஸ். அதிவிரைவில் ஜெர்மனியின் திருஷ்டி அவர்மீது விழும். டாக்டர் மார்க்ஸ்—இதுதான் என் 'ஆதர்ச புருஷரின்' பெயர்—இளைஞர். (இவருக்கு இருபத்து நான்கு வயதிருக்கலாம்.) பிரபுத்வத்திற்கும், இற்றுப்போன அரசியல் முறைக்கும் இவர் விடை கொடுப்பார். பெரிய பிரச்னைகளை அநாயாசமாக, ஹாஸ்யமாக விளக்குகிறார் மார்க்ஸ். வால்தேர், ரூஸோ, ஹெய்ன், ஹெகல் ஆகியோர் ஒரு உருவெடுப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அதுதான் டாக்டர் மார்க்ஸ்" என்று தம் நண்பருக்கு மார்க்ஸைப்பற்றி எழுதினார் ஹெஸ்.

ஹெஸ் உணர்ச்சிக்கு உறைவிடம். அவர் பெரிய சிந்தனையாளரல்ல. ஆனால், நல்ல பிரசாரகர். பல வாலி பர்களை அவர் சோஷலிஸ்டுகளாக்கினர். அவர்களில் பிரடரிக் எங்கல்சும் ஒருவர்.

ஹெஸ் முதல்தரமான கிளர்ச்சிக்காரர். ரைன்லாந்தி லிருந்த சில மிதவாதத் தொழிற்சாலை அதிபர்களின் உதவி யுடன் அவர் ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். பெர்லின் சர்க்காரின் தவருன போக்கை அம்பலப்படுத்துவதும், பொருளாதாரப் பிரச்னைகளை விளக்குவதும், அரசியல் விடுதலைக்காகப் பாடுபடுவதும் அந்தப் பத்திரிகையின் நோக்கம். அந்தப் பத்திரிகையின் பெயர் 'ரீனிஷே ஸீடங்'!

அந்தப் பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதும்படி மார்க்ஸை வேண்டினர் ஹெஸ். மகிழ்ச்சியுடன் கட்டுரை கள் எழுத இசைந்தார் மார்க்ஸ். பத்து மாதத்தில் அந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரானர், மார்க்ஸ். அவர் ஆசிரியர் பதவியை ஏற்ற பிறகு 'ரீனிஷே ஸீடங்' தீவிர வாதத்தை ஆதரித்தது. தணிக்கை முறையையும், சட்ட சபையின் போக்கையும், நிலச் சுவான்தார்களின் அடக்கு முறையையும் 'ரீனிஷே ஸீடங்' இரக்கமின்றிக் கண்டித் தது. பத்திரிகையின் செல்வாக்கு அதிகரித்தது. விஷயங் களைப் புத்தம் புதிய முறையில் சொல்லுவதன் மூலம் மார்க்ஸ் பத்திரிகை உலகிலே ஒரு புரட்சியை உண்டு பண்ணினர். மார்க்சின் கட்டுரைகள் சர்க்காரின் கண் களை உறுத்தினலும் அதிகாரிகளால் அப்பொழுது ஒன் றும் செய்ய முடியவில்லை. ஏனெனில், மேற்கு மாகாணங் களை ப்ரஷ்ய சர்க்கார் அப்பொழுதுதான் ப்ரஷ்யாவுடன் இணைத்தது. எனவே, பொது ஜனங்களின் அன்புக்குப் பாத்திரமான பத்திரிகையை நசுக்கி, ஜனங்களின் ஆத் திரத்தைத் தூண்டிவிட, ப்ரஷ்ய சர்க்கார் விரும்பவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை மார்க்ஸ்பயன் படுத்திக்கொண்டார். அவர் ஜனங்களின் தினசரிப் பிரச்னைகளையும் முன்ன ணிக்குக்கொண்டு வந்தார். மோஸல் திராக்ஷைத் தோட் டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பரிதாப கரமான நிலையை அவர் அம்பலத்திற்குக்கொண்டு வந்தார். காட்டு மரங்களை உபயோகித்த குற்றத்திற்காக ஏழை

விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட மிருகத்தனமான தண்டனையை அவர் வன்மையாகக் கண்டித்தார். பிரபுத்வ சர்க்காரின் கேவலமான செயல்களை மார்க்ஸ் மக்களுக்குப் புட்டுக் காட்டினார். அவர் கட்டுரைகள் ப்ரஷ்ய சர்க்காரை உலுக்கிக் குலுக்கின. எனவே, சர்க்கார் செயலாற்ற முடிவு செய்தது. தணிக்கை அமுலுக்கு வந்தது. இதனால் எந்த விதமான பிரயோஜனமும் ஏற்படவில்லை. ஏனெனில், சாதாரண அறிவு படைத்த தணிக்கை அதிகாரிகளை மார்க்ஸ் எளிதில் ஏமாற்றினார். தணிக்கையைச் சிறிதும் சட்டை செய்யாமல் அவர் இடைவிடாது கிளர்ச்சி செய்தார். எனவே, தணிக்கை அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டனர். இதனால் கண்ட பலன் ஒன்றுமில்லை. இவ்வாறு மறைந்தது 1842 ஆம் வருடம். இந்த நாடகம் தொடர்ந்து நடந்திருக்கும். ஆனால், ருஷ்ய மன்னன் தலையீட்டால் இந்த நாடகம் முடிவுக்கு வந்தது.

அன்று கொடுமையின் உறைவிடமாக இருந்தது ருஷ்யா. ஜெர்மனியைப் போன்று ருஷ்யாவும் பிரபுத்வ சகாப்தத்தில் நெளிந்துகொண்டிருந்தது. நிலச் சுவான்தார்கள் விவசாயின்மீது தனியரசு செலுத்தினர். ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போன்று முதலாளித்வம் அங்கே தலை தூக்கவில்லை. உற்பத்தி சக்தி வளர்ச்சியற்றிருந்தது. ஆனால், ஜனங்கள் கொதிப்படைந்தனர். விவசாயிகள் பல இடங்களில் கிளர்ந்தெழுந்தனர்.

நிக்கோலாஸ் அறிவிக்குத் தாளிட முயன்றான். வெளிநாட்டுச் செய்திகள் தணிக்கை செய்யப்பட்டன. கரை புரண்டு ஓடும் பெரு வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த நிக்கோலாஸ் முயன்றார். முதலாவது நிக்கோலாசின் ஆட்சியைக் கண்டித்து மார்க்ஸ் ஒரு கட்டுரை எழுதினார். இந்தக் கட்டுரையைப் படிக்கும் அதிர்ஷ்டம் நிக்கோலாசுக்குக் கிடைத்தது! அவர் கோபத்தால் துடித்தார். அந்தக் கட்டுரையைப் பிரசுரித்த பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்கும்படி அவர் ப்ரஷ்ய சர்க்காரைக் கேட்டுக்கொண்டார். ஜெர்மன்—ருஷ்ய நேச உடன்படிக்கை அப்பொழுது அமுலில் இருந்ததால், 1845 ஆம் வருடம் 'ரீனிஷே ஸீடங்' மீது தடை விதித்தது ஜெர்மன் சர்க்

கார். அந்த ஒரு வருடத்தில் மார்க்சின் புகழ் ஐரோப்பா முழுதும் பரவிற்று.

படிப்பில் மார்க்சுக்கு அளவு கடந்த ஆசை. பிரான்சின் சரித்திரத்தையும், ஜெர்மனியின் சரித்திரத்தையும் அவர் கவனமாகப் படித்தார். ஹெகலிஸத்தில் பொதிந்து கிடக்கும் புரட்சிகரமான அம்சங்களையும், பிற்போக்கு அம்சங்களையும் தர்க்க ரீதியாக விளக்கப் போதிய ஆதாரங்களை அவர் சேகரித்தார். அந்த வருடம் வெளி வந்தது பியுவர்பாக் எழுதின 'கிறிஸ்தவ மதத்தின் சாரம்,' விமர்சனத்திற்காக இந்தப் புத்தகத்தை ரூகி மார்க்சுக்கு அனுப்பினர்.

பியுவர்பாக் தீவிர வாதியல்ல; உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் நடையில் எழுதும் ஆற்றல் பெற்ற எழுத்தாளரும் அல்ல. ஆனல், அவர் லோகாயத வாதி. பியுவர்பாக்கின் புத்தகம் வெளி வந்தபொழுது அழிந்து கொண்டிருந்த மானசிக வாதத்திற்கு எதிராக மார்க்சின் உள்ளத்தில் ஒரு புயல் வீசிக்கொண் டிருந்தது.

சரித்திரத்தின் நோக்கம் ஆத்மார்த்திக மல்லவென்றும், ஒரு குறிப்பிட்ட காலத்தின் லோகாயத நிலையை விளக்குவதுதான் சரித்திரத்தின் நோக்கமென்றும் பியுவர்பாக் கூறினர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழும் மனிதனுக்குச் சிந்திக்கவும், செயலாற்றவும் லோகாயத நிலைதான் சக்தி அளிக்கிறது. ஆனல், ஆத்மார்த்திக வாதம் ஜனங்களை வேறு பக்கம் இழுத்துச் செல்லுகிறது. துன்பம் "மேல் உலக வாழ்க்கையை" நம்பும்படி ஜனங்களைத் தூண்டுகிறது. இந்த உலகத்தில் துன்பம் அனுபவிப்பவர்கள் மேல் உலகில் பேரின்பம் அடைவார்கள் என்னும் நம்பிக்கை ஜனங்களுக்குச் சிறிது மனச் சாந்தி அளிக்கிறது. இந்த மனப் பிரேமை ஒழிய வேண்டுமாயின், அது ஏன் எழுந்தது என்பதைத் தெளிவாக விளக்க வேண்டும். எனவே, பௌதிக சாஸ்திரத்தின் உதவியுடன் பியுவர்பாக் விஷயங்களை விளக்கினர். "எதை மனிதன் உட்கொள்ளுகிருனே, அதனல் அவன் ஆக்கப்படுகிருன்" என்றார் பியுவர்பாக். பௌதிக சுற்றுச் சார்பு மனிதனை

எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்குவதுதான் சரித்திரத்தின் நோக்கம் என்பது பியுவர்பாக்கின் முடிவு. எனவே, பௌதிக நியதிகளைத் தெரிந்துகொள்ளுவதன் மூலம்தான் மனிதன் அந்தச் சக்திகளின் யஜமானன் ஆக முடியுமென்றும், அவ்வாறு செய்தால்தான் அவைகளுக்குத் தகுந்தவாறு மனிதன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியுமென்றும் அவர் கருதினர்.

பியுவர்பாக்கின் லோகாயத வாதமும், துன்பங்களை மறைப்பதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டவை மதம், தத்துவம் முதலியன என்னும் முடிவும் மார்க்ஸைப் பெரிதும் கவர்ந்தது. எல்லா விஷயங்களையும் பியுவர்பாக் தெளிவாக ஆராயவில்லை என்றாலும் அவர் புத்தகம் பெரும் பரபரப்பை உண்டு பண்ணிற்று. "இந்தப் புத்தகத்தை எல்லோரும் உற்சாகத்துடன் வரவேற்றனர். நாங்கள் எல்லோரும் பியுவர்பாக்கின் கொள்கையைப் பின்பற்றுவோராக மாறினோம். இந்த நூல் குறைபாடுடையதாக இருப்பினும் மார்க்ஸ் இதை உற்சாகத்துடன் வரவேற்றார்" என்கிறார் ஏங்கல்ஸ்.

பியுவர்பாக் மதத்தின் தத்துவத்திற்கு வந்ததும், மானசிக வாதியாகமாறி விடுகிறார். "அவர் மதத்தை அழிக்க விரும்பவில்லை; ஆனால், அதைப் புனிதமாக்க விரும்புகிறார்" என்கிறார் ஏங்கல்ஸ். ("லட்விக் பியுவர்பாக்") "மதத்தில் ஏற்படும் மாற்றங்களால்தான் மனித சமூகத்தின் காலத்தை அறிகிறோம். மனிதன் ஹிருதயத்தில் வேரூன்றும் பொழுதுதான் சரித்திர அசைவு முக்கியத்வம் பெறுகிறது. ஹிருதயம் மதத்தின் வடிவமல்ல...மதத்தின் சாரம் ஹிருதயம்" என்கிறார் பியுவர்பாக். இந்த வாதம் தவறு. சரித்திர அசைவு மதத்தில் ஏற்படும் மாற்றத்தால்தான் ஏற்படுகிறது என்று கூறுவது அசட்டுத்தனமாகும். ஹெகலிஸத்திலுள்ள குறைகளைப் பகிரங்கப்படுத்தி, ஹெகலைவிட ஒரு படி முன் சென்ற பியுவர்பாக், லோகாயத வாதியாக விளங்கின பியுவர்பாக், மானசிக வாதியாக மாறினதேன்? "அன்று ஜெர்மனியில் குடிகொண்டிருந்த நிலைதான் இதற்குக் காரணம். இந்த நிலை அவரைச் சீர்குலையச் செய்தது" என்கிறார் ஏங்கல்ஸ்.

1845 ஆம் வருடம் பியுவர்பாக் செய்த தவறுகளை விளக்கி ஒரு நூல் எழுத மார்க்ஸ் முடிவு செய்தார். அதற்காக அவர் குறிப்புகளும் எழுதினார். ஆனால், மார்க்சின் வாழ்க்கையில் ஏற்பட்ட சில சம்பவங்களால், இந்த வேலை பூர்த்தியாகவில்லை.

1843 ஆம் வருடம் ஜென்னி வெஸ்ட்பாலன், மார்க்ஸை மணந்தாள். ஜென்னிக்குப் புதிய உலகத்தைக் காட்டினார் மார்க்ஸ். இருவரும் கை கோத்துக் கொண்டு அந்தப் புதிய உலகத்தை நோக்கி இன்பத்துடன் நடந்தனர்.

"இந்தத் திருமணம் சிறப்பு வாய்ந்தது. ஜென்னி, மார்க்ஸை ஹிருதய பூர்வமாகக் காதலித்தாள்; அவரைப் போற்றினாள்; அவரை நம்பினாள். அறிவு, உணர்ச்சி முதலியவை சம்பந்தப்பட்ட வரையில் ஜென்னி, மார்க்சின் 'அடிமை.' நெருக்கடியான காலத்திலும், துன்பம் வாட்டி வதக்கின காலத்திலும் மார்க்ஸ் அவள் மீது சாய்ந்தார். தமது அந்திய காலம் வரையில் மார்க்ஸ் ஜென்னியைப் போற்றிப் புகழ்ந்தார்; அவள் அறிவையும், அழகையும் பெருமையுடன் வர்ணித்தார். பாரிஸில் அவர்களுடன் நெருங்கிப் பழகின ஒரு நண்பர் அந்த அம்மையாரின் பெருந்தன்மையையும், நகைச் சுவையையும் பெரிதும் புகழ்ந்தார். பிற்காலத்தில் வறுமை மார்க்ஸை வாட்டி வதக்கினபொழுது அந்த அம்மையார் வியக்கத்தக்க மனோதிடத்துடன் குடும்பத்தை நிர்வகித்தார்" என்கிறார் பெர்லின்.

ஜெர்மனியில் அவர் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டது. பேச்சுச் சுதந்திரம் பறி போயிற்று. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. எனவே, மார்க்ஸ் பாரிஸுக்குச் செல்ல முடிவு செய்தார்.

அந்தக் காலத்தில் ஆர்னல்ட் ரூச் என்னும் ஸாக்ஸோனிப் பத்திரிகைக்காரருடன் மார்க்சுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் பத்திரிகைக்கு மார்க்ஸ் கட்டுரைகள் எழுதினார். ரூச் அன்று தீவிர வாதி. (1848 ஆம் வருடம் நடந்த புரட்சிக்குப் பிறகு ரூச் பிற்போக்காளராக மாறினார்) மார்க்ஸ், பக்கூனின் போன்ற பிரபலஸ்தர்களை அவர்

பெரிதும் நேசித்தார். தணிக்கையும், போலீசார் கண்காணிப்பும் சகிக்க முடியவில்லை. எனவே, நீண்ட காலம் ஜெர்மனியில் அவரால் பத்திரிகை நடத்த முடியவில்லை. அவர் பத்திரிகாலயத்தைப் பாரிஸுக்கு மாற்றினார். புதிய பெயருடன் தாம் ஆரம்பிக்கும் பத்திரிகைக்குத் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் எழுதும்படி அவர் மார்க்ஸை வேண்டினார். இந்த வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் அங்கீகரித்தார் மார்க்ஸ்.

"இங்குள்ள நிலையைச் சகிக்க முடியவில்லை. வாளுக்குப் பதிலாகக் குண்டூசியைக் கையிலேந்த முடியாது. சுதந்திரத்தின் பெயரில் கூட அதிகாரிகளுக்குத் தலை வணங்க இசைவது எளிதல்ல. இந்தக் கபட நாடகமும், மூடத்தனமும், அதிகாரிகளின் வெறுக்கத்தக்க போக்கும் எனக்குச் சலிப்பைத் தருகின்றன. தலை வணங்குவதையும், கெஞ்சுவதையும், தீமையற்ற சொற்றொடர்களையும் நான் பெரிதும் வெறுக்கிறேன். ஜெர்மனியில் தற்பொழுது நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. இன்றுள்ள நிலையில் ஜெர்மனியில் தன்னைத் தான் ஏமாற்றிக் கொள்கிறவன் தான் வாழ முடியும்" என்று மார்க்ஸ் ரூச்சுக்கு எழுதினார்.

மார்க்ஸ் பாரிஸுக்குச் சென்றார். அன்று பிரபல எழுத்தாளராக மார்க்ஸ் மதிக்கப்பட்டார். ஜனநாயகத்தை ஆதரித்து அவர் கட்டுரைகள் எழுதினதுதான் ஜெர்மனியிலிருந்து அவர் நாடு கடத்தப்பட்டதற்குக் காரணமென்று பலர் கருதினர். ஆனால்; இரண்டு வருடங்களுக்குப் பிறகு, கம்யூனிஸ்டு புரட்சிக்காரரென்றும், சர்வ தேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் தலைவரென்றும் பல நாட்டுப் போலீஸ் தஸ்தாவேஜீகள் அவரை வர்ணித்தன. அந்த இரண்டு வருடங்கள் (1843-45) அவர் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயித்த வருடங்கள். பாரிஸில் அவர் அறிவுப் பரீக்ஷையில் முடிவாகத் தேறினார்.

மார்க்ஸ் சாகஸத்தைநாடி பாரிஸுக்குச்செல்லவில்லை. அவர் என்றும் உணர்ச்சியை அதன் போக்கில் விடவில்லை. சுற்றுச் சார்புக்கும் அவர் அடிமையாக மாட்டார். அன்று புலவர் ஹெயினும், ஹெர்ஸன், பக்கூனின் முதலிய புரட்சிக்காரர்களும் பாரிஸில் வாழ்ந்தனர். சுதந்திரக் காற்றுப்

பாரிஸில் வீசுவதாக அவர்கள் மனப்பால் குடித்தனர். ஆனால், மார்க்ஸ் அவ்வாறு கருதவில்லை. உண்மையில் பிரான்ஸ் விடுதலை பெறவில்லை என்பது மார்க்ஸ் அபிப்பிராயம். ஜனங்களின் ஆட்சி பாரிஸில் மலரவில்லை. ஒரு கொடுங்கோன்மையை வீழ்த்தின ஜனங்கள், வேறொரு கொடுங் கோன்மைக்கு இலக்காயினர். உண்மையான சுதந்திரம் பிறக்க வேண்டுமானால், சமூகத்திலுள்ள தாறு மாறுகள் நீங்க வேண்டும் என்பது மார்க்ஸ் தீர்ப்பு. சமூகப் புரட்சியின் மூலம்தான் சமூகத்தைப் பிணைத்திருக்கும் அடிமைச் சங்கிலியை உடைத்தெறிய முடியும் என்பது மார்க்ஸ் ஆராய்ந்து தேர்ந்த முடிவு.

அன்று மனித சமூகத்தை உலுக்கிக் குலுக்கின ஒரு கேள்விக்கு விஞ்ஞான ரீதியான பதில் கண்டுபிடிக்க முயன்றுகொண்டிருந்தார் மார்க்ஸ். அந்தக் கேள்விக்கு "என்சைக்ளோபீடியா" ஆசிரியர்களாலோ, ஹெகலாலோ, பியுவர்பாக்காலோ விடை கண்டுபிடிக்க முடியவில்லை. அந்தக் கேள்வி என்ன? மனிதனுக்குத் துன்பம் விளைவிக்கும் முதலாளித்வ முறையை எவ்வாறு மாற்றுவது? புதிய சமூகத்தை எந்த அஸ்திவாரத்தின் மீது அமைப்பது? புதிய உலகைச் சமைப்பதற்கு மக்கள் என்ன செய்ய வேண்டும்? ஒருவராலும் விடை கண்டுபிடிக்க முடியாத இந்தக் கேள்விக்கு மார்க்ஸ் விடை கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. எனவே, அவர் எல்லா அரசியல் நூல்களையும், சரித்திர நூல்களையும், பொருளாதார நூல்களையும் படித்தார்.

பிரஞ்சுப் புரட்சி ஏன் தோல்வி அடைந்தது? முதலாளித்வ ஆட்சி ஏன் மீண்டும் தலையெடுத்தது? சமூகத்தையும், சமூக மாற்றங்களையும் நிர்வகிக்கும் நியதிகள் எவை? மக்கள் அறிவு தெளிவடைந்தால் மனித சமூகம் தழைக்கும் என்றனர், "என்சைக்ளோபீடியா" ஆசிரியர்கள். "பரிபூரண எண்ணம்" வளர்ச்சி அடைந்தால் தான் புரட்சி வெற்றி பெறும் என்றனர் ஹெகலிஸ்டுகள். இந்த இரண்டு முடிவுகளும் தவறு. எனவே, இந்தக் கேள்விகளுக்கு உண்மையான பதில் கண்டுபிடிக்க மார்க்ஸ் முடிவு செய்தார்.

மார்க்ஸ் கட்டுப்பாடாக வேலை செய்தார். 1844ஆம் வருடக் கடைசிக்குள் பிரஞ்சு ஆசிரியர்களும், ஆங்கில ஆசிரியர்களும் வரைந்த எல்லா அரசியல், பொருளாதார நூல்களையும் அவர் படித்து முடித்தார். குவின்னே, ஆடம் ஸ்மித், ரிக்கார்டோ, ஸிஸ்மான்டி முதலிய பேராசிரியர்கள் வரைந்த பொருளாதார நூல்களைத் துருவித் துருவி ஆராய்ந்தார். ஆனால், முதலாளித்வத்தின் அடிப்படையான தத்துவங்களையும், அந்த முறையிலுள்ள குறைகளையும் அவர்கள் தீர்க்கமாக ஆராயவில்லை. அதிக மதிப்பின் தன்மையை அவர்கள் அசட்டை செய்தனர். இதுதான் முதலாளித்வ உற்பத்தி முறையின் ஜீவநாடி என்றாலும், உழைப்பின் மதிப்பின் தன்மையையும் அவர்கள் தெளிவாக உணரவில்லை. மார்க்சுக்கு முந்தின பொருளாதார சாஸ்திரம் குறைகள் நிறைந்தது. எனவே, அரசியல் பொருளாதார சாஸ்திரம் உருவாக வேண்டும். மனித சமூகத்தின் சாஸ்திரமும் குறைகள் நிறைந்ததாக இருந்தது. அந்தக் குறைகளை நீக்கவேண்டும். லோகாயத திருஷ்டியுடன் சரித்திரத்தை ஆராய வேண்டும். உற்பத்தி முறையையும் விநியோகத்தையும் ஆதாரமாகக் கொண்டு சரித்திரத்தை ஆராய வேண்டும். புது உலகத்திற்கு ஒரு புதிய அரசியல் முறை தேவை. அந்த அரசியல் முறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்க வேண்டும். சமூகத்திலே வர்க்கங்களின் நிலை என்ன என்பதை வரையறுக்கவேண்டும். இந்த வேலைகளையும் உலகம் வியக்கத்தக்க முறையில் செய்தார் மார்க்ஸ்.

பிரான்சின் நிலையை ஜெர்மனியுடன் ஒத்துப் பார்த்தார் மார்க்ஸ். "பிரான்சில் எல்லா வர்க்கங்களும் அரசியல் போதத்தில் தோய்ந்து கிடக்கின்றன. இந்த வர்க்கங்கள் சமூகத் தேவையின் பிரதிநிதிகளாக விளங்குகின்றன... ஆனால், ஜெர்மனியில் வாழ்க்கை ருசியற்றதாகவும், அறிவு செயலற்றதாகவும் இருக்கிறது...புரட்சி உணர்ச்சியும், தன்நம்பிக்கையும் மாத்திரம் சமூகத்தை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கும் சக்தியை மக்களுக்கு அளிக்காது. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை நசுக்குகிறது. எனவே, நசுக்கும் வர்க்கத்தின் மீது குற்றப் பத்திரிகை

வாசிக்கவேண்டும்...பிரான்சில் பிரபுக்களும், பாதிரிகளும் குற்றம் சாட்டப் பட்டார்கள். ஆனால், ஜெர்மனியில் இது நடக்கவில்லை" என்று 1843 ஆம் வருடம் கூறினார் மார்க்ஸ்.

ஒரு விஷயத்தை மார்க்ஸ் தெளிவாக உணர்ந்தார். ஐரோப்பாவின் எதிர்காலம் ஜெர்மனியுடன் பிணைபட்டுக் கிடக்கிறது என்பது மார்க்ஸ் கருத்து. புரட்சிப் போர்க்களத்தில் ஜெர்மனியும் குதித்தால்தான் புரட்சி வெற்றி பெறுமென்று மார்க்ஸ் கருதினார். ஏனெனில், ஜெர்மனி பிற்போக்காளர்களின் (பிரபுத்துவத்தின்) கோட்டை. ஐரோப்பா விடுதலை பெற வேண்டுமானால் பிற்போக்குக் கோட்டை தகர வேண்டும். எனவே, ஜெர்மனியிலுள்ள புரட்சி சக்திகளை ஒன்றுபடுத்துவதிலும், ஒரு நாட்டில் நடக்கும் கிளர்ச்சியை இன்னொரு நாட்டில் நடைபெறும் கிளர்ச்சியுடன் இணைப்பதிலும் மார்க்ஸ் கவனம் செலுத்தினார்.

மார்க்ஸ் அரசியல் அரங்கத்தில் பிரவேசித்த பொழுது ஸைமன் பெருமை என்னும் சிகரத்தில் வீற்றிருந்தார். இவர் பிரெஞ்சு சோஷலிஸ்டு சிந்தனையாளர். குறைகள் நிறைந்த "ஸைமனிஸத்தை" ஏற்றிப் போற்றினர் பலர். ஸைமன் விஞ்ஞான சோஷலிஸ்டல்ல. அவர் மத்திய வகுப்பின் பேச்சாளர்! முதலாளித்வ வளர்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மத்திய வகுப்பின் உரிமைகளைப் பாதுகாக்க ஸைமன் முயன்றார். மத்திய வகுப்பின் தலைமையில் புதிய சமூகம் தோன்றவேண்டுமென்று ஸைமன் பிரசாரம் செய்தார்.

பொருளாதார உறவின் வளர்ச்சிதான் பிரச்னைகளைத் தீர்க்குமென்றும், சரித்திரம், பொருளாதார அடிப்படையில் பிரிந்து நிற்கும் வர்க்கங்களின் போராட்ட சரித்திரம்தான் என்றும் ஸைமன் கூறினார். ஆளும் வர்க்கம் பண்டங்களை அறிவு பூர்வமான முறையில் பயன்படுத்தாதென்றும், அது ஒரு குறுகிய திட்டத்தை மேற்கொள்ளுமென்றும், செல்வம் ஒரு சிலரிடம் குவியுமென்றும், செல்வத்தின் உதவியால் இருப்பவர்கள், இல்லாதவர்

களைச் சுரண்டுவார்களென்றும் ஸைமன் கருதினர். அதிருப்தி அடைந்த ஜனங்கள் சிறுபான்மையோரை—ஆளும் வர்க்கத்தை—அழிக்க முயலுவார்களென்று ஸைமன் நினைத்தார். இதுவரையில் அவர் போக்கு முற்போக்கானது. இதற்குப் பிறகு அவர் முதல்தரமான பிற்போக்காளராக மாறுகிறர். "ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிருப்தி அடைந்த ஜனங்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள். ஆனல், நீண்டகாலமாக மந்த உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்ட ஜனங்கள் தங்களுக்கு முன் இருந்தவர்கள் கையாண்ட முறைகளைத்தான் மேற்கொள்ளுவார்கள். ஜனங்கள் ஆட்சி தோன்றின பிறகு ஜனங்கள் ஆட்சியும் மனித சக்தியை விரயம் செய்யும். புதிய ஆட்சி, புதிய சுயசிரம ஜீவிகளைச் சிருஷ்டிக்கும். அதன் பிறகு முன்போல் போராட்டம் தொடர்ந்து நடக்கும்." இது ஸைமன் ஆராய்ந்து தேர்ந்த முடிவு! இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு அவர் கூறின வழி மிக விசித்திரமானது. பாங்கர்களுக்கும், தொழிற்சாலை முதலாளிகளுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், படித்தவர்களுக்கும் அவரவர் யோக்கியதாம்சங்களுக்குத் தகுந்தவாறு வெகுமதி அளித்து, அவர்கள் ஒத்துழைப்பைப் பெற வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அறிவு பூர்வமான நிர்மாணத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர முடியுமென்றும் ஸைமன் உபதேசம் செய்தார். ஸைமன் எங்கே போகிறர் என்பது இப்பொழுது தெரிகிறதா?

தொழிற்சாலை அதிபர்களின் தயவால்தான் உலகம் சீர்படும் என்றர் ஸைமன். அவர் உற்பத்தியாளர்களைப் பெரிதும் நம்பினர். ஆனல், அவர் பிரதம சிஷ்யர் சாரல்ஸ் பூரியர், ஸைமனிஸம் சரிந்து விழுவதைக் கண்டார். கடன் வாங்க வசதி இருந்தாலும், உற்பத்தி சக்தியை அதிகமாகப் பயன்படுத்திக் கொள்ள வசதி இருந்தாலும், முதலாளிகள் அளவுக்கு மிஞ்சிப் பொருள்களை உற்பத்தி செய்து, சிறு உற்பத்தியாளர்களுடனும், சிறுவர்த்தகர்களுடனும் போட்டியிட்டனர். எனவே, சிறு உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் அழிந்தனர். அவர்களும், அவர்களுடைய குழந்தைகளும் தொழிற்சாலைகளிலும், சுரங்

களிலும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தொழிற் புரட்சி பெரிய முதலாளிகளையும், சிறிய முதலாளிகளையும் பிரித்தது. சமூகத்தின் நன்மையைப் பாதுகாப்பதற்காகத்தான் முதலாளிகள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறார்கள் என்று ஸைமன் கருதினாரல்லவா? இக் கருத்துத் தவறு என்று பூரியர் கருதினார். ஸைமனின் இந்த வாதத்தைப் பூரியர் உக்ரமாக எதிர்த்தார். அதே சமயத் தில், ஸிஸ்மாண்டி வேறு வழியில் சென்றார். அன்றுவரை யில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்கள், போதிய பொருள்கள் உற்பத்தி செய்யப் படாததால்தான் ஏற் பட்டதென்றும், புதிதாகக் கண்டுபிடித்த யந்திரங் களின் உதவியால் தேவைக்கு அதிகமான பொருள்கள் உற்பத்தி செய்யப் படுமென்றும், தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதைத் தடுக்கவில்லையென்றால் உலகில் மகத்தான வர்க்கப் போராட்டம் நடக்குமென் றும் ஸிஸ்மாண்டி கருதினார். உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்க முதலாளிகள் முயலும் பொழுது முதலாளிகளிடையே போட்டி ஏற்படுமென்றும், அந்தப் போட்டியில் வெற்றி பெறுவதற்காக முதலாளிகள் உற் பத்திச் செலவைக் குறைக்க முயலுவார்களென்றும், இத னால் தொழிலாளர்களின் கஷ்டம் அதிகரிக்குமென்ப தோடு வேலை நேரமும் அதிகரிக்கு மென்றும் ஸிஸ்மாண்டி கூறினார். இந்த நிலை சமூகப் புரட்சிக்கு வழி கோலும். இதைத் தடுக்க வேண்டுமென்றால், சர்க்கார் இதில் தலை யிட வேண்டும்; மூலதனச் சேமிப்பையும், உற்பத்திச் சாதனங்களை வைத்திருக்கும் உரிமையையும் கட்டுப் படுத்த வேண்டும். அதிகாரத்தை மத்திய சர்க்காரிடம் ஒப்படைப்பதன் மூலம் இந்த வேலை சாத்தியமாகுமென்று ஸிஸ்மாண்டி நம்பினார். இந்த வாதத்தை எதிர்த்தார் பூரி யர். அதிகாரத்தை மத்திய சர்க்காரிடம் ஒப்படைப் பதால் துன்பம் தீருமென்ற ஸிஸ்மாண்டி வாதத்தைப் பூரியர் நிராகரித்தார். பல சர்க்கார்கள் ஒன்று சேர்ந்தால், அதனால் துன்பம் அதிகரிக்குமே தவிரக் குறையாதென்று பூரியர் கருதினார். எனவே, உலகத்தைப் பல பிரிவுகளாகப் பிரிக்க வேண்டு மென்றும், எல்லாப் பிரிவுகளுக்கும் பரிபூரண உரிமை அளிக்க வேண்டுமென்றும், இந்தச்

சிறிய குடியரசுகளை ஒரு மத்திய சர்க்காருடன் இணைக்க வேண்டுமென்றும், செல்வம் பொதுவாக வேண்டுமென்றும் பூரியர் கூறினர்.

அந்தக் காலத்தில் சமூக நிலையைப்பற்றிக் கணக்கற்ற நூல்கள் வெளிவந்தன. முதலாளித்வ சமூக அமைப்பை அனைவரும் ஒரு முகமாகக் கண்டித்தனர். ஆனால், புதிய உலகத்தைச் சிருஷ்டிக்கும் வழி என்ன என்பதை யாரும் எடுத்துக் காட்டவில்லை. லூயி பிளாங் "ஸ்டேட் சோஷலிஸம்" தான் உலகத் துன்பம் தீர வழி என்றார். பார்பஸ், பிளாங்கி முதலியோர் பலாத்காரப் புரட்சியும், பொதுச் சொத்து முறையும்தான் கஷ்டம்தீர வழி என்றனர். ஸைமனிஸ்டுகள் அரசியல் மாற்றத்தைவிட, பொருளாதாரச் சீர்திருத்தம்தான் சிறந்தது என்றனர். பிரௌ தோனிஸ்டுகள் மிதவாத கீதத்தைப் பல்வேறு ராகங்களில் பாடினர்.

ஸைமனிஸ்டுகள் காலக்கிரமத்தில் அரசியல் அரங்கத்திலிருந்து மறைந்தனர். அவர்களில் பலர் முதலாளிகளாக மாறினர்கள்; அல்லது, முதலாளித்வத்தின் பாஷ்யக் காரர்களாக மாறினர்கள். பூரியரிஸ்டுகள் அமெரிக்காவில் ஒரு சோஷலிஸ்டு காலனியை ஏற்படுத்தினர்கள். ஆரம்பத்தில் இந்த முயற்சியில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற்றனர். ஆனால், இவர்களுக்கும் ஸைமனிஸ்டுகளுக்கு நேர்ந்த கதிதான் நேர்ந்தது.

இங்கே ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கது. மார்க்சுக்கு முந்தின சிந்தனையாளர்கள் முதலாளித்வ முறையை எவ்வாறு திருத்தி அமைப்பது என்பதைத்தான் விவாதித்தனர். ஆனால், அவர்களில் யாரும் முதலாளித்வம் அழிய வேண்டுமென்று கருதவில்லை. மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு அன்று முதலாளித்வம் முட்டுக் கட்டையாக நின்றது என்றும் நினைக்கவில்லை. தொழிலாளர்களின் சக்தியை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை; தொழிலாளி வர்க்கத்தின் சரித்திர ரீதியான கடமையை அவர்கள் உணரவில்லை. புது உலகச் சிற்பிகள் புரட்சிகரமான தொழிலாளிகள்தான் என்பதை யாரும் எடுத்துக் காட்டவில்லை. ஏன்? முதலாளித்வத்தின் அடிப்படையான தத்துவங்களை

அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை; முதலாளித்வத்தில் குடிகொண்டிருக்கும் முரண்பாடுகளை அவர்கள் காண வில்லை; சரித்திரத்தை லோகாயத திருஷ்டியுடன் அவர்கள் ஆராயவில்லை. உண்மையில் அவர்கள் உலகப் பிரச்னை களைச் சிக்கறுப்பதற்குப் பதிலாக, அவைகளை மேலும் சிக்கலாக்கினார்கள்.

இந்தத் தத்துவங்களையெல்லாம் மார்க்ஸ் துருவித் துருவி ஆராய்ந்தார். அன்று வெளிநாடுகளில் வசித்து வந்த ஜெர்மன் புரட்சிக்காரர்கள் ஒரு ரகசிய ஸ்தாபனத்தை நடத்தினர். அவர்கள் புரட்சியைப்பற்றி மார்க்சுடன் விவாதித்தனர்.

"நேர்மையின் தத்துவம்" என்னும் பொருள்பற்றி ஒரு கட்டுரை எழுதும்படி ரூகி, மார்க்சைக் கேட்டுக் கொண்டார். இக் கட்டுரை உண்மையில் அறிவுக்கு விருந்து அளித்தது. மார்க்ஸ் யூதர் பிரச்னையைப் பற்றி யும் ஒரு கட்டுரை எழுதினார். புரூனோ பாயர் யூதர்களைப் பற்றி எழுதின கட்டுரைக்குப் பதில் இது. கிறிஸ்தவர்களை விடத் தாழ்ந்த நிலையிலிருக்கும் யூதர்கள் பரிபூரண விடு தலை பெற வேண்டுமானால், அவர்கள் 'ஞானஸ்நானம்' பெற வேண்டுமென்று பாயர் கூறினார். ஆனால் யூதர்கள் ஒரு தனி ஜாதியாக விளங்கின காலம் மாறிவிட்டதென் றும், அவர்கள் ஒரு பொருளாதார வர்க்கமாக மாறி விட் டார்களென்றும், அவர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக மதிக்கப்பட்டதுதான், அவர்கள் தாழ்ந்த நிலைக்குக் காரணமென்றும், ஐரோப்பிய மக்கள் விடுதலை அடையும் பொழுதுதான் யூதர்களும் விடுதலை அடைவார்களென் றும், ஞானஸ்நானம் பெறும்படி அவர்களுக்கு உபதேசம் செய்தது ஒரு விலங்குக்குப் பதிலாக இன்னொரு விலங்கை மாட்டிக் கொள்ளும்படி உபதேசம் செய்வதாகுமென் றும் மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். ஜனங்களின் கவனத்தை நேரடியான பிரச்னைகளிலிருந்து வேறுபக்கம் திருப்பு வதற்காக ஆளும் வர்க்கம் யூதர் பிரச்னையை முன் னணிக்குக் கொண்டு வருகிறது.

ஹெகலைப்பற்றியும் மார்க்ஸ் ஒரு கட்டுரை எழுதி னார். இது மிகவும் முக்கியமானது. இந்தக் கட்டுரையில்

அவர் பல புதிய விஷயங்களைக் குறிப்பிட்டார். ஹெகலிஸத்துடன் முடிவாகக் கணக்குத் தீர்த்துக் கொண்ட கட்டுரை இது. நீண்ட ஆராய்ச்சிக்கு இந்தக் கட்டுரை ஒரு பீடிகையாக அமைந்தது.

அக்காலத்தில் பாமர ஜனங்களிடையே வேலை செய்து வந்த கம்யூனிஸ்டுகள் மார்க்சின் கவனத்தைக் கவர்ந்தனர். அவர்களில் பலர் தேவையால் முன்னுக்குத் தள்ளப் பட்டவர்கள். வாழ்க்கையில் அவர்கள் துன்பத்தை அனுபவித்தவர்கள்; முதலாளித்வ முறையின் தீமையை அவர்கள் நேரடியாகத் தெரிந்து கொண்டவர்கள்; தனிச் சொத்துரிமை ஒழிய வேண்டிய அவசியத்தைத் தெளிவாக உணர்ந்தவர்கள்.

பிரான்சில் பாபியப்பின் சீடர்கள் முதலாளித்வ முறைக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். இவர்களில் பிளாங்கியும், பார்பசும் தலை சிறந்தவர்கள். பிளாங்கியின் கொள்கைகளை மார்க்ஸ் ஆதரிக்கவில்லையென்றாலும், அவர் நிர்மாணத் திறமையையும், கொள்கைப் பிடிப்பையும் மார்க்ஸ் போற்றினர். புரட்சிக்காகப் பிளாங்கி திரிகரண சுத்தியுடன் வேலை செய்தார் என்றாலும், புரட்சி வெற்றி பெற்ற பிறகு என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்குத் தெரியவில்லை. அதேபோன்று பக்கூனினும் பொறுப் பற்ற முறையில் பிரசாரம் செய்வதாக மார்க்ஸ் கருதினர். பாரிஸில் மார்க்ஸ் பல புரட்சிக்காரர்களைச் சந்தித்தார். அவர்களில் ஒருவர்தான் நிலைமையை உள்ளது உள்ளவாறு உணர்ந்தார். அவர்தான் பிரடரிக் ஏங்கல்ஸ். மார்க்ஸை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையில் ஏங்கல்சின் பொருளாதாரக் கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்காக இருவரும் பாரிசில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பு சரித்திரத்தில் இடம் பெற்றது. அதன் பிறகு இருவரும் இணைபிரியாத தோழர்களானர்கள். இருவரும் தனித்தனியாகவும், சேர்ந்தும் சோஷலிஸத்தைப்பற்றி உன்னதமான பல நூல்கள் எழுதினர்கள்.

பத்திரிகைக்காரராகவும், புலவராகவும், தீவிரவாதியாகவும் வாழ்க்கையை ஆரம்பித்தார் ஏங்கல்ஸ். அவர் உயர்ந்த குணங்கள் படைத்தவர்; நல்ல மனேதிடம்

படைத்தவர்; விஷயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் பெற்ற வர்; சிறந்த அறிஞர்; முதல்தரமான சிந்தனையாளர். மார்க்சும், எங்கல்சும் புது உலகத்தைச் சமைக்கும் சிரம சாத்தியமான வேலையில் இறங்கினார்கள். மார்க்சிஸத்தை உருவகப்படுத்தின வேலையில் எங்கல்சுக்குப் பெரும் பங்குண்டு.

எங்கல்ஸ் இங்கிலாந்தின் நிலையை நன்குணர்ந்தவர். முதலாளித்வ உற்பத்திமுறை பெரிதும் வளர்ந்திருந்த இங்கிலாந்தில் தொழிலாளர்களின் நிலை எவ்வளவு கேவல மாக இருக்கிறது என்பதை எங்கல்ஸ் தெளிவாகக் கண் டார். "பிரிட்டிஷ் தொழிலாளர்களின் நிலை" என்னும் நூல் முதலாளித்வச் சுரண்டலைப் புட்டுக் காட்டிற்று. ஸிஸ் மாண்டியின் கொள்கையை மார்க்சைப் போன்று எங்கல் சும் வெறுத்தார். முதலாளித்வ முறையின் வெற்றியின் சின்னமாக விளங்கின இங்கிலாந்தின் நிலையைத் தெரிந்து கொள்ள மார்க்ஸ் விரும்பினார். இங்கிலாந்தின் சரித்தி ரத்தை எங்கல்ஸ் சாங்கோபாங்கமாக விளக்கினார். மார்க்ஸ் தமது திட்டத்தை எங்கல்சுக்கு விளக்கினார். ஒரு விஞ் ஞான ரீதியான தத்துவத்தை மார்க்ஸ் எங்கல்சுக்கு அளித் தார். மார்க்சைச் சந்தித்த பிறகு எங்கல்சின் உற்சாகம் அதிகரித்தது. எங்கல்ஸ் கட்டுப்பாடாகவும், விஞ்ஞான ரீதியாகவும் வேலை செய்ய ஆரம்பித்தார். மார்க்சும் எங்கல் சும் பலகாலம் ஒன்றாக வேலை செய்தனர். அவர்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த காலத்தில் தொடர்ச்சி யாகக் கடிதப்போக்குவரத்து வைத்துக் கொண்டனர். அவர்கள் கடிதங்கள் சாதாரணக் கடிதங்களல்ல. அக் கடிதங்களில் அவர்கள் உலக அரசியலை விவாதித்தனர்; இயக்கத்தையும், கொள்கையையும் அவர்கள் விவாதித் தனர். மார்க்ஸ், எங்கல்ஸ் ஆகியோர் முயற்சியால் விஞ் ஞான ரீதியான கம்யூனிஸ்டு இயக்கம் உருவெடுத்தது. மார்க்ஸ் இறந்த பிறகு இந்த இயக்கத்தைப் பேணி வளர்க் கும் பொறுப்பை எங்கல்ஸ் ஏற்றார்.

அன்று பக்கூனின் பாரிஸில் வாழ்ந்து வந்தார். அவர் உலகப் பிரசித்திபெற்ற அனார்க்கிஸ்டு. மார்க்ஸ் ஜெர்மனியி லிருந்து வெளியேறின அதேகாலத்தில், ஏறக்குறைய

அதே காரணங்களுக்காக ரஷியாவிலிருந்து துரத்தப்பட்டார் பக்கூனின். அவர் முடியாட்சியின் பரம விரோதி; தீவிரமான புரட்சிக்காரர். பக்கூனின் சிறந்த பேச்சாளர். அவர் எந்தவிதமான கட்டுப்பாடுமற்ற ஒரு சமூகத்தைச் சிருஷ்டிக்க விரும்பினார். முதலாளித்வ அமைப்பைத் தகர்த்த பிறகு, எந்தவிதமான கட்டுப்பாடுகளும் மனிதனுக்கு இருக்கக்கூடாதுஎன்று பக்கூனின் கூறினார். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அவர் ஒரு இயக்கத்தைச் சிருஷ்டித்தார்.

பக்கூனின் உடமையைப் பொதுவாக்க வேண்டுமென்று கூறினார் என்றாலும், அவர் கம்யூனிஸ்டல்ல. மார்க்சிஸம் தாறுமாறான முறையல்ல; விஞ்ஞான ரீதியான முறை. ஆனால், பக்கூனின் தாறுமாறான சமூகத்தை உருவகப்படுத்த விரும்பினார். எனவே, அவர் மார்க்சிஸத்தைக் கண்டித்தார்.

உறுதியான அஸ்திவாரத்தின் மீது கட்டப்படும் கட்டிடம்தானே மழையையும், வெயிலையும், காற்றையும், புயலையும் சட்டை செய்யாது நிலைத்து நிற்க முடியும்? உறுதியற்ற கட்டிடம் உக்ர ான புயலுக்குத் தப்ப முடியாதல்லவா? பக்கூனின் கட்டின கட்டிடம் உறுதியற்றது. எனவே, அது தாக்குதலுக்கு அசைந்து கொடுத்தது. மார்க்சும், பக்கூனினும் ஒருவரை ஒருவர் ஈவும், இரக்கமு மின்றித் தாக்கினர்.

வில்லியம் வீட்லிங் கொள்கைகளில் பல குறைகள் இருந்தாலும் மார்க்ஸ் அவரைப் போற்றினார். வீட்லிங் ஒரு ரகசியமான புரட்சி இயக்கத்தை வெற்றிகரமாக நிர்மாணித்தார். "ஏழையின் வேதம்", "இன்பத்திற்கும், சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு" என்னும் நூல்களின் ஆசிரியர் வீட்லிங். வர்க்கப்போராட்டத்தை அவர் ஹிருதய பூர்வமாக ஆதரித்தார். ஏழைகள் பணக்காரர்களை எதிர்த்துப் போர்புரிய வேண்டுமென்றும், புது உலகம் காண முதலாளித்வத்தால் சுரண்டப்படுகிறவர்களைக் கொண்ட படை திரட்ட வேண்டுமென்றும், முதலாளிகளை எதிர்க்கும் வேலையை இந்த வீரர்களிடம் ஒப்படைக்க வேண்டு

மென்றும் வீட்லிங் கூறினர். உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட வேண்டுமென்றும் அவர் பிரசாரம் செய்தார். வீட்லிங் செய்த தவறுகளை மார்க்ஸ் எடுத்துக் காட்டினர்; அதே சமயத்தில் அவர் செய்த வேலைகளை மார்க்ஸ் பாராட்டினர்.

பிரௌதோனும் மார்க்சிடம் அகப்பட்டுக் கொண்டு விழித்தார். சமூகப் பிரச்னைகளைப் பிரௌதோன் ஆராய்ந்த முறை தவறென்றும், அவருடைய முடிவுகள் ஒழுக்க நியதியை ஆதாரமாகக் கொண்டதே தவிரச் சரித்திர பூர்வமானதல்ல என்றும் மார்க்ஸ் கருதினர்.

பிரௌதோன் விவசாயி குடும்பத்தில் பிறந்தவர். அவர் கீழ் நிலையிலிருக்கும் மத்திய வகுப்பின் பிரதிநிதி. போர்போன்ஸ் ஆட்சியைக் கவிழ்க்க அரும்பெரும் முயற்சி செய்த வகுப்பு இதுதான். இந்த வகுப்பு முதலாளிகளை நம்பிற்று; அவர்கள் தயவை நாடிற்று.

சமூக நீதிக்குக் குறுக்கே மூலதனச் சேமிப்பு நிற்கிறதென்றும், பொருளாதாரத்துடன் அதிகாரத்தை இணைப்பது தவறென்றும் பிரௌதோன் கூறினர். சிறுபான்மையோரின் நன்மைக்காகப் பெரும்பான்மையோரைச் சுரண்டச் சட்ட ரீதியாக இடமளிக்கும் ஸ்தாபனம்தான் சர்க்கார்; சமூகச் சட்டம் இயற்றும் உரிமையும், கடன் உரிமையும், சிறுபான்மையோருக்கு இருப்பதால்தான் சொத்துச் சேர்க்கப் பெரும்பான்மையோருக்கு இயற்கையாக இருக்கும் உரிமை பறிபோயிற்று என்று பிரௌதோன் கருதினர். சிறுபான்மையோர் பெரும்பான்மையோரைச் சுரண்டக் காரணம் இதுதான் என்பது அவர் வாதம். அதே மூச்சில் தனிச்சொத்து முறையை அவர் கண்டித்தார்; சொத்து, திருட்டுப் பொருள் என்றார்! அடுத்த நிமிடத்தில், தன் அந்தஸ்தையும், உரிமையையும் மனிதன் நிலை நிறுத்த வேண்டுமாயின் "ஒரு குறிப்பிட்ட அளவு" சொத்து வைத்துக்கொள்ள அவனுக்கு உரிமை இருக்கவேண்டும் என்றார்! இது அறிவுக்குப் பொருந்தாத வாதம்; முன்னுக்குப் பின் முரணான வாதம். ஏனெனில், "ஒரு குறிப்பிட்ட அளவு சொத்து" என்ற பதத்திற்கு எல்லை நிர்ணயிக்க முடியாது. இந்த

முறை உண்மையில் பொருளாதார அடிமைத்தனத்தை ஊர்ஜிதம் செய்யும். ஒருவன் மற்றவனைச் சுரண்ட இந்த முறை சட்ட ரீதியாக இடமளிக்கும். உண்மையில் பிரௌதோன் நோக்கமும் இதுதான்! மக்களை ஏமாற்று வதற்காக அவர் சில அபிவிருத்திகரமான சுலோகங்களைக் கோஷித்தார் என்றாலும், உண்மையில் அவர் பிற்போக் காளர்.

சொத்து, களவு என்றும், எளியானை வலியான் சுரண்டுவதுதான் முதலாளித்வ முறையின் தன்மை என் றும் கூறின பிரௌதோன் அந்தத் தீமையை ஒழிக்க ஒரு விசித்திரமான வழியையும் கண்டு பிடித்தார். முத லாளித்வ அநீதி ஒழிய வேண்டுமாயின் போட்டி ஒழிய வேண்டும்; போட்டிக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட அளவு சொத்துச் சேர்க்க உரிமை அளிக்கும் கூட்டுறவு முறை அமுலுக்கு வரவேண்டும். போட்டி மனிதனை மிருகமாக்குகிறதென்றும், சமூக வாழ்க்கையின் தத்து வத்தை மனிதனுக்கு விளக்கினால் மனிதன் அபிவிருத்தி அடைந்துவிடுவான் என்றும் இந்த அறிஞர் கூறினார்! மத்திய நிர்வாகத்தைப் பலமான சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அதன் நடவடிக்கைகளைப் பொது ஸ்தாபனங்கள் கண்காணிக்க வேண்டுமென்றும் அவர் உபதேசம் செய்தார். அவருடைய உலகம் உற்பத்தி யாளர், உபயோகிப்போர் ஆகிய இரு பிரிவுகளைத் தன் னுட் கொண்டதாக இருக்கும். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், சுரண்டுதல் முதலிய தீமைகள் அந்தச் சமூ கத்தில் இடம் பெறுதாம்! இந்த மாற்றத்தை எவ்வாறு உண்டு பண்ணுவது? அமுலிலிருக்கும் சமூக அமைப்புக்கு விடை கொடுத்துவிட்டு, புதிய சமூகத்தை எவ்வாறு உரு வகப்படுத்துவது? இதை உருவகப்படுத்தும் வர்க்கம் எது? இந்தக் கேள்விகளுக்குப் பிரௌதோன் பதிலளிக்கிறார்! முதலாளித்வத்தால் சுரண்டப்படும் சிறிய விவசாயிகள், சிறிய பணக்காரர்கள், சிறிய உற்பத்தியாளர்கள் ஆகி யோர் இந்த வேலைகளைச் செய்வார்கள் என்று பிரௌ தோன் கருதினர். (தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களும், கூலிக்கு வேலை செய்யும் விவசாயி

களும் பிரௌதோன் கண்ணில் படவில்லை!) அவர் தொழிலாளர்களை ஒதுக்கித் தள்ளினார். தொழிலாளர்கள் அரசியல் ரீதியாக ஒன்றுபடலாகாதென்றும், அவர்கள் ஆளும் வர்க்கத்திற்கு அடங்கி நடக்க வேண்டுமென்றும் அவர் ஹிதோபதேசம் செய்தார்! (உண்மையில் பாசிஸத்திற்கு விதை விதைத்தவர் பிரௌதோன்தான் என்று நாம் கூறினால் அதில் தவறு இருக்க முடியாதல்லவா?) எதிரிகள் அரசியல் தந்திரங்களில் தேர்ந்த நிபுணர்களாதலால் புரட்சித் தலைவர்களில் பலஹீனமானவர்களை அவர்கள் எளிதில் விலைக்கு வாங்கி விடுவார்களென்று பிரௌதோன் தொழிலாளர்களை எச்சரித்தார். ஒருகால், தொழிலாளர் புரட்சி வெற்றி பெற்றுத் தொழிலரசு ஏற்பட்டால், உடனே புதிய தீமை தலையெடுக்கும் என்பது அவர் தீர்ப்பு. எனவே, அரசியல் விஷயங்களில் தொழிலாளர்கள் கவனம் செலுத்தக் கூடாது என்றும், பொருளாதாரப் பிரச்னைகளில் மாத்திரம்தான் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தாக்கீது செய்தார். இதைத்தான் நாம் "பொருளாதார வாதம்" என்கிறோம். இது தொழிலாளர்களை நிரந்தரமாக அடிமைக் கடலில் ஆழ்த்தும். பொருளாதார விடுதலை கூடப் படிப் படியாகத்தான் ஏற்பட வேண்டுமாம்! தொழிலாளர்கள் பலாத்காரத்தைக் கையாளலாகாது என்று இவர் ஓயாது வலியுறுத்தினார். தங்கள் நியாயமான உரிமைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதைக்கூடப் பிரௌதோன் ஆதரிக்கவில்லை. மேற்கண்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு "வறுமையின் தத்துவம்" என்னும் நூல் எழுதினார் பிரௌதோன். விமர்சனத்திற்காக இந்த நூலை மார்க்சுக்கு அனுப்பினார் பிரௌதோன். மார்க்ஸ் பிரௌதோன் நூலை விமர்சனம் செய்ய முடிவு செய்தார். ஏன்? "பிழையைக் கண்டிக்காமல் இருப்பது அறிவு சம்பந்தமான ஒழுங்கீனத்தை ஆதரிப்பதாகும்" என்றார் மார்க்ஸ். எனவே, பிரௌதோனிஸத்தை அரசியல் உலகிலிருந்து முடிவாக ஒழிக்க முடிவு செய்தார் மார்க்ஸ். அதன் விளைவுதான் "தத்துவத்தின் வறுமை" என்னும் உன்னத நூல். இது 1847 ஆம் வருடம் பிரெஞ்சு மொழியில் வெளி

வந்தது. பிரௌதோன் வாதத்தை அக்குவேறு, ஆணி வேருகப் பிரித்தார் மார்க்ஸ். பிரௌதோனிஸம் மார்க்ஸிடம் பட்டபாடு தாளும் படாது, தறியும் படாது.

ஹெகலிஸத்தைப் பிரௌதோன் தெரிந்துகொள்ள வில்லை என்றும், நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போர் தான் தர்க்கவியல் போராட்டமென்று கூறுவது அசட்டுத்தன மாகுமென்றும் மார்க்ஸ் கூறினர். தர்க்கவியல் போராட்டத்தில் இது நன்மை, இது தீமை என்று சுட்டிக் காட்டுவது சரித்திர விதிக்கு முரணானது. சமூக ஆராய்ச்சியில் இதற்கு இடமில்லை. மனித சமூகத்தின் வளர்ச்சிக்கு இரண்டு அம்சங்களும் இன்றியமையாதவை. உதாரணமாக, முதலாளித்வம் தீமை நிறைந்த முறை. ஆனல், சமூகத்தின் வளர்ச்சிக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் இது இன்றியமையாதது. ஒரு கட்சி வெற்றி பெறுவதால் மாத்திரம் உண்மையான அபிவிருத்தி ஏற்படாது. ஆனல், போட்டி சக்தி மூலம் அபிவிருத்தி ஏற்படும். போட்டி இரண்டு சக்திகளையும் அழிக்கும்; போட்டியின் முடிவில் ஒரு புதிய சக்தி தோன்றும். உதாரணமாக, முதலாளித்வ சமூகத்தில், இருக்கும் வர்க்கமும் இல்லாத வர்க்கமும் முட்டி மோதுகின்றன. இந்தப் போராட்டத்தின் முடிவில் வர்க்க வேற்றுமையற்ற சமூகம் தோன்றும். சமூகப் போராட்டத்தில் ஒரு அம்சத்திற்கு மாத்திரம் அனுதாபம் செலுத்துவதால் பிரௌதோன் மானசிக வாதியாக மாறுகிருர். ஏனெனில், பரிணும நியதிகளை அசட்டை செய்துவிட்டு, வெளி உண்மைகளை அவர் ஓரக் கண்ணல் பார்க்கிருர். பிரௌதோனுடைய பொருளாதார முறைகளிலுள்ள குறைகளையும் மார்க்ஸ் தெளிவாக எடுத்துக்காட்டினர். மனித உழைப்பு, பொருளாதார மதிப்பை உண்டு பண்ணுகிறதென்று கூறுவது தவருகும். இந்த இடத்தில் பணத்திற்கும் பண்டத்திற்கும் உள்ள உறவைப் பிரௌதோன் திரித்துக் கூறுகிருர். இது ஏன் தவறு என்பதை மார்க்ஸ் விளக்கினர். பிறகு, உண்மையான கூட்டுறவு முறையில் பிரௌதோனுக்குள்ள வெறுப்பையும், மத்தியதர விவசாயிகள்மீது அவருக்குள்ள மட்டற்ற நம்பிக்கையையும், தனிச்சொத்து முறையில் அவருக்

குள்ள பிரேமையையும், பழைய மணமுறையில் அவருக்குள்ள பற்றையும், மனைவிமீதும், மக்கள்மீதும் குடும்பத் தலைவனுக்குள்ள உரிமையை அவர் ஆதரிப்பதையும், புரட்சியில் அவருக்குள்ள பயத்தையும் மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். அன்றுவரையில் ஐரோப்பாவில் தனியரசு செலுத்திவந்த பிரௌதோனிஸம் "தத்துவத்தின் வறுமை" வெளிவந்ததும் மாண்டு மறைந்து மண்ணில் கலந்தது. இந்த நூலில் தமது அரசியல், சமூக, பொருளாதாரக் கொள்கைகளை மேலெழுந்தவாரியாக விளக்கினர் மார்க்ஸ். சரித்திர ரீதியான லோகாயத வாதத்தை இந்த நூலில் மார்க்ஸ் தெளிவு படுத்தினர்.

சரித்திரத்தின் நோக்கம் சம்பவங்களை வரிசைக் கிரமமாகக் கூறுவதல்ல. சமூகம் பொருள்களை எவ்வாறு உற்பத்தி செய்கிறது, பொருள்களை எவ்வாறு விநியோகிக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, சம்பவங்களை விளக்குவதுதான் சரித்திரத்தின் நோக்கம். லோகாயத திருஷ்டியுடன் சம்பவங்களை ஆராய்ந்தால்தான் இந்த நோக்கம் நிறைவேறும். இதை மார்க்ஸ் தெளிவாக உணர்ந்தார். சரித்திர ரீதியான லோகாயத வாதம் மார்க்சின் சிருஷ்டி. இந்தத் தத்துவத்தை, 1843 ஆம் வருடத்திலிருந்து 1848 ஆம் வருடம் வரையில் மார்க்ஸ் வரைந்த நூல்களிலும், கட்டுரைகளிலும் நாம் காண்கிறோம்.

சமூக சரித்திரத்தை மார்க்ஸ் ஒரு புதிய திருஷ்டியுடன் ஆராய்ந்தார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திமுறை எவ்வாறு இருக்கிறது என்பதை அவர் பரிசீலனை செய்தார். உற்பத்தியையும், விநியோகத்தையும் நிர்வகிக்கும் வர்க்கம் எது என்பதை அவர் தெரிந்துகொண்டார். இந்த உற்பத்தி முறையிலிருந்து எழும் உற்பத்தி உறவுகளை அவர் ஆராய்ந்தார். உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டவர்கள் ஆதிக்கத்தில் இருப்பதால் சமூகத்தில் வர்க்க விரோதம் எவ்வாறு கூர்மையாகிறது என்பதை மார்க்ஸ் விளக்கினர். உற்பத்தி உறவிலிருந்து தோன்றும் சமூகம் எவ்வாறு இயங்குகிறது என்பதையும், வர்க்க வேற்றுமையை அடிப்படையாகக் கொண்ட சமூகம் எவ்வாறு அழிவை நோக்கி நகருகிறது என்பதை

யும் அவர் தெளிவு படுத்தினர். தனிச் சொத்துரிமை உலகில் இடம் பெற்ற தினத்திலிருந்து சுரண்டுதல் ஆரம்பமாயிற்று. அன்றிலிருந்து சுரண்டுவோரும் சுரண்டப்படுவோரும் இடைவிடாது அதிகாரத்திற்காகப் போர் புரிகின்றனர்கள். எனவே, எழுதப்பட்ட மனித சமூகத்தின் சரித்திரம் வர்க்கப் போராட்டத்தின் சரித்திரமாகும் என்ற முடிவுக்கு வந்தார் மார்க்ஸ். மார்க்ஸ் உலகத்திற்கு அளித்த செல்வம் சரித்திர இயல் லோகாயதம்.

மார்க்ஸ் எழுதின "ஜெர்மன் தத்துவம்" என்னும் நூல் 1846 ஆம் வருடம் வெளி வந்தது. அந்த நூலில் சரித்திர இயல் லோகாயதத்தை மார்க்ஸ் மேலும் விளக்கினர்.

"சமூக உற்பத்தி, சமூக உறவை நிர்ணயிக்கிறது. இந்த உறவுதான் பொருளாதார அமைப்பை வகுக்கிறது. உற்பத்தி உறவின் அஸ்திவாரத்தில்தான் சட்ட, அரசியல், மாளிகைகள் நிர்மாணிக்கப்படுகின்றன; உற்பத்திமுறை சமூக, அரசியல், ஆத்மார்த்திக வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. மனிதன் வாழ்க்கையை மனச்சாட்சி நிர்ணயிக்கவில்லை; ஆனல், சமூக வாழ்க்கைதான் மனச்சாட்சியை நிர்ணயிக்கிறது. வளர்ச்சியின் ஓர் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சமூகம் உற்பத்திமுறையுடன் முட்டி மோதுகிறது; இதைச் சட்ட பாஷையில் சொல்லுவதானல், சொத்துமுறையுடன் சமூகம் மோதுகிறது. ஏனெனில், உற்பத்தி சக்தியை வளர்ப்பதற்குப் பதிலாக உற்பத்தி உறவு வளர்ச்சியைத் தடுக்கிறது. அப்பொழுது சமூகப் புரட்சி ஆரம்பமாகும்" என்றார் மார்க்ஸ்.

உற்பத்தி முறையிலுள்ள முரண்பாடு வர்க்க விரோதத்தைக் கூர்மையாக்கும். இதனல் விரோதத் தன்மை படைத்த முரண்பாடு வளரும். இந்த விரோதம் எடுக்கும் கடைசி வடிவம்தான் முதலாளித்வ சமூகம். முதலாளித்வ சமூகம் மறைவதுடன் வர்க்கப் போராட்டமும் மறைந்துவிடும். ஏனெனில், முதலாளித்வ உற்பத்திமுறை உற்பத்தி சக்திகளை அமோகமாக வளர்த்திருக்கிறது. வளர்ச்சியின் சிகரத்தை அடைந்த உற்பத்தி சக்திகளைத் தனி முதலாளிகளால் நிர்வகிக்க முடியவில்லை. கூட்டு முறையில்தான்

இனி உற்பத்தி சக்திகளை நிர்வகிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. எனவே, முதலாளித்வ சகாப்தத்திற்குப் பிறகு சோஷலிஸ்டு சமூகம் மலரும்.

" உண்மை சோஷலிஸ்டுகளும்" (அன்றைய ஜெர்மன் சோஷலிஸ்டுகள்) நிலைமையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவில்லை. அரசியல் அசமத்வத்திற்கும், ஏனைய வேற்றுமைகளுக்கும் காரணம் பொருளாதார ஏற்றத் தாழ்வுதான் என்றும், தனிச் சொத்துமுறை ஒழிந்தால் இந்தத் துன்பங்கள் தீர்ந்துவிடு மென்றும் "உண்மை சோஷலிஸ்டுகள்" நம்பினர். ஆனால், ஒழுக்க உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுதான் விழுந்து கிடப்பவர்கள் செயலாற்ற வேண்டுமென்றும், என்னதான் நேர்ந்தாலும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாதென்றும், பலாத்காரப் போராட்டம் நடந்தால், போரின் முடிவில் இரண்டு கட்சிகளும் சுதந்திரத்தைப் பாதுகாக்கத் தவறு மென்றும் அவர்கள் கருதினர். மனித சமூகம் உண்மையான விடுதலை பெற வேண்டுமானால், சுதந்திரம், சமாதான ரீதியான பரிணமத்தால் தோன்ற வேண்டும். வர்க்க உணர்ச்சி வளருமுன் இந்த வேலையைச் செய்ய வேண்டுமென்று "உண்மைச் சோஷலிஸ்டுகள்" பூர்ஷுவாக்களை எச்சரித்தனர்.

மக்கள் அனைவரும்—முதலாளிகள் உட்பட—அறிவுக்குத் தலை வணங்குவார்கள் என்னும் நம்பிக்கையின் மீதும், தக்க சமயத்தில் முதலாளிகள் ஒழுக்க உணர்ச்சியால் உந்தித் தள்ளப்படுவார்க ளென்ற கருத்தின் மீதும், முதலாளிகள் தங்களிடமிருக்கும் அபரிமிதமான செல்வத்தை மனப்பூர்வமாக ஜனங்களிடம் ஒப்படைப்பார்கள் என்ற எண்ணத்தின் மீதும் "உண்மையான சோஷலிஸ்டுகள்" தங்கள் புது உலக மாளிகையைக் கட்டினர் என்றார் மார்க்ஸ். உண்மையில் இது இற்றுப்போன தத்துவம். ஆரம்பத்திலேயே மார்க்ஸ் இந்தக் கொள்கையை வன்மையாகக் கண்டித்தார். இதன் சாயத்தை வெளுக்க வைத்தது பிரெஞ்சுப் புரட்சி.

"உண்மைச் சோஷலிஸ்டுகளும்," மிதவாதிகளும், அனார்க்கிஸ்டுகளும், மானசிக வாதிகளும் தொழிலாளி

வர்க்கத்தைத் தவருன பாதையில் இழுத்துச் சென்றனர். மத்திய வர்க்கத்தின் நன்மையைப் பாதுகாப்பதற்காகத் தோன்றின இந்த இயக்கங்களை மார்க்ஸ் கண்டித்தார். ஏனெனில், அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் விரோதிகள்.

உழைக்கும் சக்தி முதலாளிகளுக்குத் தேவையாக இருக்கும் வரையில் அவர்கள் தொழிலாளர்களை அடிமைப் படுத்துவார்கள். எனவே, உற்பத்திச் சாதனங்கள் சமூகத்திற்குச் சொந்தமாக்கப்படாத வரையில் மனித சமூகம் விடுதலையைக் குறித்துக் கனவுகூடக் காண முடியாது.

மனிதன் சுயேச்சையை விரும்புகிறவன்; ஆக்கும் சக்தி படைத்தவன். இந்த அம்சம் மங்கி இருக்கிறது என்றுல், அதற்குக் காரணம், புராதனக் கம்யூனிஸ்டு சமூக அமைப்பு மறைந்த பிறகு தோன்றின சமூக நியதிதான். இந்தச் சமூக நியதி எவ்வாறு உருவெடுத்தது?

"கேவலமான உணர்ச்சியாலும், ஆபாசமான துராசையாலும், மிருகத்தனமான விகாரத்தாலும், அழுக்குப்படிந்த பேராசையாலும், சுய நலம் படைத்த களவாலும் பொதுச் சொத்துத் திருடப்பட்ட பிறகு தோன்றின, புதிய வர்க்கங்கள். வர்க்க வேற்றுமையற்ற ஜென்ஸ் சமூகம் மிகக் கேவலமான முறைகளால்—களவு, பலாத்காரம், தந்திரம், துரோகம் முதலிய முறைகளால் — வீழ்த்தப் பட்டது.

"ஒரு முறை மாத்திரம்தான் தோன்றவில்லை; ஜென்களின் பொதுச் சொத்தைத் திருடின பிறகு தோன்றின தனிச் சொத்தைப் பாதுகாக்க ஒரு ஸ்தாபனம் தோன்றவில்லை; முந்தின காலத்தில் ஹிருதய பூர்வமாக ஜனங்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட தனிச் சொத்துமுறை புனிதமானதென்றும், இந்தப் புனிதமான தனிச் சொத்து முறையைப் பாதுகாப்பதுதான் மனித சமூகத்தின் முழு முதற் கடமையென்றும் கோஷிப்பதற்கு ஒரு ஸ்தாபனம் இருக்கவில்லை. சட்ட ரீதியாகச் சொத்துச் சேர்க்க அனுமதி அளிக்கவும், படிப்படியாக வளர்ந்து வரும் புதிய முறையை ஏற்றிப் போற்றவும் ஒரு ஸ்தாபனம் இருக்க

வில்லை. புதிதாகப் பிறந்த வர்க்கப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனம் தோன்றவில்லை; இல்லாத வர்க்கத்தைச் சுரண்டவும், அந்த வர்க்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவும் இருக்கும் வர்க்கத்திற்கு உரிமை அளிக்கும் ஸ்தாபனம் பிறக்கவில்லை. இத்தகைய ஸ்தாபனம் கண்டுபிடிக்கப் பட்டது : சர்க்கார் பிறந்தது'' என்கிறார் ஏங்கல்ஸ். (''குடும்பம், தனிச் சொத்து, சர்க்கார் ஆகியவைகளின் பிறப்பு'' பக்கம் 118).

தனிச் சொத்துமுறை உலகில் தோன்றின பிறகு இருக்கும் வர்க்கம், இல்லாத வர்க்கத்தை அசாதாரண வெறியுடன் சுரண்ட ஆரம்பித்தது. சுரண்டுதலின் வேகம் நாள்தோறும் அதிகரித்தது.மனிதன் வேற்றுமை யற்ற ஒரு சமூகத்தைச் சிருஷ்டிக்கும் வரையில் இது நிலைத்திருக்கும். அரசியல் முறையை மாற்றுவதன் மூலம் மனித சக்தியை வளர்க்க முடியுமென்று மானசிக வாதிகள் நம்பினர். அத்தகைய ஒரு முயற்சியாக அவர்கள் பிரெஞ்சுப் புரட்சியை மதித்தனர். வளர்ந்து வரும் முதலாளிகளுக்குக் குறுக்கே நின்றது பிரபுத்வம். அந்த முறை ஒழிந்தால் தான் உற்பத்தி சக்தியைப் பெருக்க முடியுமென்பது முதலாளிகளுக்குத் தெரியும். எனவே, அவர்கள் முதலாவது பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தார்கள். பிரெஞ்சுப் புரட்சி, பிரபுத்வத்தை அழித்தது; முதலாளித்வ சகாப்தத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது.

அழியும் வர்க்கம் பழைய உருவத்தில் மீண்டும் உருவெடுக்க முடியாது. சரித்திரச் சக்கரம் பின்னுக்குத் திரும்பாது. சரித்திரத்தின் ஆக்ரமிப்பு முடிவானது. எனவே, சரித்திர வளர்ச்சியைத் தெரிந்து கொண்டால் தான் பயனுள்ள அரசியல் வேலையைச் செய்ய முடியும். புராதனக் கம்யூனிஸ்டு சகாப்தம் அடிமைச் சகாப்தத்திற்கும், அடிமைச் சகாப்தம் பிரபுத்வ சகாப்தத்திற்கும், பிரபுத்வ சகாப்தம் முதலாளித்வ சகாப்தத்திற்கும் இடமளித்தன. இந்த மாற்றத்தைத் தெளிவாக வர்ணிக்கிறது சரித்திரம்.(சோவியத் யூனியனில் முதலாளித்வச் சகாப்தம் சோஷலிஸ்டு சகாப்தத்திற்கு இடமளித்தது. மனித சமூகத்தின் வளர்ச்சியில் இது ஐந்தாவது படி) இந்த

மாற்றங்கள் அமைதியாக, சாத்வீக முறையில் ஏற்பட வில்லை. உக்ரமான யுத்தங்களுக்கும், மகத்தான புரட்சிகளுக்கும் பிறகு தான் சமூகம் பழமைக்கு விடை கொடுத்தது. அமூலிலுள்ள எந்த முறையும் தானாகவே வேறொரு முறைக்கு அடிபணியாது. அடிபணியும்படி அதை நிர்ப்பந்தப்படுத்த வேண்டும்.

இன்று ஒரு வர்க்கம் தாழ்ந்த நிலையில் இருக்கிறது. அதுதான் உற்பத்திச் சாதனங்களற்ற உழைக்கும் வர்க்கம். உழைக்கும் சக்தியை—மனித சக்தியை—விற்று அது உயிர் வாழுகிறது. இந்த வர்க்கம் விடுதலை பெற்றால் சமூகமே விடுதலை பெறும். இந்த வர்க்கம் விடுதலைக்காகப் போர் புரியும்பொழுது முதலாளிகள் தங்களுடைய எல்லாச் சக்திகளையும் உபயோகித்து இந்த வர்க்கத்தை எதிர்ப்பார்கள். எனினும், இந்தப் போரில் முதலாளிகள் தோல்வி அடைவார்கள். ஏனெனில், முதலாளித்வம் அழியும் சக்தி; தொழிலாளி வர்க்கம் வளரும் சக்தி. பிரபுத்வத்துடன் போர் புரிந்து, பூர்ஷுவாக்கள் எவ்வாறு வெற்றி பெற்றார்களோ அதே போன்று சுயசிரம ஜீவிகள் பூர்ஷுவாக்களை எதிர்த்துப் போர் புரிந்து,வெற்றி பெறுவார்கள்.(இதற்குச் சான்று சோவியத் யூனியன்) இது சரித்திரத்தின் தீர்ப்பு. இதற்குமுன் நடந்த சமூகப் புரட்சிகளுக்குப பிறகு வெற்றி பெற்ற வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றியது. புதிய வர்க்கம் அதிகாரத்திற்கு வந்த அதே நிமிடத்தில் அதை எதிர்க்கும் வர்க்கமும் உருவெடுத்தது. ஆனால், சுயசிரம ஜீவிகள் நடத்தும் போராட்டம் இறுதி வர்க்கப் போராட்டமாக இருக்கும். ஏனெனில், சோஷலிஸ்டு சமூகம் வர்க்க வேற்றுமைக்கு முடிவாக முற்றுப்புள்ளி வைக்கும். மனித சமூகத்தின் சரித்திரத்தை இந்தத் திருஷ்டியுடன் பார்க்க மார்க்ஸ் மனித சமூகத்திற்கு உதவி புரிந்தார். "நவீனப் பொருளாதார சாஸ்திரத்தின் தந்தை—சிறப்பாக, நவீன சமூக சரித்திரத்தின் தந்தை—என்று ஒரு தனி மனிதரைச் சுட்டிக் காட்ட முடியுமானால் அது காரல் மார்க்சாகத்தான் இருக்க முடியும்." என்கிறார் பெர்லின். சரித்திர ரீதியான லோகாயதம் சரித்திர உலகில் தலைகீழ் மாற்றத்தை உண்டுபண்ணிற்று.

அன்று "வோர்வாட்ஸ்" என்னும் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார் மார்க்ஸ். ஜெர்மன் சர்க்காரை அவர் தயவு தாக்ஷண்யமின்றிக் கண்டித்தார். ஜெர்மானிய மன்னர் மீது துவேஷத்தை உண்டுபண்ணும் கட்டுரைகள் எழுதினதற்காக மார்க்ஸ் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஜெர்மன் சர்க்கார் பிரெஞ்சு சர்க்காரைக் கேட்டுக் கொண்டது. 1845-ஆம் வருடம் குய்ஸோட் சர்க்கார் மார்க்ஸையும், பக்கூனினையும் தேசப் பிரஷ்டம் செய்தது. இந்த உத்தரவைக் கண்டித்துப் பிரெஞ்சு சோஷலிஸ்டு பத்திரிகைகள் கிளர்ச்சி செய்தன. ஆனல், இந்தக் கிளர்ச்சியைச் சட்டை செய்யவில்லை, பிரெஞ்சு சர்க்கார். எனவே, பக்கூனின் சுவிட்ஜர்லாந்துக்குச் சென்ருர்; மார்க்சும், அவர் மனைவியும், ஒரு வயதுக் குழந்தையும் புருஸ்ஸல்சுக்குச் சென்ருர்கள். புருஸ்ஸல்சுக்கு மார்க்ஸ் சென்ற சில நாட்களில் ஏங்கல்சும் அங்கே சென்ருர். அப்பொழுது மார்க்ஸ் சரித்திர வியல் லோகாயத சாஸ்திரத்தை ஏங்கல்சுக்குத் தெளிவாக விளக்கிஞர். அங்கிருந்த ஜெர்மன் தொழிற் சங்கத்துடன் மார்க்சுக்குத் தொடர்பு ஏற்பட்டது. அத்துடன் அவர் திருப்தி அடையவில்லை. அவர் பெல்ஜிய சோஷலிஸ்டுகளையும், இதர நாட்டுச் சோஷலிஸ்ட்டுகளையும் சந்தித்தார். அவர்களுடன் நெருங்கின தொடர்பு வைத்துக் கொண்டார். பெல்ஜியத் தொழிலாளர்களின் வர்க்க உணர்ச்சியைத் தட்டி எழுப்பவும் அவர் பெரு முயற்சி செய்தார். புரட்சி சக்திகளை ஒன்று படுத்தவும் அவர் முயன்ருர். ஏனெனில், விரைவில் ஐரோப்பாவில் புரட்சிப் புயல் வீசுமென்று மார்க்ஸ் கருதிஞர். எனவே, வரவிருக்கும் புரட்சியில் தொழிலாளி வர்க்கம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொற் பொழிவுகள், கட்டுரைகள் மூலம் அவர் விளக்கிஞர்.

ஆயுதந் தாங்கின சமூகப் புரட்சியின் மூலம்தான் சோஷலிஸ்டு சமூகத்தைச் சிருஷ்டிக்க முடியும் என்பதை மார்க்ஸ் தெளிவாக உணர்ந்தார். இந்த முடிவுக்கு அவர் என்று வந்தாரோ, அன்றிலிருந்து தொழிலாளி வர்க்கத்தை ஒன்றுபடுத்துவதிலும், போருக்கு அந்த வர்க்கத்தைத் தயார் செய்வதிலும் மார்க்ஸ் கவனம் செலுத்திஞர்.

அதனால்தான் ஆரம்பத்திலிருந்தே மார்க்சின் வாழ்க்கை, புரட்சியின் சரித்திரத்துடன் பின்னிக் கிடக்கிறது. மார்க்ஸ் ஒரு லட்சியத்தை உருவகப்படுத்த இடைவிடாது உழைத்தார். எனவே, மார்க்சின் சரித்திரத்தைக் கம்யூனிஸத்தின் சரித்திரம் என்று சொல்வது மிகையாகாது. இரண்டும் பிரிக்க முடியாதவை.

1836ஆம் வருடம் பாரிஸில் வசித்த ஜெர்மன் புரட்சிக்காரர்கள் "லீக் ஆப் திஜஸ்ட்" என்னும் புரட்சிக் கட்சியை ஸ்தாபித்தனர். 1864ஆம் வருடம் பிறந்த முதலாவது இண்டர் நேஷனலின் முன்னோடி இது. அதி விரைவில் இந்த ஸ்தாபனத்தின் கிளைகள் பல நாடுகளில் தோன்றின. 1840ஆம் வருடம் பெப்ரவரி மாதம் லண்டனில் "ஜெர்மன் தொழிலாளர் கல்வி மன்றம்" பிறந்தது. இந்த இயக்கத்திற்குக் கம்யூனிஸ்டுகள் தலைமை தாங்கினர். சுவிட்ஜர்லாந்தில் வீட்லிங் தலைமையில் புரட்சிக் கட்சி பிறந்தது. அதி விரைவில் சர்வதேசத் தொழிலாளர் புரட்சி இயக்கமாக "ஜெர்மன் தொழிலாளர் கல்வி மன்றம்" பரிணமித்தது. இந்த ஸ்தாபனத்திற்குப் பாரிஸ் புரட்சிக்காரர்களுடனும், ஏனைய நாட்டுப் புரட்சிக்காரர்களுடனும் நெருங்கிய தொடர்பு இருந்தது. புரட்சியையே தொழிலாகக் கொண்ட வில்லியம் வீட்லிங், வில்லியம் உல்ப் போன்ற புரட்சி வீரர்கள் இந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகித்தனர்.

சர்வதேசப் புரட்சிக் கட்சியை ஸ்தாபிக்க மார்க்ஸ் முயன்றார். அன்று லண்டனில் வேலை செய்து வந்த "ஜெர்மன் தொழிலாளர் கல்வி மன்றம்" மார்க்ஸை ஆதரிக்க முன் வந்தது. புரட்சித் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட பல வீரர்கள் அந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகித்தனர். மார்க்சின் பெருமையை உணர்ந்த சில தொழிலாளர் தலைவர்களும் மார்க்சுடன் ஒத்துழைக்க முன் வந்தனர். அச்சுத் தொழிலாளி ஷாபரும், சக்கிலியர் பாயரும், கடிகாரம் சீர்படுத்தும் மோலும் மார்க்ஸை ஆதரித்தனர். இவர்கள் பிரபல தொழிலாளர் தலைவர்கள். "ஜெர்மன் தொழிலாளர் கல்வி மன்ற"த் தலைவர்களைச் சந்திப்பதற்காக மார்க்சும், எங்கல்சும் லண்டனுக்குச்

சென்றனர். உணர்ச்சியால் துடிக்கும் தொழிலாளர் களுடன் மார்க்ஸ் அரசியல் பிரச்னைகளை விவாதித்தார். அந்தச் சந்திப்பிற்குப் பிறகு "கம்யூனிஸ்டு லீக்" பிறந்தது. மார்க்ஸ் தலைமையில் "கம்யூனிஸ்டு லீக்" சுறுசுறுப்புடன் வேலை செய்தது.

1847 ஆம் வருடம் "லீகின்" முதல் காங்கிரஸ் லண்டனில் நடந்தது. இந்தக் காங்கிரஸில் மார்க்ஸ், எங்கல்ஸ், வில்லியம் உல்ப் முதலியோர் கலந்து கொண்டனர். "லீகின்" பெயர் மாற்றப்பட்டது; "கம்யூனிஸ்டு லீக்" என்னும் புதிய பெயர் ஸ்வீகரிக்கப்பட்டது.

புதிய கட்சியின் கொள்கைகளையும், திட்டங்களையும் விளக்கி ஒரு அறிக்கை தயார் செய்யும்படி "கம்யூனிஸ்டு லீக்" மார்க்ஸைக் கேட்டுக் கொண்டது. இந்தப் பொறுப்பை மார்க்ஸ் ஏற்றார்.

"முதலாளித்வத்தைக் கவிழ்ப்பதும், சுய சிரம ஜீவிகள் ஆட்சியை ஸ்தாபிப்பதும், வர்க்க விரோதத்தை அடிப்படையாகக் கொண்ட பழைய முதாலாளித்வ சமூகத்தை அழிப்பதும், வர்க்க வேற்றுமையும், தனிச் சொத்து உரிமையும் இல்லாத புதிய சமூகத்தை ஸ்தாபிப்பதும் கம்யூனிஸ்டு லீகின் நோக்கம்" என்கிறது முதல் சட்டம். புதிய ஸ்தாபனத்திற்கு ஜனநாயக முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய சட்ட திட்டம், பிரதிநிதிகள் முன் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கப் பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பிறகு 1847 ஆம் வருடம் டிசம்பர் மாதம் எட்டாம் தேதி மார்க்ஸ் தயாரித்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து அவர் "கம்யூனிஸ்டு மானிபெஸ்டோ"வையும் எழுதினர். இது விலை மதிக்க முடியாத பொக்கிஷம். தளர்ந்து விழுந்து கிடந்த மக்களை எழுந்து நிமிர்ந்து நிற்கும்படி செய்த பெருமை இந்த அறிக்கையைச் சார்ந்தது. மக்கள் உள்ளத்தில் உணர்ச்சியையும், சிந்தனையில் தெளிவையும், கடமையில் உறுதியையும் உண்டுபண்ணிற்று இந்த அறிக்கை. இது சிந்தனையைக் கிண்டிக் கிளறிற்று; சிந்தனைக்கு விருந்தளித்தது. தத்து

வத்தையும், அனுஷ்டானத்தையும் இணைக்க வேண்டிய அவசியத்தை இது வலியுறுத்திற்று. இது மனித சமூகத்தின் சரித்திரத்தையும், மனித சமூகத்தின் எதிர்காலத்தையும் தெளிவாக விளக்குகிறது. இந்த யாதாஸ்தை, "எழுதப்பட்ட மனித சமூகத்தின் சரித்திரம் வர்க்கப் போராட்டத்தின் சரித்திரமாகும்'' என்னும் வாசகத்துடன் ஆரம்பித்து, "உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்!" என்னும் சுலோகத்துடன் முடிக்கிறார் மார்க்ஸ்.

இந்த யாதாஸ்து, புரட்சி இயக்கத்திற்குப் புதிய சக்தி அளித்தது. பல தியாகிகளுக்கு வழிகாட்டியாகவும், பல வீரர்களுக்குத் தோழனாகவும் விளங்குகிறது இந்த யாதாஸ்து. இது தொழிலாளி வர்க்கத்திற்கு உற்சாக மளித்தது; முதலாளிகளை நடுங்க வைத்தது.

மனித சமூகம் இரண்டு பிரிவுகளாக—சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்ற பிரிவுகளாக—எவ்வாறு பிரிந்தது என்பதை மார்க்ஸ் விளக்குகிறார். புதிய உற்பத்தி முறை, பொருளாதார உறவைப் புதிய முறையில் மாற்றி அமைத்தது. இதைத் தொடர்ந்து அரசியல், கலை, பழக்க வழக்கம் முதலியன மாறின. முதலாளித்வ சர்வாதிகார ஆட்சியின் பிரதிபிம்பம்தான் நவீன சர்க்கார். உண்மையில் முதலாளிகளின் விவகாரங்களைத் திறமையாக நிர்வகிக்கும் ஒரு நிர்வாக சபைதான் சர்க்கார்.

வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் பிரபுத்வ சமூகத்தை மிதித்துத் தேய்த்ததன் மூலம் முதலாளித்வம் ஓர் முற்போக்கான வேலையைச் செய்தது. சரித்திரம் முதலாளித்வத்திற்கு இட்ட கட்டளை இது. பிரபுத்வம் அழிந்த பிறகுதான் மனிதனுடைய உற்பத்தி சக்தி அதிகரித்தது. ஆனால், முதலாளித்வம் சுரண்டும் முறைக்கு விடை கொடுக்கவில்லை; அதற்குப் பதிலாக அதைக் கூர்மையாக்கிற்று. வர்க்க விரோதம் புதிய உருவெடுத்தது. வளர்ந்து வரும் மனித சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாததால் பிரபுத்வம் அழிந்தது. இதே நிலையில்தான் முதலாளித்வமும் இருக்கிறது. உற்பத்தி

முறைக்கும், உற்பத்தி உறவுக்குமுள்ள முரண்பாடு முதலாளித்வத்தின் நிலையை ஆபத்திற்கு உள்ளாக்குகிறது. இதற்கு எடுத்துக்காட்டு, தொடர்ச்சியாக ஏற்படும் நெருக்கடிகள். உற்பத்திச் சாதனங்களை நிர்வகிக்க முதலாளித்வம் தகுதியற்றது என்பதைப் பொருளாதார நெருக்கடிகள் வலியுறுத்துகின்றன. பொருளாதார நெருக்கடிகள் முதலாளித்வத்தைக் குலுக்குகின்றன. இதன் பயனாக, மனித சக்தி வீணாக்கப்படுகிறது; பொருள் கள் வேண்டுமென்றே அழிக்கப்படுகின்றன. இந்த நெருக்கடி அடிக்கடி ஏற்படுகிறது. இந்த நெருக்கடிச் சுழலிலிருந்து சமூகம் விடுபட வேண்டும்; சமூகம் நிச்சயமாக விடுபடும்.

முதலாளித்வ உற்பத்திமுறை தொழிலாளி வர்க்கத்தைச் சிருஷ்டித்தது; தொழிலாளர்களை ஒன்று படுத்திற்று; கூட்டு வாழ்க்கையைக் கற்றுக் கொடுத்தது. ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட இந்த வர்க்கம், வர்க்க உணர்ச்சியில் வளர்ந்த இந்த வர்க்கம், முதலாளித்வத்தின் ஈமக் கடனைச் செய்யும்!

முதலாளித்வம் தன் விரோதிகளை எளிதில் அழித்தது. ஆனால், முதலாளித்வத்தின் பரம விரோதியை முதலாளித்வத்தால் அழிக்க முடியவில்லை. அதற்குப் பதிலாக தொழிலாளி வர்க்கம் வளருகிறது; பக்குவம் அடைகிறது. சர்வதேச ரீதியிலே ஒன்றுபடும் முதலாளிகளை, சர்வதேச அரங்கத்தில் எதிர்த்து முறியடிக்கத் தொழிலாளி வர்க்கமும் சர்வதேச ரீதியில் ஒன்றுபடும். இதை உலகில் யாராலும் தடுக்க முடியாது. இவைகளையெல்லாம் மிகத் தெளிவாக விளக்கினார் மார்க்ஸ்.

தனிச் சொத்துமுறை ஒழிந்தால் மதம், கலை, ஒழுக்கம் முதலியன அழிந்து விடுமென்று யதாபூர்விகள் ஓலமிட்டனர்! எந்த மதத்தை, எந்தக் கலையை, எந்த ஒழுக்க நியதியைப் புதிய சமூகம் அழிக்கும்? மனிதனுக்கு அபினியாக விளங்கும் மதத்தையா? ஓய்வு பெறும் வர்க்கத்தின் ஏக போக உரிமையாக விளங்கும் கலையையா? கலையின் பெயரில் இழைக்கப்படும் அநீதியையா? முதலாளித்வ

ஒழுக்க நியதியையா? மனிதன் உணவை மனிதன் பறிக்கும் நீதியையா? ஆம்; இவைகளையெல்லாம் புதிய சமூகம் அழித்தொழிக்கும். முதலாளித்வ மதத்திற்கும், கலைக்கும், ஒழுக்கத்திற்கும் புதிய சமூகம் விடை கொடுக்கும். அதற்குப் பதிலாக வர்க்க வேற்றுமையற்ற சமூகத்திற்கு உகந்த கலை, நாகரிகம், ஒழுக்க நியதி முதலியவைகளை சோஷலிஸ்டு சமூகம் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரும்.

புரட்சி எல்லா இடங்களிலும் ஏக காலத்தில் நடைபெறுமென்று மார்க்ஸ் கருதவில்லை. பல்வேறு நாடுகளில் பல்வேறு உருவங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் புரட்சிப் புயல் வீசும். புரட்சி வெற்றிபெற்ற பிறகு சோஷலிஸ்டுகள் என்ன செய்யவேண்டும் என்பதை மார்க்ஸ் தெளிவு படுத்தினார். புரட்சி வெற்றிபெற்றதும் உற்பத்திச் சாதனங்கள், (தொழிற்சாலைகள், சுரங்கம் நிலம் முதலியன) போக்குவரத்துச் சாதனங்கள் முதலியன பொதுவாக்கப்படவேண்டும். பரம்பரைப் பாத்தியதையை ரத்துச்செய்து விடவேண்டும். உற்பத்தி சக்திகளைப் பெருக்கத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். நகரங்களையும் கிராமங்களையும் (தொழிலாளர்களையும், விவசாயிகளையும்) பிரிக்கும் சுவரை இடித்துத் தகர்க்க வேண்டும். கட்டாய வேலை, வேலைக்கு உத்தரவாதம், இலவச ஆரம்பக் கல்வி ஆகியவைகளை உடனே அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். எல்லோருக்கும் வேலையும், உணவும் அளிக்கும் பொறுப்பைப் புதிய சமூகம் ஏற்க வேண்டும். சமூகம், புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும். அதன் பிறகு சமூகம் நிரந்தரமான இன்பத்தை நோக்கி நகரும்.

இந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் ஸ்தானம் என்ன என்பதையும் மார்க்ஸ் தெளிவு படுத்துகிறார். "உலகிலுள்ள தொழிலாளி வர்க்கத்தின் கட்சிகளில் கம்யூனிஸ்டு கட்சிதான் உறுதிபடைத்த, மிக முற்போக்கான கட்சி" என்கிறார் மார்க்ஸ். கம்யூனிஸ்டு கட்சி தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்பதை மார்க்ஸ் தெளிவாக விளக்குகிறார். "சுயசிரம ஜீவிகளை வர்க்க அடிப்படையில்

ஒன்று திரட்டுவதும், முதலாளித்வ ஆதிக்கத்தை அழித் தொழிப்பதும், சுயசிரம ஜீவிகள் அதிகாரத்தைக் கைப் பற்றுவதும்தான் கம்யூனிஸ்டுகளின் உடனடியான நோக் கம்" என்கிறார் மார்க்ஸ். அதன்பிறகு கம்யூனிஸ்டுகளின் போர் முறைகளை அவர் வர்ணிக்கிறார். "கம்யூனிஸ்டுகள் தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான நோக்கங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்காகப் போர் புரிகிறார் கள். ஆனால், இன்றைய இயக்கத்தில், அவர்கள் எதிர்கால இயக்கத்தைப் பாதுகாக்கிறார்கள்."

அரைகுறை சோஷலிஸ்டுகளைக் கம்யூனிஸ்டு மானி பெஸ்டோ வன்மையாகக் கண்டித்தது. அத்துடன் குறு கின தேசீயத்தின் பெயரால் தொழிலாளர்களை ஏமாற்ற அரைகுறை சோஷலிஸ்டுகள் செய்யும் முயற்சிகளையும் மார்க்ஸ் அழுத்தமாகக் கண்டித்தார். "தொழிலாளர்கள் தங்களைப் பிணைத்திருக்கும் சங்கிலிகளைத் தவிர வேறெதை யும் இழப்பதற்கில்லை. அவர்கள் ஜெயிப்பதற்கு ஒரு உல கம் இருக்கிறது. "உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்!" என்னும் பிரசித்திபெற்ற சுலோகத்துடன் இந்த யாதாஸ்தை முடிக்கிறார் மார்க்ஸ்.

மார்க்ஸ் வேறு ஒரு புத்தகம் எழுதவில்லையென்றால் கூட உலகம் உள்ள அளவும் அவர் பெருமை நிலைத்திருப் பதற்கு இந்த அறிக்கையே போதும். இத்தகைய பெரு மையும், சிறப்பும் வாய்ந்த ஒரு அரசியல் அறிக்கையைத் தயாரித்ததற்காக பெல்ஜிய சர்க்கார் அவரைக் கௌர விக்க முடிவு செய்தது! பெல்ஜிய சர்க்கார் மார்க்ஸைத் தேசப் பிரஷ்டம் செய்தது. இது நடந்த மறுதினம் பாரி ஸில் புரட்சி ஆரம்பமாயிற்று. புரட்சி நகரத்திற்கு உடனே வரும்படி புதிய சர்க்காரில் அங்கம் வகித்த பிளாக்கோன் மார்க்ஸை அழைத்தார். மார்க்ஸ் பாரிஸுக்குச் சென்றார்.

நான்காம் அத்தியாயம்

1848ஆம் வருடம் மனித சமூகத்தின் சரித்திரத்தில் மிக முக்கியமான வருடம். அந்த வருடம் ஐரோப்பா முழுதும், புரட்சிஅலை பொங்கி எழுந்தது. எனினும், "புரட்சியின் தோல்வி சகாப்தம்!" என்று அந்தக் காலத்தை அழைக்கிறார் மார்க்ஸ். "ஆனால், தோல்வியில் மடிந்தது புரட்சி அல்ல; புரட்சிக்கு முந்தின சம்பிரதாயச் சங்கிலிகள்தான் அறுந்தன" என்கிறார் மார்க்ஸ்.

1838ஆம் வருடம் ஜூலை மாதம் நடந்த புரட்சிக்குப் பிறகு பாங்கர்கள், ரயில்வே அரசர்கள், சுரங்கங்களின் சொந்தக்காரர்கள் முதலியோர் பிரான்ஸை ஆண்டனர். ஆனால், முதலாளித்வத்தின் இன்னொரு பகுதி—தொழிற்சாலை முதலாளிகள்—இந்த ஆட்சி முறையை எதிர்த்தனர். இவர்கள் சிறுபான்மையோர்.

மத்திய வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும் அரசியல் அதிகாரத்தில் பங்கு இருக்கவில்லை. ஜூலை முடியாட்சி பெரிய முதலாளிகளின் தயவில் இருந்ததால் மத்திய வர்க்கமும், தொழிற்சாலை முதலாளிகளும் அவர்களைச் சார்ந்து நின்றவர்களும் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.

இங்கிலாந்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பிரான்ஸைப் பெரிதும் பாதித்தது. பிரான்ஸில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பெரிய முதலாளிகளின் ஆட்சியை உலுக்கிற்று. தேர்தல் முறையில் மாற்றம் ஏற்பட வேண்டுமென்று தொழிற்சாலை முதலாளிகள் கிளர்ச்சி செய்தனர். தேர்தல்முறை விரிவடைந்தால், அதிகாரத்தை எளிதில் கைப்பற்றி விடலாமென்று கருதினர், தொழிற்சாலை முதலாளிகளும் மத்திய வகுப்பாரும். எனவே, பெப்ரவரி மாதம் பாரிஸ் தொழிற்சாலை முதலாளிகளும், மத்திய வகுப்பாரும் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்

தெழுந்தனர். இந்தக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிற்று, தொழிலாளி வர்க்கம். பெப்ரவரி புரட்சி வெற்றி பெற்றது; தற்காலிகச் சர்க்கார் ஏற்பட்டது.

தற்காலிகச் சர்க்காரில், பெப்ரவரி புரட்சியில் தலைமை வகித்த எல்லாக் கட்சிகளும், வர்க்கங்களும் அங்கம் வகித்தன. ஆனால், இந்தக் கட்சிகளின் நோக்கங்கள் மாறுபட்டவை. தற்காலிகச் சர்க்காரில் பெரும்பான்மையோர் முதலாளித்வத்தின் பிரதிநிதிகள். அந்தச் சர்க்காரில் இரண்டு தொழிலாளர்களின் பிரதிநிதிகள்தான்—லூயி பிளாங், ஆல்பர்ட்—இருந்தனர். எனவே, முதலாளிகள் தங்கள் வழியில் சென்றனர். ஆனால், பாரிஸ் தொழிலாளர்கள் சும்மா இருக்கவில்லை.

"போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். ஆயுத பலத்துடன் குடியரசைப் பிரகடனப்படுத்த அவர்கள் முடிவு செய்தனர். இந்தச் செய்தியுடன் ஹோட்டல் தெவிலுக்குச் சென்றார் ராஸ்பெல். குடியரசைப் பிரகடனப்படுத்தும்படி பாரிஸ் தொழிலாளர் சார்பில் அவர் தற்காலிகச் சர்க்காருக்குக் கட்டளை இட்டார். ஜனங்களின் இந்த உத்தரவை இரண்டு மணி நேரத்தில் நிறைவேற்றவில்லையென்றால், இரண்டு லட்சம் ஜனங்களுடன் தாம் திரும்பிவர நேருமென்று அவர் சர்க்காரை எச்சரித்தார். புரட்சியில் உயிர் நீத்தவர்களின் தேகங்கள் இன்னும் விறைக்கவில்லை; வழி அடைப்புகள் இன்னும் நீக்கப்படவில்லை; தொழிலாளர்கள் இன்னும் நிராயுதபாணிகளாக்கப்படவில்லை; தொழிலாளர்களை அன்று எதிர்க்கக் கூடிய சக்தி நேஷனல் கார்டுதான். இந்த நிலையில், தற்காலிகச் சர்க்காரின் சட்டப் பேச்சு மறைந்தது. இரண்டு மணி நேரம் இன்னும் ஆகவில்லை. அதற்குள், "பிரெஞ்சுக் குடியரசு வாழ்க! சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்! என்னும் சுலோகங்கள் பாரிஸ் முழுதும் முழங்கின, எதிரொலித்தன" என்கிறார் மார்க்ஸ். ("பிரான்சில் வர்க்கப் போராட்டம்")

முதலாளிகள் எண்ணத்தில் மண் விழுந்தது. அவர்கள் குறுகின தேர்தல் முறையை விரும்பினர். ஆனால், புதிய குடியரசு சர்வஜன ஓட்டு முறையை அமுலுக்குக்

கொண்டு வந்தது. அதன்பிறகு, தொழிலாளி வர்க்கம் சுதந்திர அரசியல் கட்சியாகப் பாரிஸ் அரங்கத்தில் தோன்றியது. அதைத் தொடர்ந்து தொழிலாளி வர்க்கம் நேரடியான செயலில் ஈடுபட்டது.

புதிதாகத் தோன்றிய தற்காலிகச் சர்க்கார் எல்லோருக்கும் வேலை கொடுக்க இசைந்தது. இந்த வாக்குறுதியைத் தற்காலிகச் சர்க்கார் மறந்ததும், இருபதாயிரம் தொழிலாளர்கள் சர்க்கார் காரியாலயத்தை முற்றுகை இட்டனர். "உடனே தொழில் மந்திரியை நியமிக்க வேண்டும்!" என்று கோரினார்கள், தொழிலாளர்கள். அரை மனத்துடன் தற்காலிகச் சர்க்கார் இதற்கு இசைந்தது.

முதலாளிகளுடன் சேர்ந்து பெப்ரவரி புரட்சியில் போர் புரிந்தார்கள் தொழிலாளர்கள். புரட்சிக்குப் பிறகு முதலாளிகள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முயன்றனர்; ஆனால், தொழிலாளர்களும் தங்கள் உரிமைகளை முன்னுக்குத் தள்ள முயன்றனர். இந்த இரண்டு வர்க்கங்களின் நன்மைகளும் நேர் விரோதமானவை. மூலதனமின்றி முதலாளிகள் இயங்க முடியாது; முதலாளித்வ சமூகமும் இயங்க முடியாது. தொழிலாளியின் உழைக்கும் சக்தியைச் சுரண்டாமல் மூலதனம் இயங்க முடியாது. இந்த முரண்பாடு விரோதத் தன்மை உடையது. முதலாளித்வத்தை வீழ்த்தினால்தான் இந்த முரண்பாடு தீரும்.

தற்காலிகச் சர்க்காரின் நிலை ஆபத்தாயிற்று. கடன் தொல்லை அதிகரித்தது; பொக்கிஷம் காலியாயிற்று. எனவே, புதிய சர்க்கார் புதிய வரி விதிக்க முடிவு செய்தது. இந்தப் புதிய வரி முதலாளிகளைப் பாதிக்கவில்லை; ஆனால், விவசாயிகளைப் பெரிதும் பாதித்தது.

ஆயுதமேந்தின தொழிலாளி வர்க்கம் சர்க்கார் கண்களை உறுத்திக்கொண்டிருந்தது. முதலாளித்வத்தால் மாத்திரம் இந்தச் சக்தியை முறியடிக்க முடியாது. எனவே, தொழிலாளி வர்க்கத்திடையே பிளவை உண்டுபண்ண முடிவு செய்தது, சர்க்கார்.

தற்காலிகச் சர்க்கார் இருபத்து நாலாயிரம் சிப்பாய்களைக் கொண்ட "மோபைல் கார்டை"ச் சிருஷ்டித்தது.

இருபது வயதிற்கு உட்பட்ட வாலிபர்களைக் கொண்டது இந்தப் படை. இந்த வாலிபர்கள் சமூகத்தின் மிக மிகக் கீழ் நிலையில் இருப்பவர்கள்; கல்வி அறிவற்றவர்கள்; குறிப்பிட்ட தொழில் இல்லாதவர்கள். இவர்களுக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இவர்களைத்தான் "லம்பன் ப்ராலிட்டேரியேட்" என்று அழைக்கிறார் மார்க்ஸ். இந்தச் சேனையை எதிர்க்க வேண்டியிருந்தது, பாரிஸ் தொழிலாளி வர்க்கம்.

தொழிலாளி வர்க்கத்தை எதிர்க்க வேறொரு ராணுவத்தையும் சிருஷ்டித்தது, தற்காலிகச் சர்க்கார். நெருக்கடியாலும், புரட்சியாலும் வேலை இழந்த ஒரு லட்சம் தொழிலாளர்களைக் கொண்ட ஒரு ராணுவம் உருவெடுத்தது. இந்தப் படை தொழிலாளர்களை எதிர்க்குமென்று தற்காலிகச் சர்க்கார் கனவு கண்டது. உண்மையில், முதலாளிகள் ஒரு புரட்சிச் சேனையைச் சிருஷ்டித்தனர்!

நேரடியான பொதுத் தேர்தலுக்குப் பிறகு மே மாதம் நான்காம் தேதி "நேஷனல் அசெம்பிளி" கூடிற்று. இந்த அசெம்பிளி அன்று குடியரசின் உண்மையான தன்மையை நிர்ணயித்தது. பெப்ரவரி புரட்சியின் சமூகத் திரையை அது கிழித்து எறிந்தது. அது முதலாளித்வக் குடியரசுக்கு அஸ்திவாரக் கல் நட்டது. அது லூயி பிஜாங்குக்கும், ஆல்பெர்டுக்கும் சீட்டுக் கொடுத்தது. "தொழிலாளர்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும்" என்று அது தீர்ப்பளித்தது.

தொழிலாளி வர்க்கம் கொதிப்பு அடைந்தது. மே மாதம் பதினைந்தாம் தேதி தொழிலாளர்கள் நேஷனல் அசெம்பிளியில் புகுந்து, அதைக் கைப்பற்ற முயன்றனர். அதைத் தொடர்ந்து தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். முதலாளிகள் செயலாற்றினர். கூட்டம் கூடும் உரிமை பறிக்கப்பட்டது. அது தொழிலாளர் ராணுவத்தின் மீதும் போர் தொடுத்தது. முதலாளித்வம் தொழிலாளி வர்க்கத்தைப் போருக்கு அழைத்தது. இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டது, தொழிலாளி வர்க்கம்.

ஜூன் மாதம் 22ஆம் தேதி தொழிலாளி வர்க்கம் போர் முரசு கொட்டிற்று. தொழிலாளி வர்க்கமும், முதலாளி வர்க்கமும் முட்டி மோதின. முதலாளித்வ சமூகம் கண்ட முதல் வர்க்கப் போராட்டம் அது. முதலாளித்வ நியதி இருப்பதா, அழிவதா என்பதை நிர்ணயிக்கும் வர்க்கப் போர் அது.

ஐந்து நாட்கள் பாரிஸ் தொழிலாளர்கள் முதலாளிகளின் ஒன்றுபட்ட சக்தியை எதிர்த்து நின்றனர். போதிய ஆயுதங்களின்றி, போதிய வசதிகளின்றி, தலைவர்களின்றி, தீரத்துடன் புரட்சி வீரர்கள் போர் புரிந்தார்கள். இந்தப் போரில் தொழிலாளி வர்க்கம் தோற்றது. வெற்றி பெற்ற முதலாளிகள் தொழிலாளர்களைச் சூறையாடினர்; மூவாயிரம் யுத்தக் கைதிகளைப் படுகொலை செய்தனர்! ஜூன் புரட்சியின் தோல்விக்குப் பிறகு முதலாளிகள் பேய்க் கூத்தாடினர்.

ஆனால், ஜூன் புரட்சி வீண் போகவில்லை. ஜூன் புரட்சி தொழிலாளி வர்க்கத்திற்கு மறக்க முடியாத பல பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. ஜூன் புரட்சி உண்மையில் புரட்சிக் கலையை வளர்த்தது. ஜூன் புரட்சியின் தோல்விக்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை, ஐரோப்பியப் புரட்சிக்குத் தலைமை தாங்க,பிரான்சுக்கு வசதி அளித்தது. ஜூன் தியாகிகளின் ரத்தத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட பிறகுதான் மூவர்ணக் கொடி ஐரோப்பியப் புரட்சியின் கொடியாக—செங்கொடியாக—மாறியது. "புரட்சி செத்தது! புரட்சி நீடூழி வாழ்க! என்று நாம் கோஷிக்கிறோம்" என்றார் மார்க்ஸ். ("பிரான்சில் வர்க்கப் போராட்டம்")

இந்தப் புரட்சியின் தோல்விக்குக் காரணம் என்ன என்பதையும், இந்தப் புரட்சியின் தன்மையையும் "பிரான்சில் வர்க்கப் போராட்டம்" என்னும் நூலில் தெளிவாக விளக்கினார் மார்க்ஸ்.

புரட்சியின் தோல்விக்குப் பிறகு, பிரான்சில் மீண்டும் முதலாளித்வ ஆட்சி பல வடிவங்களில் உரு வெடுத்ததையும், லூயி போனபார்ட் அதிகாரத்திற்கு வந்த விதத்தை

யும் அவர் "பதினெட்டாவது புரூமர்" என்னும் நூலில் மிக அழகாக விளக்குகிருர்.

பிரான்சில் பெப்ரவரி புரட்சி ஆரம்பமான சில தினங்களுக்குப் பிறகு ஐரோப்பா முழுதும் புரட்சிப் புயல் வீசிற்று. ஜெர்மனியிலும் புரட்சி ஏற்பட்டது. ஜெர்மனியில் நடந்த புரட்சியை விளக்குமுன், புரட்சிக்குமுன் ஜெர்மனி எந்த நிலேயில் இருந்தது என்பதை விளக்க விரும்புகிறோம்.

பதினரும் நூற்ருண்டின் ஆரம்பத்தில் நடந்த விவசாயிகள் புரட்சிக்குப் பிறகு ஜெர்மனி ஆழ்ந்த நித்திரையில் அமிழ்ந்து கிடந்தது. அங்கே பிரபுக்கள் தனியரசு செலுத்தினர். "ஜெர்மனியில் பிரபுக்களின் பழைய சலுகைகள் பறிக்கப் படவில்லே. பிரபுத்வ முறை தேசமெங்கும் பரவி இருந்தது. பண்ணேயாட்கள் மீது சர்வாதிகாரம் செலுத்த பிரபுக்களுக்கு உரிமை இருந்தது" என்கிருர் மார்க்ஸ்.

ஆங்கில முதலாளிகளேப் போல் ஜெர்மன் முதலாளிகள் உறுதியான அஸ்திவாரத்தின் மீது நிற்கவில்லே. அவர்கள் அசைந்தாடினர். நீராவி கண்டு பிடிக்கப்பட்டதாலும், ஆங்கில முதலாளிகளின் வளர்ச்சியாலும் ஜெர்மன் முதலாளிகள் மேலும் அசைந்தனர். பிரபுத்வ சமூக அமைப்பு தகர்க்கப்படாத வரையில், ஜெர்மனியில் முதலாளித்வ உற்பத்திமுறை வளராது என்பதை ஜெர்மானிய முதலாளிகள் உணர்ந்தனர். ஆனல், அவர்கள் முடிவான பலப் பரீட்சைக்குத் தயாராக இருக்கவில்லே.

ஜெர்மானிய முதலாளிகள் தயங்கிக்கொண் டிருந்த பொழுது ஜெர்மன் தொழிலாளர்கள் போர்க் களத்தில் குதித்தனர். 1844 ஆம் வருடம் ஸிலேசியா நெசவாளர்கள் கிளர்ந் தெழுந்தனர். அவர்கள் மிருகத்தனமாகச் சுரண்டப்பட்டதால், அவர்கள் சுரண்டலே எதிர்த்துப் போர் புரிந்தனர். இந்த எழுச்சியை ரத்த வெள்ளத்தில் அமிழ்த்திற்று, சர்க்கார். அதே வருடம் பொஹீமிய அச்சுத் தொழிலாளர்களும் போர்க் கொடியை உயர்த்தினர்.

ஜெர்மன் முதலாளிகளின் அரசியல் இயக்கம் உண்மையில் 1840 ஆம் வருடம் பிறந்தது. இந்த இயக்கத்தின் அரசியல் குரு ஹெகல். "சட்ட ரீதியான முடியாட்சி தான் சர்க்காரின் பரிபூரண வடிவம்'' என்னும் ஹெகலின் சுலோகத்தை உச்சரித்துக் கொண்டு போர்க் கொடியை முதலாளிகள் உயர்த்தினார்கள். ஆனால், அப்பொழுது பட்டத்திற்கு வந்த நான்காவது பிரடரிக் வில்லியம் தங்கள் புரட்சிக்குத் தலைமை தாங்குவார் என்று அவர்கள் கருதினர்!

"புதிய மன்னன் புதிய அரசியலை—பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் முதலியவைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியலை—அமுலுக்குக் கொண்டு வருவாரென்றும், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகத் தாங்கள் நடத்த விரும்பின புரட்சிக்கு அவர் தலைமை தாங்குவாரென்றும் முதலாளிகள் நினைத்தனர். விரைவில் முதலாளி வர்க்கம் தன் தவறை உணர்ந்தது. எனவே, அது மன்னனை உக்ரமாகத் தாக்க ஆரம்பித்தது'' என்கிறார் மார்க்ஸ்.

அன்று பொக்கிஷம் காலியாக இருந்தது; கடன் தொல்லை அதிகரித்தது. சர்க்கார் பாப்பராக இருந்தது. எனவே, புதிய வரி விதிக்க அது முடிவு செய்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பாரிஸ் புரட்சி ஆரம்பமாயிற்று.

முதலாளி வர்க்கத்திற்கு எதிராகத் தொழிலாளி வர்க்கம் நடத்தின முதல் வர்க்கப் போராட்டமாக பெப்ரவரி புரட்சியை மதித்தனர், ஜெர்மன் முதலாளிகள். பிரான்சில் முதலாளித்வ ஆட்சி முடிந்து விட்டதென்றும், தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டதென்றும் ஜெர்மன் முதலாளிகள் கருதினர். எனவே, ஜெர்மன் தொழிலாளர்களின் கிளர்ச்சியைக் கண்டு முதலாளிகள் பயந்தனர். ஆனால், இந்தக் கிளர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்ப—மன்னனிடமிருந்து சலுகைகளைப் பெற—அவர்கள் முயன்றனர்.

ஜெர்மன் முதலாளிகள் புரட்சிகரமான சோஷலிஸத்தையும், கம்யூனிஸத்தையும் கண்டு நடு நடுங்கினர். சொத்து, ஒழுங்கு, மதம், குடும்பம் ஆகிய முதலாளித்வ

நியதிகளின் பரம விரோதிகள் என்று ஜெர்மன் முத லாளிகளால் கருதப்பட்டவர்கள் பாரிஸில் அதிகாரத்தில் இருந்தனர். இதைக் கண்டதும் அவர்களின் பயம் அதி கரித்தது. உடனே, அவர்களின் புரட்சி வேகம் தணிந் தது. அன்றுள்ள நிலைமையைப் பயன் படுத்திக் கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பது முதலாளிக ளுக்குத் தெரியும்; தொழிலாளி வர்க்கத்தின் உதவியின்றித் தங்களால் இந்த வேலையைச் செய்ய முடியாது என்பதும் முதலாளிகளுக்குத் தெரியும். எனினும், அவர்கள் செய லாற்றத் துணியவில்லை. அதற்கு மாருக, மாகாணங்களில் கிளர்ச்சி ஆரம்பமானதும் அவர்கள் சர்க்காரை ஆதரித்த னர். பெர்லின் வாசிகள் அரண்மனைமுன் கூடி ஆர்ப் பாட்டம் செய்த பொழுது முதலாளிகள் அவர்களைச் சாந் தப்படுத்த முயன்றனர். மெட்டர்னிக் விழுந்து விட்டது என்னும் செய்தி கிடைத்ததும் மன்னர் ஜனங்களுக்குச் சில சலுகைகள் வழங்கினுர். இதைப் புரட்சியின் வெற்றி யாக மதித்தனர், முதலாளிகள். ஜனங்களின் ஆசையைப் பூர்த்தி செய்ததற்காக அவர்கள் மன்னனை வாழ்த்தினர். ஆனுல், ஜனங்கள் வேறு வழியில் சென்றனர். அரை குறைச் சீர்திருத்தம் ஜனங்களைத் திருப்தி செய்யவில்லை. அவர்கள் ராணுவத்தைத் தாக்கினர். முடியாட்சி தோற் றது. அதன் பிறகு, நிலைமை தலைகீழாக மாறிற்று. அது வரையில் பின்னணியில் நின்ற தொழிலாளி வர்க்கம் முன்னணிக்கு வந்தது. தன் சக்தி என்ன என்பதை உணர்ந் தது, தொழிலாளி வர்க்கம். பாரிஸில் நடந்த நாடகம் ஜெர்மனியிலும் நடந்தே தீரும் என்ற நிலை ஏற்பட்டது. அதுவரையில் இருக்கும் வர்க்கத்தைப் பிரித்து வைத்த அபிப்பிராய வேற்றுமைகள் உடனே மங்கி மறைந்தன. வெற்றி பெற்ற தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராக, பல வருட எதிரிகளும், நண்பர்களும் ஒன்று பட்டனர். பெர் லின் போர்க்களத்தில் முடியாட்சியை ஆதரிப்பவர்களும், முதலாளிகளும் நேச உடன்படிக்கை செய்து கொண்ட னர்.

புதிய ஆட்சி உருவெடுத்தது. ஜனங்களின் கண்ணைத் துடைப்பதற்காக முதலாளிகள் ஜனங்களுக்குச் சில

சலுகைகள் வழங்கினர். முடியாட்சியைப் பாதுகாக்க முதலாளிகள் இசைந்தனர்; பிரபுத்வம், ராணுவம் முதலியன முதலாளிகளை ஆதரிக்க இசைந்தன! மார்ச்சு மாதம் பதினெட்டாம் தேதி நடந்த புரட்சி ஜெர்மனியின் நிலைமையை அதிகம் மாற்றவில்லை.

பிரஞ்சுப் புரட்சி முடிவாகத் தோற்ற பிறகு ரஷ்ய சர்க்கார் சட்ட சபையைக் கலைத்தது. ஆனால், மத்திய வர்க்கத்தின் ஆதிக்கத்திலிருந்த சட்டசபை அங்கத்தினர்கள் சர்க்காரின் தீர்ப்பை அசட்டை செய்தனர். சர்க்கார் விதித்த புதிய வரிகள் சட்ட விரோதமானவை என்று அவர்கள் தீர்ப்புக் கூறினர். இந்த முடிவு ஜனப்பிரதிநிதிகளின் முடிவு. எனவே, சர்க்காருக்கு வரி செலுத்தாமல் இருக்கும்படி மார்க்ஸ் ஜனங்களைக் கேட்டுக் கொண்டார். உடனே, "நியூ ரீனிஷே ஸீடங்" மீது சர்க்கார் பாய்ந்தது. பத்திரிகை மீது தடை விதிக்கப்பட்டது. அத்துடன் ராஜத் துவேஷத்தை உண்டு பண்ணின குற்றத்திற்காக ப்ரஷ்ய சர்க்கார் மார்க்ஸைக் கைது செய்தது. கொலோனில் சரித்திரப் பிரசித்திபெற்ற விசாரணை நடந்தது. இந்த விசாரணையை மார்க்ஸ் பிரசாரத்திற்காகப் பயன் படுத்திக் கொண்டார். நீதி மன்றம் கம்யூனிஸப் பிரசார மேடையாக மாறிற்று! அன்றைய சமூக, பொருளாதார, அரசியல் நிலையை விளக்கி மார்க்ஸ் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அந்த வாக்குமூலம் சிரஞ்சீவத்வம் பெற்றது. வழக்கை விசாரித்த நீதிபதி மார்க்ஸை விடுதலை செய்ததுடன், அருமையான அரசியல் சொற்பொழிவு நிகழ்த்தினதற்காக மார்க்ஸைப் பாராட்டினார். மார்க்ஸைச் சிறையில் அடைத்து, அவர் குரலை அடக்க சர்க்கார் செய்த சூழ்ச்சி பலிக்கவில்லை. ஆதலால், அவரை மீண்டும் தேசப் பிரஷ்டம் செய்தது சர்க்கார். எனவே, அவர் பாரிஸுக்குச் சென்றார்.

ஜூன் புரட்சியின் தோல்விக்குப் பிறகு, பிரான்சில் அடக்குமுறை தாண்டவமாடிற்று. பல பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் மார்க்ஸ் பாரிஸில் வசிப்பதை பிரெஞ்சு சர்க்கார் விரும்பவில்லை. எனவே, உடனே பிரான்ஸை விட்டு வெளி

யேறும்படி பிரெஞ்சு சர்க்கார் உத்தரவு பிறப்பித்தது. அவர் பிரான்சில் வாழ முடியாது; ஜெர்மனியில் வாழ முடியாது ; பெல்ஜியத்தில் வாழ முடியாது; சுவிட்ஜர்லாந்திலும் வாழ முடியாது ! அன்று அவர் செல்லக்கூடிய தேசம் ஒன்றுதான். அதுதான் இங்கிலாந்து. 1849 ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 24 ஆம் தேதி மார்க்ஸ் லண்டனை அடைந்தார். ஜென்னி செப்டம்பர் மாத இறுதியில் லண்டனுக்குச் சென்றார். நிழலைப்போன்று அந்தக் குடும்பத்தைப் பின் தொடர்ந்தாள் லென்சென். நவம்பர் மாதம் ஏங்கல்சும் லண்டனுக்குச் சென்றார்.

" ஐரோப்பாவில் நடந்த புரட்சி நாடகத்தின் முதல் காட்சி முடிந்து விட்டது. 1848 ஆம் வருடம் வீசின சூறுவளிக்கு முன்னிருந்த 'அதிகார வர்க்கம்,' மீண்டும் அதிகாரத்திற்கு வந்துவிட்டது" என்றார் மார்க்ஸ். (" நியூயார்க் டெய்லி டிரிபியூன் ", அக்டோபர் 25, 1851.)

ஐந்தாம் அத்தியாயம்

ஐரோப்பாவில் வீசிய சமூகப் புயல் லண்டனை அடைய வெகு காலம் சென்றது. அது லண்டனை அடைந்த பொழுது அதன் வேகம் தணிந்திருந்தது; ஜீவசக்தி குறைந்திருந்தது. எனவே, இங்கிலாந்தில் அது எத்தகைய பிரமாதமான மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை.

இங்கிலாந்தில் அமைதி குடிகொண்டிருந்தது. ஆகவே, அன்னியர் லண்டனில் அதிகத் தொல்லையின்றி வாழ முடிந்தது. ஆனால், பல வருடங்கள் புரட்சிப் போர்க் களத்தில் இடைவிடாது போர் புரிந்தவர்களுக்கு லண்டன் வாழ்க்கை அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை.

இங்கிலாந்தில் முதலாளித்வம் பலமாக வேரூன்றி இருந்தது. "சார்ட்டிஸ்டு" இயக்கத்திற்குப் பிறகு, அங்கே எந்த விதமான அரசியல் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. எனவே, முதலாளித்வம் அதிகக் கஷ்டமின்றிக் காலம் கழித்தது.

மார்க்சின் லண்டன் வாழ்க்கையால் மனித சமூகம் பெரும் நன்மை அடைந்தது. லண்டனில் ஆராய்ச்சி செய்யவும், சிந்திக்கவும், சோஷலிஸத்தை விரிவுபடுத்தவும் மார்க்சுக்குப் போதிய அவகாசம் கிடைத்தது.

அக்காலத்தில் கோஸத், கரிபால்டி முதலிய தேசீய வீரர்கள் பகிரங்கமாகக் கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களைத் தீமையற்றவர்களாக மதித்தனர் லண்டன் வாசிகள். ஆனால், மார்க்சின் நிலை வேறு. புதிய உலகைச் சிருஷ்டிக்க விரும்பும் புரட்சி இயக்கத்தின் தலைவர் மார்க்ஸ். எனவே, மார்க்ஸைக் கண்டு எல்லோரும் பயந்தனர்.

யந்திரப் புரட்சி முதலில் இங்கிலாந்தில்தான் பரிபூரணமாக வெற்றி பெற்றது. எனவே, இங்கிலாந்தில் முதலாளித்வம் எவ்வாறு வளர்ந்தது என்பதையும், அதன் குணங்

களையும் மார்க்ஸ் கவனமாகப் பரிசீலனை செய்தார். முதலாளித்வத்தின் தன்மையை விளக்க அவர் இங்கிலாந்தை உதாரணமாக எடுத்துக் கொண்டார்.

அன்று லண்டனில் பல புரட்சிக்காரர்கள் வசித்தனர். ஜெர்மனியி லிருந்தும், சுவிட்ஜர்லாந்தி லிருந்தும், பிரான்சி லிருந்தும் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட புலவர்களும், சிந்தனையாளர்களும், ஆசிரியர்களும், கம்யூனிஸ்டுகளும் லண்டனில் வசித்தனர். மார்க்ஸ் இவர்களைச் சந்தித்தார். கம்யூனிஸ்டு லீகை மீண்டும் ஆரம்பிக்க அவர் முயற்சி செய்தார். அவர் பல பொதுக் கூட்டங்களில் பேசினார்.

பாரிஸ் புரட்சி பல விஷயங்களைத் தெளிவு படுத்திற்று; பல புதிய பிரச்னைகளைக் கிளப்பிற்று. புரட்சி வெற்றி பெற்றதும் அதிகாரத்தை யார் கைப்பற்ற வேண்டும்? புதிய அரசாங்கம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? இந்தக் கேள்விகளுக்கு மார்க்ஸ் பதில் கூறினார். சமூகப் புரட்சி வெற்றி பெற்றதும் "சுய சிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வம்" ஏற்பட வேண்டும் என்று மார்க்ஸ் வலியுறுத்தினார். ஏனெனில், தோல்வி அடைந்திருக்கும் வர்க்கம் புதிய ஆட்சியைக் கவிழ்க்கப் பெரு முயற்சி செய்யும். இந்தக் கூட்டத்தினிடமிருந்து புதிய சமூகத்தைக் காக்க வேண்டும். மேலும், புதிய சமூகத்தில் வாழ ஜனங்கள் பழக வேண்டும்; புதிய சமூகத்தைப் பலமான அஸ்திவாரத்தின் மீது அமைக்க வேண்டும். இந்த வேலைகளை ஒரே நாளில் செய்துவிட முடியாது. எனவே, முதலாளித்வத்திலிருந்து சோஷலிஸத்தை நோக்கி மனித சமூகம் பிரயாணம் செய்யும்பொழுது சுய சிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வம் ஏற்பட வேண்டும் என்றார் மார்க்ஸ். ஆனால், இந்தச் சர்வாதிகாரத்வம் தற்காலிகமானது. ஜனங்கள் புதிய சமூகத்தில் வாழத் தகுதி உடையவர்களானதும் இந்த இடைக்கால ஆட்சி மறைந்து விடும். சுயசிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வம் அழிக்கப்படமாட்டாது; ஆனால், அது காலப் போக்கில் மங்கி மறையும்.

புரட்சி ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கும், ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்திற்கும் சஞ்சரிக்கு

மென்று மார்க்ஸ் கருதினர். ஆனல், புரட்சி ஒரு கலை என்பதை மார்க்ஸ் தெளிவாக எடுத்துக் காட்டினர். புரட்சியுடன் விளையாடக்கூடாது என்று மார்க்ஸ் புரட்சிக்காரர்களை எச்சரித்தார். புரட்சிக்காக ஜனங்களைப் போத பூர்வமாகத் தயார் செய்ய வேண்டுமென்றும், தேசிய நிலையும், சர்வதேச நிலையும் புரட்சிக்குச் சாதகமாக இருக்கும்பொழுது புரட்சிக் கொடியை உயர்த்த வேண்டு மென்றும் மார்க்ஸ் வற்புறுத்தினர். சமாதான காலத்தில் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டுவதிலும், முடிவான போராட்டத்திற்கு அவசியமான முன்னேற்பாடுகள் செய்வதிலும், தொழிலாளர்களின் வர்க்க போதத்தை வளர்ப்பதிலும் கவனம் செலுத்த வேண்டு மென்று மார்க்ஸ் புரட்சிக்காரர்களுக்கு யோசனை கூறினர். புரட்சி ஆயுதத்தைச் சாமர்த்தியமாகக் கையாள வில்லையென்ருல், அது திரும்பத் தாக்குமென்பதை மார்க்ஸ் ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டினர். வான மண்டலத்தில் புதிய சக்தி தோன்றுவதை வான சாஸ்திரி எவ்வாறு இமை கொட்டாது கவனிப்பாரோ, அதே போன்று புரட்சி நிலை பக்குவம் அடைவதைப் புரட்சிக்காரர்கள் கண்காணிக்க வேண்டும். உரிய காலத்தில், சாதகமான சுற்றுச்சார்பில் நடைபெறும் புரட்சிதான் வெற்றிபெறும்.

புயல் நின்றது; அமைதி குடி கொண்டது. மேல் தளம் சாதாரணமாக இருந்தது. ஆனல், இது நிரந்தரமான அமைதியல்ல. போரில் தோற்ற புரட்சி சக்திகள் ஓய்வு எடுக்கின்றன. விரைவில், புதிய சக்தியுடன் மீண்டும் புரட்சி சக்திகள் போர்க் கொடியை உயர்த்தும். இது மார்க்சின் தேர்ந்த முடிவு.

புரட்சிகரமான தொழிலாளி வர்க்கத்திற்குப் புரட்சிகரமான தத்துவம் இன்றியமையாதது. ஏனெனில், தான் போர் புரிவதேன் என்பது ஒவ்வொரு போர் வீரனுக்கும் தெளிவாகத் தெரிய வேண்டும். எனவே, தொழிலாளி வர்க்கத்திற்கு உன்னதமான தத்துவத்தையும், போர் முறையையும் அளிக்கும் வேலையில் மார்க்ஸ் கவனம் செலுத்தினர். நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு புரட்சிகர

மான தொழிலாளி வர்க்கத்திற்குப் புரட்சிகரமான தத்துவத்தையும், திட்டத்தையும் அளித்தார் மார்க்ஸ்.

அந்தக் காலத்தில் மார்க்ஸ் பல கட்டுரைகளும், சிறு நூல்களும் எழுதினர். அத்துடன் தேசப் பிரஷ்டர்களுக்கும், கொலோன் கைதிகளுக்கும் உதவி புரிவதில் கவனம் செலுத்தினர். மார்க்ஸ் விடுதலை செய்யப்பட்ட பிறகு சர்க்கார் பல கம்யூனிஸ்டுகளைக் கைது செய்து, அவர்கள் மீது வழக்குத் தொடுத்தது. இந்த வழக்கை நடத்த "கொலோன் கைதிகள் பாதுகாப்புக் கமிட்டி"யை மார்க்ஸ் ஏற்படுத்தினர்.

கொலோன் கம்யூனிஸ்டு விசாரணை 1852 ஆம் வருடம் நடந்தது. "கம்யூனிஸ்டு லீகை" நசுக்குவதற்காக ஜெர்மன் சர்க்கார் செய்த சூழ்ச்சி இது. இந்த வழக்கு விசாரணையைப்பற்றி மார்க்ஸ் கீழ்வருமாறு கூறுகிறார்:

"நிராயுதபாணிகளாக்கப்பட்ட புரட்சிகரமான சுயசிரம ஜீவிகளின் பிரதிநிதிகள் எதிரிகள். ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாக விளங்கும் ஜூரர்கள் முன் அவர்கள் நிற்கிறார்கள். இந்த ஜூரர்கள் அவர்களை விசாரணை செய்ததால் அவர்கள் தண்டிக்கப்பட்டனர்."

மார்க்ஸ் பாரிஸ் புரட்சியைப்பற்றி இரண்டு புத்தகங்கள் எழுதினர். இந்தப் புத்தகங்கள்—"பிரான்சில் வர்க்கப் போராட்டம்", "பதினெட்டாவது புரூமர்"—சிறு நூல்கள் எழுதும் முறையில் தலைகீழ் மாற்றத்தை உண்டு பண்ணின. சரித்திரத்தை எவ்வாறு பரிசிலனை செய்ய வேண்டும் என்பதற்கு இந்த நூல்கள் சிறந்த உதாரணங்கள். இந்த வேலைகளுக்கு மத்தியில் அவர் அரசியல்-பொருளாதார சாஸ்திரத்தைப்பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். கூலி என்றால் என்ன என்பதையும், அதிக மதிப்பு எவ்வாறு சிருஷ்டி செய்யப்படுகிறது என்பதையும், முதலாளித்வ உற்பத்திச் சக்கரம் எவ்வாறு சுழல்கிறது என்பதையும் அவர் விளக்கினர். அவர் வெளிநாட்டுப் புரட்சிக்காரர்களுடன் கடிதப்போக்கு வரத்தும் வைத்துக் கொண்டார். எங்கல்சுக்கும் அவர் பல கடிதங்கள் எழுதினர்.

அன்று வறுமையால் மார்க்ஸ் பெரிதும் வாடினர். அவருக்கு ஸ்திரமான வருவாய் இல்லை. ஆனால், பெரிய குடும்பம். வீட்டு வாடகை கொடுக்க முடியவில்லை; அருமைக் குழந்தைகளுக்கு வயிறு நிறைய உணவு அளிக்க முடியவில்லை. அவர் பட்டினி கிடக்க நேர்ந்தது; பல நாட்கள் குடும்பமே பட்டினி கிடந்தது. குழந்தைகள் நோயால் துவண்டன. ஆனால், சிகிச்சை செய்யப் பணமில்லை. கடன் தொல்லை அவரைச் சித்திரவதை செய்தது. வீட்டு வாடகை கொடுக்க முடியாமல் அவர் அடிக்கடி புதிய வீடுகளில் குடியேற நேர்ந்தது. சாமான்களைப் புதிய வீட்டிற்குத் தூக்கிச் செல்லப் பணமில்லாமல் அவர் திண்டாடின காலமும் இருந்தது. விளக்கு எரிக்க எண்ணெய் இல்லாமல் அந்தக் குடும்பம் இருளில் பல இரவுகளைக் கழித்தது. இவ்வளவு துன்பங்களையும் தீரத்துடன் அனுபவிக்க மார்க்சுக்கு ஜென்னி பேருதவி புரிந்தார். துன்பம் நிறைந்த வாழ்க்கைக் கடலைக் கடக்கும் தோணியாக அவர் விளங்கினர். ஆனல், மார்க்ஸ் செல்வத்தில் திளைப்பதாக எதிரிகள் பிரசாரம் செய்தனர்.

நாள்தோறும் பிரிட்டிஷ் கண் காட்சி சாலையைச் சேர்ந்த வாசக சாலைக்கு மார்க்ஸ் செல்லுவார். காலை ஒன்பது மணியிலிருந்து இரவு எழு மணி வரையில் அவர் படிப்பார். படிப்பு—ஓயாத படிப்பு. பிறகு, இரவெல்லாம் எழுதுவார். இடை விடாத உழைப்பால் அவர் தேக பலம் தளர்ந்தது. வறுமையும், கடுமையான உழைப்பும் அவரை வாட்டி வதக்கின. அவர் பார்வையும் கெட்டது. எனவே, வேலை நின்றது. இது அவரைப் பெரிதும் துன்புறுத்திற்று. வாழ்க்கையில் கணக்கற்ற துன்பங்களை அனுபவித்த மார்க்ஸால் இந்தத் துன்பத்தைச் சகிக்க முடியவில்லை. ஏன்? அவர் லட்சியம் இன்னும் நிறைவேறவில்லை; அவர் வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை.

அவர் லண்டனில் வாழ்ந்த காலத்தில் அவருடைய இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இறந்தனர். அவர்கள் வறுமைக்கு இரையானர்கள்! அவர் புதல்வி இறந்தபொழுது சவப்பெட்டி வாங்குவதற்குக்கூட அவரிடம் பணம் இருக்கவில்லை. அவர் குழந்தைகளைப் பெரிதும்

நேசித்தார். அவர் ஹிருதய பூர்வமாக நேசித்த குழந்தையை அடக்கம் செய்யக் கையில் பணமில்லை! இந்தத் துன்பத்தைத் தனக்கென வாழாத, தனக்கென்று எதையும் விரும்பாத, அச்சத்தைக் கனவிலும் அறியாத, சேவையையே வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்ட மகா புருஷரால்தான் சகிக்க முடியும். இந்த இனத்தைச் சேர்ந்தவர்தானே மார்க்ஸ்.

துன்பம் அவரைத் தொடர்ந்து தாக்கிற்று. 1856 ஆம் வருடம் அவர் மகன் எட்கர் இறந்தான். புத்திர வாஞ்சையால் மார்க்சின் உரமான மனம் தளர்ந்தது. எட்கரை அவர் பெரிதும் நேசித்தார். அவன் மார்க்சின் செல்லப் பிள்ளை. "நான் பல கஷ்டங்களைச் சகித்திருக்கிறேன். ஆனால், உண்மையான துயரம் என்றால் என்ன என்பதை இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன்......துன்பம் என்னை அழித்து விடாமல் காத்தது உங்கள் ஞாபகமும், உங்கள் அன்பும், இந்த உலகத்தில் நாம் செய்ய வேண்டிய வேலைகள் இன்னும் பல இருக்கின்றன என்ற எண்ணமும் தான்" என்று மார்க்ஸ் எங்கல்சுக்கு எழுதினார். வீழ்ச்சியிலும், துன்பத்திலும், தளர்ச்சியிலும் மனித சமூகத்திற்குத் தொண்டு செய்ய வேண்டுமென்னும் எண்ணம் மாத்திரம் மார்க்சின் உள்ளத்தைவிட்டு அகலவே இல்லை. மார்க்ஸ் தமது குடும்பத்தையும், தோழர்களையும் ஹிருதய பூர்வமாக நேசித்தார்.

கோடைக் காலத்தில் தமது மனைவி மக்களுடன் ஹாம்ப்ஸ்டட் புல் வெளிக்குச் செல்லுவார். ஞாயிற்றுக் கிழமை காலையில் டீன் தெருவிலுள்ள தமது வீட்டிலிருந்து உணவு, பத்திரிகைகள், புத்தகங்கள் சகிதம் மார்க்ஸ் புறப்படுவார். சில சந்தர்ப்பங்களில் அவர் தோழர்களும் இந்த உல்லாஸ யாத்திரையில் கலந்து கொள்ளுவார்கள். ஹாம்ப்ஸ்டட் புல் வெளியில் எல்லோரும் மர நிழலில் உட்காருவார்கள். குழந்தைகள் விளையாட்டிலும், முதியவர்கள் பேச்சிலும், படிப்பிலும் பொழுதைக் கழிப்பார்கள். மார்க்ஸ் உற்சாகத்துடன், உணர்ச்சி ததும்பப் பாடுவார். பிறகு, குழந்தைகளை முதுகில் சுமந்துகொண்டு அங்குமிங்கும் ஓடுவார். சில சமயம் அவர்கள் வேடிக்கை

யாகக் கழுதைச் சவாரி செய்வார்கள். கழுதைச் சவாரி, நண்பர்களை ஆனந்தக் கடலில் ஆழ்த்தும். இரவு அவர்கள் வீடு திரும்புவார்கள். வழி நெடுக எல்லோரும் சேர்ந்து ஜெர்மன் தேசிய கீதங்களையோ, ஆங்கில தேசிய கீதங்களையோ, புரட்சிப் பாடல்களையோ பாடுவார்கள்.

மார்க்சின் பொருளாதார நிலையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. தங்கள் பத்திரிகைக்கு ஐரோப்பாவைப் பற்றிக் கட்டுரைகள் எழுதும்படி "நியூ யார்க் டெய்லி ட்ரிபியூன்" பத்திரிகாலயத்தார் மார்க்ஸைக் கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பத்திரிகையின் அன்னிய நாட்டு இலாக ஆசிரியர் சாரல்ஸ் ஆகஸ்டஸ்டானுவுக்கு மார்க்ஸை நேரில் தெரியும். மார்க்சின் அரசியல் ஞானம் அவரைப் பெரிதும் கவர்ந்தது. அந்தப் பத்திரிகை பூரியரிஸ்டுகளால் நடத்தப்பட்டது. அது அடிமைத்தனத்தைக் கண்டித்தது; முடியாட்சியை வெறுத்தது; பிற்போக்காளர்களை எதிர்த்தது. எனவே, சுமார் பத்து வருடங்கள் வாரந் தோறும் மார்க்ஸ் அந்தப் பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதினார். அந்தக் காலத்தில் இந்தியாவைப் பற்றியும் மார்க்ஸ் சில கட்டுரைகள் எழுதினார். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தோன்றின விதத்தையும், அது தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்ட பவிஷையும் அவர் விளக்கினார். பிரிட்டிஷ் ஆட்சி மீது அவர் குற்றப் பத்திரிகை வாசித்தார். இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி ஏற்பட வேண்டிய சரித்திர ரீதியான அவசியத்தை அவர் எடுத்துக் காட்டினார். ஏகாதிபத்திய ஆட்சி இந்திய மக்களின் வளர்ச்சிக்கு எவ்வாறு முட்டுக்கட்டையாக நிற்கிறது என்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

"நிர்ப்பந்தத்தின் மீது ஆங்கில முதலாளிகள் செய்யும் வேலைகள் இந்திய மக்களை அடிமைத் தளையிலிருந்து விடுவிக்காது; அவர்கள் வாழ்க்கை நிலையையும் மாற்றாது. இவை உற்பத்தி சக்தியின் வளர்ச்சியைச் சார்ந்து நிற்கின்றன என்பது மாத்திரமல்ல, இவை ஜனங்களின் ஆதிக்கத்திற்கு மாறுவதையும் சார்ந்து நிற்கின்றன. ஆனால், இவைகளுக்குரிய அஸ்திவாரத்தை அவர்கள் கண்டிப்பாக அமைப்பார்கள். முதலாளிகள் இதை

விட அதிகமாக எதையாவது என்றைக்காவது செய்திருக்கிறார்களா? ஜனங்களை ரத்த வெள்ளத்திலும், அழுக்கிலும், துயரத்திலும், இழிவிலும் இழுத்துச் செல்லாமல் என்றைக்காவது முதலாளிகள் அபிவிருத்திகரமான வேலையைச் செய்திருக்கிறார்களா? பிரிட்டனில் ஆளும் வர்க்கத்தைத் தொழிலாளி வர்க்கம் வீழ்த்தாத வரையில், அல்லது பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியர்கள் வீழ்த்தாத வரையில் இந்தியர்கள் புதிய சக்திகளால் நன்மை அடைய முடியாது" என்கிறார் மார்க்ஸ்.

காலனி மக்களின் விடுதலையில் அவர் விசேஷக் கவனம் செலுத்தினர். சோஷலிஸ்டு புரட்சிக்கும் காலனிகளின் சுதந்திரப் போராட்டத்திற்கும் நெருங்கின தொடர்பு இருப்பதை அவர் தெளிவாக உணர்ந்தார். எனவே, அன்னிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழும்படி அவர் காலனி மக்களை வேண்டினர்.

ஜெர்மன் புரட்சியைப் பற்றி எங்கல்ஸ் எழுதின கட்டுரைகளை "ஜெர்மன் புரட்சியும் - எதிர்ப் புரட்சியும்" என்ற மகுடத்துடன் அவர் புத்தகமாகப் பிரசுரித்தார். விரைவில் ஜெர்மனியில் புரட்சிப் புயல் வீசுமென்று எங்கல்ஸ் கருதினர். பொருளாதார நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க, புரட்சியின் சக்திகள் பக்குவம் அடையுமென்று எங்கல்ஸ் நம்பினர். உலக மார்க்கெட்டின் நிலையையும், பாங்க் ஆப் இங்கிலாந்தின் பொருளாதார நிலையையும் எங்கல்ஸ் நுணுக்கமாகப் பரிசீலனை செய்தார். மீண்டும் ஒரு முதல்தரமான பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்பதை இந்த ஆராய்ச்சி தெளிவு படுத்திற்று. தமது ஆராய்ச்சியின் முடிவை எங்கல்ஸ் மார்க்சுக்குத் தெரிவித்தார். மார்க்சும், எங்கல்சும் எதிர்பார்த்தது உண்மையாயிற்று. 1857 ஆம் வருடம் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. ஆனல், அன்று புரட்சிச் சக்திகள் புரட்சிக்குத் தயாராக இருக்கவில்லை.

ஆங்கில அரசியலைப் பற்றியும், பிரிட்டிஷ் அன்னிய நாட்டுக் கொள்கையைப் பற்றியும், சார்ட்டிஸத்தைப் பற்றியும், பிரிட்டிஷ் மந்திரிகளைப் பற்றியும் அவர் பல

கட்டுரைகள் எழுதினார். காலனிகளைப் பிரிட்டிஷ் முதலாளி கள் ஈவும் இரக்கமுமின்றிச் சுரண்டுவதை அவர் உலகத் திற்கு அறிவித்தார். நாகரிகத்தின் பெயரில் ஆங்கிலேயர் கள் இந்தியாவில் புரியும் அட்டூழியங்களை அவர் அம்பலத் திற்குக் கொண்டு வந்தார்.

பிரிட்டிஷ் தொழிற் சங்கத் தலைவர்களில் பெரும் பாலோர் மார்க்ஸை ஆதரிக்கவில்லை. ஏனெனில், அவர்கள் பழுத்த மிதவாதிகள். அவர்கள் வர்க்கப் போராட் டத்தின் அவசியத்தை ஒப்புக்கொள்ளவில்லை; புரட்சியை விரும்பவில்லை. அரசியல் பிரச்னைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு, சாதாரண விஷயங்களில் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். அக்காலத்தில் ஏர்னஸ்ட் ஜோன்ஸ் மாத்திரம்தான் மார்க்சுடன் ஒத்துழைத்தார். ஜோன்ஸ் பக்குவம் அடைந்த கம்யூனிஸ்டு அல்ல என்றாலும், அன்று இங்கிலாந்தி லிருந்த சோஷலிஸ்டுகளில் அவர்தான் சிறந்தவர். ஜோன்ஸ், மார்க்ஸை ஏற்றிப் போற்றினார். இங்கிலாந்தின் நிலப் பிரச்னையை அவர் தெளிவாக விளக்கினார். அன்றும் நிலங்களி லிருந்து ஸ்காட்லாந்து விவசாயிகள் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டனர். இந்தக் கொடிய முறையை விளக்கி அமெரிக்கப் பத்திரிகை க்கு மனத்தை உருக்குப் கட்டுரைகள் எழுதினார் மார்க்ஸ். இந்த வேலைகளுக்கு இடையில் "மூலதனம்" என்னும் உலகப் பிரசித்தி பெற்ற நூலுக்கு அவர் விஷயங்கள் சேகரித்தார்.

1848 ஆம் வருடத்திற்குப் பிறகு ஜெர்மனியில் சோஷலிஸ்டு கட்சி ஸ்தாபன ரீதியாக உருவெடுத்தது. இந்தக் கட்சி மார்க்சின் சிருஷ்டி. இந்தக் கட்சி ஜெர் மானியரிடையே இடைவிடாது வேலை செய்தது.

அப்பொழுது ஜெர்மன் அரசியல் அரங்கத்தில் பெர்டினன்ட் லாஸேலி தோன்றினார். அவர் சிறந்த பேச்சாளர். அவர் சர்க்காரைப் பலமாகத் தாக்கினார். எனவே, அவர் கைது செய்யப்பட்டார். ஆனால், ஜெர்மனி யில் புரட்சி வேகம் தணிந்ததும் லாஸேலி பிற்போக்காள

ராக மாறினர். ஜெர்மன் சோஷலிஸ்டுகளில் காரல் லீப்னெட் மாத்திரம்தான் இறுதி வரையில் மார்க்சிஸத்தை ஆதரித்தார்.

பிற்போக்காளராக மாறின பிறகு, ஜெர்மன் தொழிற் கட்சியைத் தமது போக்கில் திருத்தி அமைக்க லாஸேலி முயன்றார். தமது அரசியல் குரு மார்க்ஸ்தான் என்று லாஸேலி பகிரங்கமாகக் கூறினர் என்றாலும், அவர் மார்க்சிஸ்டு கட்சிக்கு எதிராக வேலை செய்தார்.

ஜெர்மனியில் லாஸேலி ஒரு புதிய கட்சியை ஆரம் பித்தார். புரட்சியை நோக்கமாகக் கொண்டு அந்தக் கட்சி ஆரம்பிக்கப்படவில்லை. அது சந்தர்ப்ப வாதிகளைக் கொண்ட கட்சி. கூட்டுறவு வாழ்க்கைதான் அதன் முடிவான லட்சியம். அந்தக் கட்சி வீரர் வணக்கத்தை ஆதரித்தது. தொழிற்சாலைகள் அதிகரிப்பதை லாஸேலி எதிர்த்தார். எனவே, தொழிற்சாலைகளை ஒழிப்பதற்காக ப்ரஷ்ய சர்க்காருடன் சமரசம் செய்து கொள்ள நேரு மென்று லாஸேலி கூறினர். சோஷலிஸ்டு இயக்கத்தில் இத்தகைய பிற்போக்குக் கொள்கைகள் தலை தூக்கலா மென்பதை மார்க்ஸ் இதற்கு வெகு காலத்திற்கு முன்பே உணர்ந்தார். 1848 ஆம் வருடம், ஒரு விஷயத்தைத் தெளிவாகக் கற்பித்தது. சந்தர்ப்பவாதக் கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது பேராபத்து என்பதை 1848 ஆம் வருடம் நிரூபித்தது. ஏனெனில், புரட்சி வெற்றி பெற்ற பிறகு அதுவரையில் சேர்ந்து போர் புரிந்த புரட்சிக் கட்சியும், சந்தர்ப்பவாதக் கட்சியும் அதிகாரத்திற்காகப் போர் புரியும். இந்தப் போரில் வலிமை படைத்த கட்சி வெற்றி பெறும், இதற்குச் சிறந்த உதாரணம் பிரெஞ்சுப் புரட்சி. எனவே, இத்தகைய கூட்டுறவை மார்க்ஸ் கண்டித்தார். அதிகாரம் கைப்பற்றப் பட்ட பிறகு, பொருளாதார நிர்வாகத்தைச் சில காலமாவது ராணுவத் திடம் ஒப்படைக்க வேண்டு மென்னும் தத்துவத்தையும், வர்த்தகர்கள், தொழிற்சாலை முதலாளிகள், பாங்கர்கள் ஆகி யோரின் இரும்புப் பிடியிலிருந்து சிறிய முதலாளிகளையும், சுயசிரம ஜீவிகளையும் ப்ரஷ்ய சர்க்கார் காக்க முயுடி

மென்னும் நம்பிக்கையையும் லாஸேலி ஜனங்களிடையே பரப்பினர். இந்தப் பிரசாரத்தை அழுத்தமாகக் கண்டித்தார் மார்க்ஸ். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பிஸ்மார்க்குடன் ஒப்பந்தம் செய்து கொண்டார் லாஸேலி!

அவர் இறந்த பிறகு அவரைப் பின்பற்றுவோரும் மார்க்சிஸ்டுகளும் கொள்கைப் போரில் ஈடுபட்டனர். இந்தப் போரில் மார்க்சிஸ்டுகள் வெற்றி பெற்றனர். இந்த வெற்றியால் ஜெர்மனி மாத்திரமல்ல, உலகமே நன்மை அடைந்தது.

விஞ்ஞானம் என்னும் அஸ்திவாரத்தின் மீது சோஷலிஸ்டு மாளிகையைக் கட்டும் வேலையில் மார்க்ஸ் பரிபூரண வெற்றி பெற்றார். கம்யூனிஸத்தை விளக்கியும் விரிவுபடுத்தியும் அவர் பல நூல்கள் வரைந்தார். 1859 ஆம் வருடம் அர்த்த சாஸ்திரத்தைப்பற்றி ஒரு அருமையான நூல் வெளி வந்தது.

பிற்போக்குச் சக்தி, வெற்றியின் சிகரத்தில் இறுமாப்புடன் வீற்றிருந்த காலத்தில் கூட, வருங்காலத்தில் சுயசிரம ஜீவிகள் வெற்றி பெற்றுத்தான் தீருவார்கள் என்று மார்க்ஸ் வலியுறுத்தினர். "ஜனங்களின் பத்திரிகை" ஊழியர்கள் அவருக்கு ஒரு விருந்தளித்தனர். அந்த வைபவத்தில் பேசும்பொழுது மார்க்ஸ் கீழ் வருமாறு கூறினர்:

"நமது காலத்தில் முரண்பாடுகள் கூர்மையாகின்றன. குறைந்த நேரத்தில் அதிகமான பயன்தரத்தக்க முறையில் மனித சக்தியைப் பயன்படுத்தக் கூடிய அளவு, யந்திரங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கும்பொழுது, பட்டினியும் அதிக நேர வேலையும் மக்களை வாட்டுகின்றன. கலை அதன் குணத்தை இழந்து விட்டது. விஞ்ஞானம் என்னும் அமர ஜோதி அறியாமை என்னும் திரைக்குப் பின்னே பிரகாசிக்கிறது. இந்த முரண்பாடு, உற்பத்திக்கும் சமூக சம்பந்தத்திற்கும் இடையிலிருக்கும் இந்த முரண்பாடு நமது காலத்தில் முன்னணிக்கு வந்திருக்கிறது. சிலர் இதைக் கண்டு ஓலமிடலாம்; வேறு சிலர் இந்த முரண்

பாடை ஒழிப்பதற்காக நாகரிகத்தையே அழிக்க விரும்ப லாம்...ஆனல், இந்த முரண்பாடை வளர்க்கும் சக்தியின் தன்மை நமக்கு நன்ருகத்தெரியும். நமது பழைய நண்பன் புரட்சியை நாம் வரவேற்கிறேம்!''

உக்ரமான புரட்சியின் மூலம்தான் அமுலில் இருக்கும் சமூக அமைப்பை அழிக்க முடியும் என்பதைச் சந்தர்ப் பம் கிடைத்த போதெல்லாம் மார்க்ஸ் வற்புறுத்திக் கூறி ஞர்.

ஆறும் அத்தியாயம்

1848 ஆம் வருடப் புரட்சியின் தோல்விக்குப் பிறகு பிற் போக்கு சக்திகள் தலைவிரித்தாடின. கம்யூனிஸ்டு லீக் உருக் குலைந்தது. எனவே, சர்வதேசத் தொழிலாளர் களை ஒன்றுபடுத்தி, தொழிலாளர்கள் ஐக்கிய முன்னணி யைச் சிருஷ்டிக்க மார்க்சும், ஏங்கல்சும் முயன்றனர். இந்த முயற்சியில் 1864 ஆம் வருடம் மார்க்ஸ் வெற்றி பெற்றார். முதலாவது இன்டர் நேஷனலின் ஆரம்பக் கூட்டம் ஸெயின்ட் மார்ட்டின் மண்டபத்தில், எட்வேர்டு பீஸ்லி தலைமையில் நடந்தது. கோம்டியின் கொள்கையை ஆதரிப்பவர் பீஸ்லி. முதலாவது இன்டர் நேஷனலின் சட்டதிட்டங்களை மார்க்ஸ் வகுத்தார். "ஐரோப்பாவி லும், அமெரிக்காவிலும் உள்ள புரட்சிகரமான தொழிலா ளர்களை ஒன்றுபடுத்தி ஒரு மகோன்னதமான ராணு வத்தைச் சிருஷ்டிப்பது முதலாவது இன்டர் நேஷனலின் நோக்கம்........ஆங்கிலத் தொழிற் சங்கங்களுக்கும்' பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளி லுள்ள பிரௌதோனிஸ்டுகளுக்கும், ஜெர்மன் லாஸே லிஸ்டுகளுக்கும் இடமளிக்கத் தக்கவாறு முதலாவது இன் டர் நேஷனலின் சட்டதிட்டங்களை வகுக்க வேண்டி யிருந்தது" என்கிறார் ஏங்கல்ஸ்.

சர்வதேசத் தொழிலாளர் இயக்கம் போதுமான அளவு வளர்ச்சி அடைந்திருக்கவில்லை என்ற உண் மையை மார்க்ஸ் அசட்டை செய்யவில்லை. அதே சமயத் தில், அவர் தமது அடிப்படையான கொள்கைகளையும் விட்டுக் கொடுக்கவில்லை. "இன்றுள்ள தொழிலாளர் இயக்கம் அங்கீகரிக்கத் தக்க ஒரு திட்டத்தை, நமது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வகுப்பது மிகக் கஷ்டமானது...பழைய வேகத்தில் பேச, மீண்டும் உயிர் பெற்ற இயக்கம் நம்மை அனுமதிக்க இன்னும் கொஞ்சம் காலமாகும்" என்று 1864 ஆம் வருடம், நவம் பர் மாதம் 4 ஆம் தேதி மார்க்ஸ் ஏங்கல்சுக்கு எழுதின கடி

தத்தில் குறிப்பிடுகிருர். சட்ட திட்டங்களையும், ஆரம்பப் பிரசங்கத்தையும் எழுதுவதற்காக நியமிக்கப்பட்ட சப் கமிட்டி, மார்க்சின் யோசனைகளை யெல்லாம் அங்கீகரித் தது.

முதலாவது இன்டர்நேஷனலில் 1864 ஆம் வருடம் செப்டம்பர்மாதம் 28 ஆம் தேதி மார்க்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவு சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் சரித்திரத்தை அலங்கரிக்கிறது.

"1848 ஆம் வருடத்திலிருந்து 1864 ஆம் வருடம் வரையில் தொழிலாளர்களை வாட்டி வதக்கின துன்பம் சிறிதும் குறையவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. இதே காலத்தில் தொழிற்சாலைகளும், வர்த்தக மும் அமோகமாக வளர்ந்தன" என்னும் வாசகத்துடன் தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார் மார்க்ஸ். அதன் பிறகு தொழிலாளர்களும், விவசாயிகளும் எவ்வளவு தாழ்ந்த நிலை யில் இருக்கிருர்கள் என்பதை அவர் புள்ளி விவரங்களு டன் விளக்கினுர். 1848 ஆம் வருடப் புரட்சிக்குப் பிறகு முதலாளிகள் எவ்வாறு தொழிலாளி வர்க்கத்தை நசுக்கி னுர்கள் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினுர்.

1848 ஆம் வருடத்திற்குப் பிறகு இரண்டு முக்கிய மான நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாக மார்க்ஸ் கருதினுர். ஒன்று, இங்கிலாந்தில் அமுலுக்கு வந்த பத்துமணி நேர வேலைச் சட்டம்; மற்ருென்று, கூட்டுறவு இயக்கம். இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கத்திற்கு ராபர்ட் ஓவன் விதை விதைத் தார். எனினும் கூட்டுறவு இயக்கம் சமூக மயமாக்கப் படாதவரையில் அதனுல் அதிக நன்மை ஏற்படாது என்ப தைத் தொழிலாளி வர்க்கம் உணர்ந்தது. கூட்டுறவு இயக் கம் முதலாளித்வக் குத்தகையைத் தடுத்து நிறுத்த வில்லை; அது தொழிலாளர்களின் கஷ்டத்தையும் குறிப் பிடத்தக்க அளவு குறைக்க வில்லை.

"மூலதனத்தின் யஜமானர்கள் பொருளாதாரக் குத் தகையை நிலை நிறுத்தவும், பாதுகாக்கவும் அரசியல் அதி காரத்தைப் பயன் படுத்திக் கொள்வார்கள், தொழிலாளி வர்க்கத்தின் விமோசனத்திற்காக அவர்கள் பாடுபட

மாட்டார்கள் என்பது மாத்திரமல்ல, உண்மையில் அவர்கள் அதற்குக் குறுக்கே நிற்பார்கள்......எனவே, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொழிலாளி வர்க்கத்தின் முழு முதற்கடமை. தொழிலாளி வர்க்கம் இதை உணர்ந்துவிட்டதாகத் தெரிகிறது. ஏனெனில், இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தின் கட்சியை அரசியல் ரீதியில் திருத்தி அமைக்க ஏக காலத்தில் முயற்சி செய்யப்படுகின்றன.

"வெற்றியின் ஒரு அம்சம் அவர்களுக்கு இருக்கிறது. அதுதான் எண்ணிக்கை. ஆனால், கூட்டுமுறையில் ஒன்று பட்டால்தான், அறிவால் நடத்தப்பட்டால்தான் எண்ணிக்கை பயனுடையதாகும்......இந்த எண்ணத்தால் தூண்டப்பட்டு, 1864 ஆம் வருடம், செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி செயின்ட் மார்டின்ஸ் ஹாலில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட பல நாட்டுத் தொழிலாளர்கள், முதலாவது இன்டர் நேஷனலை ஸ்தாபித்தனர்.

"தொழிலாளி வர்க்கத்தின் விமோசனம் பரஸ்பர ஒத்துழைப்பைச் சார்ந்து நிற்கிறது என்றால், ஜனங்களின் ரத்தத்தையும், செல்வத்தையும் கொள்ளைக்கார யுத்தங்களின் மூலம் விரையம் செய்யும், தேசீய உணர்ச்சியைத் தூண்டிவிடும், திருட்டுத்தனமான செயல்களில் ஈடுபடும் அன்னிய நாட்டுக் கொள்கை அமுலில் இருக்கும்பொழுது அவர்கள் எவ்வாறு தங்கள் புனிதமான கடமையை நிறைவேற்றுவது? அடிமைத் தனத்தை நிலை நிறுத்துவதற்காக ஐக்கிய அமெரிக்காவில் நடந்த கீழ்த்தரமான யுத்தத்தில் ஈடுபடுவதிலிருந்து ஐரோப்பாவைக் காத்தது, ஆளும் வர்க்கத்தின் நல்லெண்ணமல்ல; ஆனால் தொழிலாளி வர்க்கத்தின் தீரம் மிகுந்த போராட்டம். அந்த மலைக் கோட்டை, காக்கஸஸ் ருஷ்யாவுக்கு இரையானதையும், தீரம் மிகுந்த போலந்து ருஷ்யாவால் சூறையாடப்பட்டதையும் வெட்கமின்றி ஐரோப்பிய மேல் வர்க்கங்கள் ஆதரித்தன, அல்லது பாராமுகமாக இருந்தன; ஸெயின்ட் பீட்டேர்ஸ்பர்க்கில் வீற்றிருக்கும் மன்னனின் மிருகத்தனமான சக்தியையும், அவன் ஆக்ரமிப்பையும், ஐரோப்பிய மந்திரி சபைகளை

அவன் நிர்வகிப்பதையும் மேல் வர்க்கங்கள் வெட்கமின்றி ஆமோதித்தன. சர்வதேச அரசியல் தந்திரத்தில் நிபுணத்வம் பெற இது தொழிலாளி வர்க்கத்திற்குத் துணை புரிந்தது; தத்தம் நாட்டுச் சர்க்கார்களின் ராஜ தந்திரத்தைக் கண்காணிக்க இது தொழிலாளி வர்க்கத்திற்கு உதவி புரிந்தது......

"இத்தகைய அன்னிய நாட்டுக் கொள்கைக்காக நடக்கும் போராட்டம், தொழிலாளி வர்க்கம் தனது விடுதலைக்காக நடத்தும் பொதுப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும்.

"உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்!"

அதுவரையில் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் தோல்வி அடைந்ததற்குக் காரணம், பல்வேறு தேசத்துத் தொழிலாளர்கள் பரஸ்பரம் தொடர்பின்றி வாழ்ந்ததுதான் என்பதை முதலாவது இன்டர்நேஷனல் தெளிவாக உணர்ந்தது. தொழிலாளர் விடுதலைக்கும் சமூகப் பிரச்னைகளுக்கும் நெருங்கின தொடர்பு இருக்கிறது என்பதை இன்டர்நேஷனல் ஸ்பஷ்டமாக விளக்கிற்று. சர்வதேசத் தொழிலாளர் ஒற்றுமைக்கு அது அஸ்திவாரக்கல் நட்டது. முதலாவது இன்டர்நேஷனலின் கொள்கைகளை விளக்குவதற்காக "பீ-ஹை" என்னும் பத்திரிகை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

புதிய கட்சி உடனே என்ன செய்ய வேண்டும் என்னும் கேள்விக்கு மார்க்ஸ் பதில் கூறினார். பல்வேறு தேசங்களில், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களிடையே தொடர்பு ஏற்படுத்த வேண்டுமென்றும், தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையைப் பற்றிப் புள்ளி விவரங்கள் சேகரிக்க வேண்டுமென்றும், ஒரு தேசத்துத் தொழிலாளர்களின் நிலையைப் பிற தேசத்துத் தொழிலாளர்களுக்கு விளக்க வேண்டுமென்றும், சர்வதேச நெருக்கடி ஏற்படும்பொழுது தொழிலாளர்கள் ஏககாலத்தில் செயலாற்ற வேண்டுமென்றும் மார்க்ஸ் கூறினார். எதிர்கால வேலைத் திட்டத்தை நிர்ணயிக்கவும், லாப நஷ்டக் கணக்குப் பார்க்கவும், ஜனநாயக

முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டம் வருடந்தோறும் நடக்க வேண்டுமென்றும் அவர் யோசனை கூறினர். உலகிலுள்ள தொழிற் சங்கங்களை யெல்லாம் இன்டர் நேஷனல் கொடியின் கீழ் கொண்டுவருவதற்காக வேலைத் திட்டத்தை எவ்வளவு விரிவாக்க முடியுமோ அவ்வளவு விரிவாக்கினர் மார்க்ஸ். ஆனல், கட்டுப்பாடு கடுமையாக இருந்தது.

முதலாவது இன்டர் நேஷனல் வளர்ந்தது. பல தொழிற் சங்கங்கள் இன்டர் நேஷனலில் சேர்ந்தன. பக்கூனினும், அவர் சீடர்களும், பிரௌதோனிஸ்டுகளும் இன்டர் நேஷனலில் சேர்ந்தனர். பிரிட்டிஷ் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களில் சிலரும், பிரெஞ்சுத் தொழிற் சங்க இயக்கத்தைச் சேர்ந்த பலரும் இன்டர் நேஷனலின் வெற்றிக்காக அரும்பாடு பட்டனர். இன்டர் நேஷனலின் கொள்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்தியக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. மத்தியக் கமிட்டியின் நடுநாயகம் மார்க்ஸ். அன்று மார்க்சுக்கு நாற்பத்தாறு வயது.

இத்தாலி, ஸ்பெயின் முதலிய நாடுகளில் இன்டர் நேஷனலின் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அது வளர்ந்தது; நாள்தோறும் வளர்ந்தது. இன்டர் நேஷனலின் வளர்ச்சியைக் கண்டு முதலாளிகள் நடுங்கினர். தலைவர்களைக் கைது செய்து இன்டர் நேஷனலின் வளர்ச்சியைத் தடுக்க அவர்கள் முயன்றனர். ஆனல், இதனல் உண்மையில் இன்டர் நேஷனலின் செல்வாக்கு அதிகரித்தது. முதலாவது இன்டர் நேஷனலின் கிளைகளை உலகெங்கும் ஸ்தாபிக்க மார்க்ஸ் இரவும் பகலும் வேலை செய்தார். இந்த வேலைகளுக்கு இடையில், "மூலதனம்" என்னும் ஒப்பற்ற நூலை அவர் எழுதி முடித்தார்.

லண்டன், ஜீனிவா, லாஸேன், புருஸல்ஸ், பாலே ஆகிய ஊர்களில் மகா நாடுகள் நடந்தன. ஸ்தாபன ரீதியாகவும், கட்டுப்பாடாகவும் இன்டர் நேஷனல் வேலை செய்தது. அந்தச் சமயத்தில், பக்கூனின், மாஜினி, ஜான் ஸ்டுவேர்டு மில் முதலியோர் ஆரம்பித்த சுதந்திர லீகுடன் முதலாவது

இன்டர் நேஷனல் ஒத்துழைக்க வேண்டுமென்று சிலர் யோசனை கூறினர். இந்த யோசனையை மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். ஏனெனில், இது மிதவாதிகளின் ஸ்தாபனம். இதனால் மனக் கசப்படைந்த இத்தாலிய, சுவிஸ் பிரதிநிதிகள், "ஜனநாயக ஒத்துழைப்பு" என்னும் பெயருடன் இன்டர் நேஷனலில் ஒரு வகுப்பை ஸ்தாபித்தனர். இதை இன்டர் நேஷனல் கண்டித்தது. ஏன்? பல உட்பிரிவுகள் இன்டர் நேஷனலையே குழி தோண்டிப் புதைக்கும். முதலாவது இன்டர் நேஷனல் ஒரு கொள்கையைப் பின்பற்றும், ஒரே கருத்துடையவர்களின் ஸ்தாபனமாக விளங்க வேண்டும் என்பது மார்க்ஸ் முடிவு.

மார்க்ஸ், பக்கூனின் கொள்கைப் போர் மீண்டும் ஆரம்பமாயிற்று. முதலாவது இன்டர் நேஷனலின் கொள்கையை எதிர்த்து, பக்கூனின் பகிரங்கமாகப் பிரசாரம் செய்தார். எனவே, பக்கூனின் இன்டர் நேஷனலிலிருந்து விலக்கப்பட்டார்.

நீராவி, யந்திரப் புரட்சியை உண்டு பண்ணிற்று என்றால், மின்சாரம், யந்திர யுகத்தின் போக்கைத் தலைகீழாக மாற்றியது. மூலதனம், குத்தகையை நோக்கி நகர்ந்ததும் நெருக்கடிகளும், போட்டிகளும் அதிகரித்தன. எனவே, உற்பத்தி சக்தியை மேலும் மேலும் வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் முதலாளித்வத்திற்கு ஏற்பட்டது. ஆனால், உற்பத்தி சக்தி அதிகரித்ததைத் தொடர்ந்து ஜனங்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கவில்லை. ஆகவே, சாமான்களின் தேவை குறைந்தது. அதிக உற்பத்தி, குறைந்த தேவை—இந்தச் சுழலில் அகப்பட்டு விழித்தது, முதலாளித்வம். அதே சமயத்தில் முதலாளித்வ உற்பத்தி முறையால் ஒன்றுபடுத்தப்பட்ட தொழிலாளி வர்க்கம், முதலாளித்வ உற்பத்தி முறையால் பாப்பராக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம், முதலாளித்வத்திற்கு சவக் குழி தோண்டிக்கொண்டிருந்தது. இந்த உண்மையை மார்க்ஸ் தெளிவாக உணர்ந்தார்.

முதலாளித்வத்தின் தன்மையை மார்க்ஸ் தர்க்கவியல் லோகாயதக் கண்களால் ஆராய்ந்தார். அதன் விளைவு

தான் "மூலதனம்" என்னும் ஒப்பற்ற நூல். 1867 ஆம் வருடம் "மூலதனம்" முதல் பாகம் வெளிவந்தது.

"முதலாளித்வ உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் செல்வம் பண்ட உருவில் திகழ்கிறது. எனவே, நாம் பண்டத்தின் தன்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்கிறார் மார்க்ஸ். ("மூலதனம்")

மனிதனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருள்களை மார்க்ஸ் பண்டம் என்று அழைக்கிறார். ஒரு பொருளின் உபயோகம் அதற்கு உபயோக மதிப்பை அளிக்கிறது. பண்டம் உபயோகிக்கப்படும் பொழுது தான் அதற்கு உபயோக மதிப்பு ஏற்படுகிறது. உபயோக மதிப்புள்ள ஒரு பொருள் உபயோக மதிப்புள்ள வேறொரு பொருளாக மாற்றப்படுவதைப் பரிவர்த்தனை மதிப்பு என்கிறார் மார்க்ஸ்.

பண்டம் மனித உழைப்பின் சிருஷ்டி. மனித உழைப்பு இரண்டு வகைப்படும்: ஒரு குறிப்பிட்ட பண்டத்தைச் செய்யச் செலவு செய்யப்படும் மனித உழைப்பை (மேஜை, துணி முதலியன) மார்க்ஸ் குறிப்பான உழைப்பு என்கிறார்; பண்டங்கள் அனைத்திற்கும் பொதுவான உழைப்பைப் பொதுவான மனித உழைப்பு என்கிறார்.

பண்டத்தில் பொதுவான மனித உழைப்புப் பொதிந்து கிடப்பதால்தான் அதற்கு மதிப்பு ஏற்படுகிறது. இந்த மதிப்பு சமூகத்திற்கு அவசியமான வேலை நேரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

பண்டமாற்று முறை வளர்ந்து விரிவடைந்ததும், பணம் சமூகத்தில் இடம் பெற்றது. பணம் பரிவர்த்தனையைச் சுலபமாக்குவதோடு, பண்டங்களின் பொதுப் பிரதிபிம்பமாகவும் விளங்குகிறது. எல்லாப் பண்டங்களும் பணத்தின் சம வடிவமாவதாலும், பணம் எல்லாப் பண்டங்களின் சம மதிப்பாவதாலும், பணம் பொதுப் பண்டமாகிறது.

பண்டப் பரிவர்த்தனைதான் மூலதனத்தின் அஸ்திவாரம். இந்தப் பண்டப் பரிவர்த்தனை இரண்டு வகைப்படும். உற்பத்தியாளன் தான் உற்பத்தி செய்யும் பண்டத்தை விற்றுப் பணமாக்குகிறான். இந்தப் பணத்தை அவன் பாங்கியில் போடமாட்டான். ஆனால், இந்தப் பணத்தைக் கொண்டு அவன் தனக்குத் தேவையான வேறு பண்டங்களை வாங்குகிறான். உதாரணமாக, நெசவுத தொழிலாளி தான் நெய்யும் துணியை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு தனக்குத் தேவையான அரிசி முதலிய பொருள்களை வாங்குகிறான். இந்த நடமாட்டத்தைத்தான் பண்டம், பணம், பண்டம் என்கிறார் மார்க்ஸ். இந்த நடமாட்டம் பண்டத்தில் ஆரம்பித்து பண்டத்தில் முடிகிறது. பணம் வைத்திருப்பவன் பணத்தைக் கொடுத்துப் பண்டத்தை வாங்குகிறான். இந்தப் பண்டத்தை அவன் மீண்டும் விற்றுப் பணமாக்குகிறான். உதாரணமாக, பணம் வைத்திருப்பவன் நூறுகெஜம் துணி வாங்கி, அதை மீண்டும் விற்கிறான், லாபத்திற்கு. இந்த நடமாட்டம் பணத்தில் ஆரம்பித்துப் பணத்தில் முடிகிறது. இங்கே பணம் அதிக மதிப்பை உண்டுபண்ணுகிறது. தனது லோகாயதத் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதுதான் வாங்குவதற்காக விற்பவன் நோக்கம். ஆனால், விற்பனைக்காக வாங்குகிறவன் நோக்கம் தனது செல்வத்தைப் பெருக்கிக் கொள்வதுதான். இந்த இயக்கத்தின் போதம் படைத்த பிரதிநிதி என்ற முறையில்தான் தனவந்தன் முதலாளியாகிறான். இதை வர்த்தக மூலதனம் என்கிறார் மார்க்ஸ். மூலதனத்திற்கு இன்னொரு வடிவமும் இருக்கிறது. அதுதான் தொழில் மூலதனம்.

பண மூட்டைகள் அதிக மதிப்பை உண்டுபண்ணும் ஒரு பண்டத்தைத் தேடி அலைந்தது. அந்த அருமையான பண்டத்தைப் பண மூட்டைகள் கண்டுபிடித்தன. அது தான் மனிதனுடைய உழைக்கும் சக்தி. இந்த விசேஷமான பண்டத்தின் மதிப்புத் தொழிலாளியின் வாழ்க்கைத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. இந்தப் பண்டம்தான் உண்மையான அதிக மதிப்பை உண்டுபண்ணுகிறது. . உதாரணமாக, ஓர்

தொழிலாளி பத்து மணி நேரம் வேலை செய்வதாகவும், அவன் கூலி ஒரு ரூபாய் என்றும் வைத்துக்கொள்வோம். இந்த ஒரு ரூபாய் மதிப்பை அவன் ஐந்து மணி நேரத்தில் உற்பத்தி செய்துவிடுகிறான். பாக்கி ஐந்து மணி நேரம் அவன் முதலாளிக்காக இனமாக உழைக்கிறான். இந்த அதிக மதிப்புத்தான் மூலதனத்தின் முதுகெலும்பு.

மார்க்ஸ் மூலதனத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார். ஒரு பகுதி உற்பத்திச் சாதனங்களை (மூலப் பொருள்கள், யந்திரங்கள், கருவிகள் முதலியன) வாங்குவதற்காகச் செலவு செய்யப்படுகிறது. இதைத்தான் ஸ்திர மூலதனம் என்கிறார் மார்க்ஸ். இந்த மூலதனம் ஸ்திரமானது. இது அதிக மதிப்பை உண்டுபண்ணாது. மூலதனத்தின் வேறொரு பகுதி மனிதனுடைய உழைக்கும் சக்தியை வாங்குவதற்காகச் செலவு செய்யப்படுகிறது. இது சம மதிப்பை உண்டுபண்ணுவதுடன் அதிக மதிப்பையும் உண்டுபண்ணுகிறது. இந்த அதிக மதிப்பு மாறக் கூடியது; இது ஸ்திரமற்றது. எனவே, இதை மாறும் மூலதனம் என்கிறார் மார்க்ஸ்.

அதிக மதிப்பை அதிகப்படுத்துவதற்காக முதலாளிகள் அதிக நேரம் வேலை செய்யும்படி தொழிலாளர்களை நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள். ஏனெனில், வேலை நேரம் அதிகரிக்க அதிகரிக்க அதிக மதிப்பும் அதிகரிக்கும். ஆனால், தொழிலாளர்கள் இதை எதிர்க்கிறார்கள். வேலை நேரத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அதிகப்படுத்துவதை இயற்கை அனுமதிக்கவில்லை. எனவே, முதலாளிகள் வேறுவழிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். தொழிலாளியின் கூலியை ஈடு செய்யும் அவசியமான வேலை நேரத்தைக் குறைக்கவும், குறைந்த நேரத்தில் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்யவும் அவர்கள் முயலுகிறார்கள். யந்திரத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலம் முதலாளி தனது நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்ளுகிறான். உதாரணமாக, ஒரு யந்திரத்தறி ஒரு மணி நேரத்தில் ஒரு கெஜம் துணி நெய்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதை மேலும் அபிவிருத்தி செய்து ஒரு மணி நேரத்தில் இரண்டு கெஜம் துணி நெய்யும்

படி செய்கிறான் முதலாளி. இதனால் தொழிலாளி பல மடங்கு அதிகமான அதிக மதிப்பை உண்டுபண்ணுகிறான். இந்த அதிக மதிப்பைச் சுரண்டிக் கொழுக்கிறான் முதலாளி.

மூலதனம் மேலும் மேலும் மலைபோல் குவியும். ஆனால், யந்திரங்களில் அபிவிருத்தி ஏற்பட ஏற்பட மூலதனம் குத்தகை வடிவம் எடுக்க எடுக்க, முதலாளிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகும். மூலதனம் ஒரு சிலர் கையில் குவியும். இந்தக் குத்தகை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்கும். முதலாளித்வ உற்பத்தி முறை அழியும்.

"கீழ்த்தரமான செயல்களாலும், பேராசையாலும் தூண்டப்பட்ட முதலாளித்வம் கைத்தொழிலாளர்களை மிருகத்தனமாகச் சுரண்டிற்று. விவசாயிகளும், கைத் தொழிலாளர்களும் சேமித்த சொத்துக்குப் பதிலாக முதலாளித்வத் தனிச் சொத்துமுறை உருவெடுத்தது. தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் இது உயிர் வாழ்கிறது...இனி, தனக்காக உழைக்கும் தொழிலாளியைச் சுரண்டவேண்டிய அவசியமில்லை; ஆனால், பல தொழிலாளர்களைச் சுரண்டும் முதலாளியைத் தான் சுரண்டவேண்டும். முதலாளித்வ உற்பத்தி முறையில் பொதிந்து கிடக்கும் நியதிகள்—மூலதனத்தை மையமாக்குதல்—இந்த நிலையை உண்டுபண்ணும். ஒரு முதலாளி பல முதலாளிகளை அழிப்பான். சில முதலாளிகள் பல முதலாளிகளைச் சுரண்டுவதைத் தொடர்ந்து உழைப்பின் கூட்டுத் தன்மை மேலும் மேலும் வளரும்; யந்திரத்தை அபிவிருத்தி செய்வதற்காக விஞ்ஞானம் பயன்படுத்தப் படும்; நிலம் முறையாகச் சாகுபடி செய்யப்படும்; உழைப்புக் கருவிகள் கூட்டு முறையில் மாத்திரம் உபயோகிக்கக் கூடிய நிலையை அடையும்; உற்பத்திச் சாதனங்கள் வளர்ந்து, சமூகத் தன்மை பெறும்; உலக மக்கள் உலக மார்க்கெட் என்னும் வலையில் சிக்குவார்கள். முதலாளித்வ ஆட்சி முறை மேலும் மேலும் சர்வ தேசத் தன்மை பெறும். ஒரு புறத்தில், முதலாளிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகும்; மறு புறத்

தில் வறுமை, அடக்குமுறை, அடிமைத்தனம், சீரழிவு, சுரண்டல் ஆகியவை வளரும். அதே சமயத்தில், தொழிலாளி வர்க்கத்தின் ஆத்திரம் அதிகமாகும். இந்த வர்க்கத்தை முதலாளித்வ உற்பத்தி முறை மேலும் மேலும் ஒன்று படுத்தும், வலுப்படுத்தும். முதலாளித்வக் குத்தகை, அது வளர்த்த உற்பத்தி முறைக்கு முட்டுக் கட்டையாகிறது. உற்பத்திச் சாதனங்கள் மையமாக்கப் படுவதாலும், உழைப்பு சமூக மயமாக்கப் படுவதாலும் முதலாளித்வத்தின் நிலை ஆபத்தாகிறது. அது வெடிக்கிறது. முதலாளித்வ உற்பத்தி முறையின் சாவு மணி கேட்கிறது. சுரண்டுவோர் சுரண்டப்படுகின்றனர்" என்கிறார் மார்க்ஸ் ("மூலதனம்")

"மூலதனம்" இரண்டாவது பாகம் முதலாளித்வப் புனர் உற்பத்தியை விளக்குகிறது. இந்த நூலில் முதலாளித்வத்தின் பொது அம்சங்களை அவர் விரிவாக ஆராய்கிறார். சமூக உற்பத்தியை மார்க்ஸ் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்: ஒன்று, உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் பிரிவு; மற்றொன்று, வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் பிரிவு. சமூக மூலதனம் எவ்வாறு பரிவர்த்தனையாகிறது என்பதை இரண்டாவது பாகத்தில் மார்க்ஸ் தெளிவாக விவரிக்கிறார்.

"மூலதனம்" மூன்றாவது பாகத்தில் மதிப்பின் நியதியை அடிப்படையாகக் கொண்டு அவர் லாபத்தின் விகிதத்தை நிர்ணயிக்கிறார்.

முதலில் அதிக மதிப்பின் தத்துவத்தை அவர் ஆராய்கிறார். பிறகு, அதிக மதிப்பை லாபம், வட்டி, வாடகை ஆகிய மூன்று பிரிவுகளாகப் பிரிக்கிறார்.

நில வாடகையின் தன்மையை அவர் விவரிக்கிறார். விவசாயத்தின் அடிப்படையான அம்சங்கள் எவை என்பதையும் மார்க்ஸ் தெளிவு படுத்துகிறார். இந்த இரண்டு நூல்களையும் எங்கல்ஸ் பிரசுரித்தார்.

1870ஆம் வருடம் ஜுலை மாதம் 19ஆம் தேதி பிரெஞ்சு—ஜெர்மன் யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்த யுத்தம் ஆரம்பமானதும் முதலாவது இன்டர் நேஷனல் ஒரு அறிக்கை விடுத்தது.

பிஸ்மார்க், அன்னிய நாடுகளை அடக்கி ஒடுக்க முயலு வாரென்றும், அந்த வேலையில் ஜெர்மன் தொழிலாளர்கள் அவருக்கு உதவிபுரியக் கூடாதென்றும் முதலாவது இன்டர் நேஷனல் ஜெர்மன் தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டது. பிரெஞ்சுத் தொழிலாளர்களின் தேவை களும், ஜெர்மன் தொழிலாளர்களின் தேவைகளும் ஒன்று தான் என்பதையும், இருவர் நன்மையும் முதலாளித்வத் தால் பாதிக்கப்படுகிறது என்பதையும், முதலாளிகளின் பேராசைதான் யுத்தத்திற்குக் காரணம் என்பதையும் அந்த அறிக்கை தெளிவாக்கிற்று. மன்னரை வீழ்த்தின பிறகு விரிவான ஜனநாயகத் தத்துவங்களை அடிப்படை யாகக் கொண்ட ஒரு குடியரசை ஏற்படுத்தும்படி இன்டர் நேஷனல் பிரெஞ்சுக்காரர்களைக் கேட்டுக் கொண்டது.

"ஒவ்வொரு நாட்டிலும் இருக்கும் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் செயலாற்றும் படி தொழிலாளி வர்க்கத்தைத் தட்டி எழுப்பட்டும். தங்கள் கடமையை அவர்கள் புறக்கணித்தால், அவர்கள் செயலாற்றுமல் இருந்தால், இந்த யுத்தம் மிகப் பயங்கர மான அடக்குமுறையின் முன்னோடியாக மாறும்; முதலாளிகள் மீண்டும் தொழிலாளர் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள்"

ஜெர்மன் மார்க்சிஸ்டுகள் யுத்தம் ஆரம்பமானதும், யுத்த எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். வில்லியம் லீப்னெட்டும், பெபலும் யுத்தக் கடனை எதிர்த்து, பகிரங்க மாக ஓட் செய்தனர். அல்ஸேஸ்—லோரேனை ஜெர்மனி யுடன் இணைக்கும் தீர்மானத்தையும் அவர்கள் எதிர்த் தனர். இந்தக் குற்றத்திற்காக ஜெர்மன் சர்க்கார் லீப் னெட்டையும், பெபலையும் கைது செய்தது.

ஸீடான் போரில் பிரெஞ்சு சேனை தோல்வி அடைந் தது. மன்னர் கைதியானார். ஜெர்மன் சிப்பாய்கள் பாரிஸ் நகரை முற்றுகையிட்டனர். ஆல்ஸேஸ்—லோரேனை ஜெர்மனிக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், யுத்த நஷ்ட ஈடாக பிரான்ஸ் ஜெர்மனிக்கு ஐந்து பில்லியன் பிராங்கு கொடுக்க வேண்டுமென்றும் ஜெர்மன் மன்னர்

கட்டளையிட்டார். ஜெர்மன் மன்னரின் ஏகாதிபத்திய வெறியை வன்மையாகக் கண்டித்தது முதலாவது இன்டர் நேஷனல். "ராணுவ நோக்கத்துடன் எல்லைகள் வகுப்ப தாயின் அதற்கு முடிவே இருக்க முடியாது. ஏனெனில், எல்லா ராணுவ முடிவுகளும் தவறானவை. எனவே, தவறைத் திருத்துவதற்காகப் புதிய தேசங்களைக் கைப் பற்ற வேண்டிய அவசியம் நேரும். அத்துடன் வெற்றி அடைந்தவர்களோ, தோல்வி அடைந்தவர்களோ எல்லை களை மீண்டும் திருத்தி அமைப்பார்கள். எனவே, இது யுத்தத்தை வளர்க்கும்" என்று 1870ஆம் வருடம் மார்க்ஸ் எழுதினர். இந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தக் கடன் மசோதா மீண்டும் விவாதத்திற்கு வந்தபொழுது மார்க் ஸிஸ்டுகளும், ஏனைய இடது சாரிகளும் இதை எதிர்த்தனர். "முதல் முறையாக முதலாவது இன்டர் நேஷனலின் தத்துவமும், கொள்கையும் ஒரு ஐரோப்பிய சட்ட சபை யில் இடம் பெற்றது" என்று எங்கல்சுக்கு மார்க்ஸ் எழுதினர். உலகத் தொழிலாளர்களின் ஐக்கிய முன்னணி உரம் பெற்றது.

பாரிஸ் முற்றுகை பிரெஞ்சு முதலாளிகளைத் தட்டி எழுப்பிற்று. ஆயுதபாணிகளான தொழிலாளர்கள் போர் முரசு கொட்டினர். போரைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள அவர்கள் முயன்றனர். இதைக் கண்டு பயந்தது பிரெஞ்சு முதலாளி வர்க்கம். தொழிலாளி வர்க்கத்தை நசுக்குவதற்கு ஜெர்மன் முதலாளிகளும், பிரெஞ்சு முதலாளிகளும் திட்டமிட்டனர். தொழிலாளி வர்க்கத்திடமிருந்து சொத்தையும் ஒழுங்கையும் பாது காக்க, பிரெஞ்சு முதலாளிகளுக்கு உதவி புரிய பிஸ்மார்க் இணங்கினர். பிஸ்மார்க் ஆசீர்வாதத்துடன் தியேர்ஸ் தலைமையில் புதிய சர்க்கார் பிறந்தது. தியேர்ஸ் சர்க்கார் பாரிஸ் நேஷனல் கார்டை நிராயுதபாணியாக்க முயன்றது. தியேர்ஸ் சர்க்காரின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தது, நேஷனல் கார்ட். பாரிஸ் மக்கள் தியேர்சுக்கும், அவர் "திருக் கூட்டத்திற்கும்" விடை கொடுக்க முடிவு செய்தனர். உலகப் பிரசித்தி பெற்ற பாரிஸ் கம்யூன் பிறந்தது!

3 286.

ஏழாம் அத்தியாயம்

1789 ஆம் வருடம் பிரபுத்வம் வீழ்ந்த பிறகு பிரான்சில் அரசியல் நிலையும், பொருளாதார அமைப்பும் தலை கீழாக மாறின. முதலாளிகள் தங்கள் சர்வாதிகாரத் வத்தை உறுதியான அஸ்திவாரத்தின் மீது ஸ்தாபிக்க முயன்றனர்; அதே சமயத்தில் தங்கள் கோரிக்கைகளைப் பெற, சுயசிரம ஜீவிகளும் இடைவிடாது போராடினர். முதலாவது பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு இந்த இரண்டு வர்க்கங்களும் மரணப் போரில் ஈடுபட்டன.

ஒவ்வொரு பிரெஞ்சுப் புரட்சியிலும் தொழிலாளி வர்க்கம் முன்னணியில் நின்றது. ஒவ்வொரு புரட்சியும் தொழிலாளி வர்க்கத்தின் மகத்தான தியாகத்தால்தான் வெற்றி பெற்றது. புரட்சியின் வெற்றிக்குப் பிறகு தங்கள் கோரிக்கைகளைப் பெற, தொழிலாளர்கள் இடைவிடாது முயன்றனர். ஆனால், இந்தக் கோரிக்கைகள் தெளிவாக இருக்கவில்லை. அவ்வப்பொழுது தொழிலாளர்கள் சமர்ப் பித்த கோரிக்கைகள் அவர்கள் வளர்ச்சியை எடுத்துக் காட்டின. வர்க்க விரோதத்தை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர்கள் வேலை செய்தனர்; இந்த அஸ்திவாரத்தின் மீதுதான் அவர்கள் எதிர்காலம் என் னும் கட்டிடத்தைக் கட்ட முயன்றனர். ஆனால், முதலா ளித்வ சமூகத்தை எவ்வாறு அழித்தொழிப்பது என்பது பிரெஞ்சுப் புரட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லை. எனி னும், தொழிலாளர்கள் அன்றைய சமூக அமைப்பை அச் சுறுத்தினர். தொழிலாளர்கள் ஆயுதபாணிகளாக இருந்த தால், முதலாளித்வம் நடுங்கிற்று. எனவே, தொழிலாளர் களை நிராயுதபாணிகளாக்குவதில் அதிகாரத்திலிருந்த முத லாளிகள் அதிகக் கவனம் செலுத்தினர். ஒவ்வொரு புரட்சி யின் வெற்றிக்குப் பிறகும் புதிய போராட்டம் ஆரம்ப மாயிற்று.

1848 ஆம் வருடம் இந்த நாடகம் நடந்தது. வர்க்கப் போராட்டம் ஆரம்பமானதும், வழக்கம்போல் முதலாளி

கள் கொடுமையின் சிகரத்தை அடைந்தனர். தனிச் சொத்து முறையை எதிர்க்கும் சக்திகளை அவர்கள் ரத்த வெள்ளத்தில் அமிழ்த்த முயன்றனர். ஆனல், 1871ஆம் வருட நிகழ்ச்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 1848ஆம் வருடக் கொடுமைகள் குழந்தைகளின் விளையாட்டு!

சுயசிரம ஜீவிகள் பிரான்ஸை ஆள முடியவில்லையென்றல், முதலாளிகளும் பிரான்ஸை ஆள முடியவில்லை. ஏனெனில், முதலாளிகள் ஒன்றுபட்டிருக்கவில்லை. அவர்களிடையே அபிப்பிராய வேற்றுமை இடம்பெற்றிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் லூயி போனபார்ட் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர் சந்தர்ப்பவாதி; சூழ்ச்சிக்காரர்; எது செய்யவும் தயங்காதவர். அவர் அதிகாரத்தைக் கைப்பற்றின பிறகு இரண்டாவது சாம்ராஜ்யம் பிறந்தது. இரண்டாவது சாம்ராஜ்யம் (1852-70) பிறந்ததும் அரசியல் திருடர்களும், பொருளாதாரக் கொள்ளைக்காரர்களும் பிரான்ஸை இரக்கமின்றிச் சுரண்ட ஆரம்பித்தனர்.

இரண்டாவது சாம்ராஜ்யத்தில் தொழிற்சாலைகள் அமோகமாகப் பெருகின. மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிற்சாலை முதலாளிகள் வளர்ந்தனர். புதிய தொழிற்சாலைகள் பெரிய முதலாளிகளின் குத்தகையாக இருந்தன.

லூயி போனபார்ட் காலத்தில் பிரான்சில் லஞ்சமும், சூழ்ச்சியும் தலைவிரித்தாடின. சந்தர்ப்ப வாதிகள் தேசத்தை ஆண்டனர். நாடு பிடிக்க வேண்டும் என்னும் ஆசையும் அதிகரித்தது. முதலாவது சாம்ராஜ்யத்திற்குச் சொந்தமாக இருந்த பிரதேசங்களை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்னும் சுலோகம் திக்குகள் எட்டும் அதிரக் கோஷிக்கப்பட்டது. வளரும் பிரெஞ்சு முதலாளிகளின் பார்வை செல்வம் கொழிக்கும் ரைன்லாந்து மீது விழுந்தது. அவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். 1866ஆம் வருடம் ஆஸ்திரியாவும் ப்ரஷ்யாவும் போராடின. ஜெர்மன் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தவும்,

உறுதிப்படுத்தவும் பிஸ்மார்க் தொடுத்த யுத்தம் இது. தனது ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள இந்த யுத்தம் லூயி போனபார்டுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திக் கொள்ள வில்லை. ஏனெனில், அவரைப் பிஸ்மார்க் ஏமாற்றினார். அந்த யுத்தத்தில் பிரான்ஸ் நடு நிலைமை வகித்தால், ஜெர்மனியின் ஒரு பகுதியை பிரான்சுக்கு அளிக்க, பிஸ்மார்க் இசைந் தார். சந்தர்ப்பவாதி லூயி போனபார்ட்டை, சந்தர்ப்ப வாதி பிஸ்மார்க் ஏமாற்றினார்! எனவே, அரைமனத்துடன் லூயி போனபார்ட் போர்க்களத்தை நோக்கி நடந்தார். பிரெஞ்சு—ஜெர்மன் யுத்தம் ஆரம்பமாயிற்று.

1870ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி லூயி போனபார்ட் தலைமையில் போராடின சேனையில் பெரும் பகுதி ஸீடானில் சரணகதி அடைந்தது. பிரான்ஸ் எங்கே போகிறது என்பதை, பாரிஸ் தொழிலாளர்கள் தெளிவாக உணர்ந்தனர். பிரெஞ்சுப் பிற்போக்காளர் கள் பிரான்ஸை ஜெர்மனிக்குப் பாத காணிக்கை செலுத்த முயலுவதைத் தெளிவாகக் கண்டனர் பாரிஸ் மக்கள். எனவே, அவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிவு செய்தனர். 1870ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி புரட்சி ஆரம்பமாயிற்று. உடனே இரண்டாவது சாம்ராஜ்யம் இடிந்து தகர்ந்தது. மீண்டும் குடியரசு பிறந்தது.

அன்று பிஸ்மார்க்கின் சேனை, பாரிஸை வளைத்துக் கொண்டிருந்தது. கோட்டை வாசலில் எதிரிகள் அணி வகுத்து நின்றனர். எனவே, புதிய குடியரசு தேசத்தைப் பாதுகாக்கும் வேலையில் அதிகக் கவனம் செலுத்திற்று. தேசத்தைப் பாதுகாப்பதற்காகத் "தற்காலிகத் தேசப் பாதுகாப்புச் சர்க்கார்" ஸ்தாபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆயுதமேந்தின சுயசிரம ஜீவிகளும், முதலாளி களும் முட்டி மோதினர்.

அக்டோபர் 31ஆம் தேதி சுயசிரம ஜீவிகள் முத லாளிகளை எதிர்த்துப் போர் புரிந்தனர். முதலாளித்வ யந்தி ரத்தை நிர்வகித்த பலர் கைது செய்யப்பட்டனர். ஆனால், துரோகத்தாலும், மத்திய வர்க்கத்தின் தலையீட்டாலும்,

எதிரிகள் தலைவாசலில் நின்றதாலும், உள்நாட்டுக் கலகம் தொடர்ந்து நடக்கவில்லை.

1871ஆம் வருடம் ஜனவரி மாதம் எட்டாம் தேதி முதலாளிகள் பிஸ்மார்க்கிடம் சரணாகதி அடைந்தனர். தொழிலாளர்களின் எழுச்சியை நசுக்குவதற்காக முதலாளிகள் எது செய்யவும் தயங்க மாட்டார்கள் என்பதை இந்தச் சரணாகதி நிரூபித்தது. ஆயுதமேந்தின பாரிஸ் தொழிலாளர்கள் எந்த நிமிடத்திலும் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்ற நிலை ஏற்பட்டதும் பிரெஞ்சு முதலாளிகள் பிரான்ஸை ஜெர்மனிக்கு விற்றனர்! ஜனவரி மாதம் எட்டாம் தேதி பாரிஸ் கோட்டைகள் எதிரிகளிடம் ஒப்படைக்கப்பட்டன; யுத்தக் கருவிகள் எதிரிகளுக்குக் கொடுக்கப்பட்டன. இந்த அவமதிப்பை எதிர்க்க முடிவு செய்தனர், பாரிஸ் மக்கள். தொழிலாளர் ராணுவம்—நேஷனல் கார்டு—சரணாகதி அடைய மறுத்தது. பிரெஞ்சு முதலாளிகள் சரணாகதி அடைந்த பிறகுகூட ஜெர்மன் ராணுவம் பாரிஸில் நுழையத் துணியவில்லை. ஏனெனில், அது நேஷனல் கார்டுக்குப் பயந்தது! நேஷனல் கார்டு ஜெர்மானியருடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தப்படி ஜெர்மானியர் பாரிஸின் ஒரு சிறிய மூலையை—அதுவும் நந்தவனங்களை—மாத்திரம்தான் கைப்பற்றினர். பாரிஸை 131 நாட்கள் தொடர்ந்து முற்றுகையிட்ட ஜெர்மன் சேனையை ஆயுதமேந்தின சுயசிரம ஜீவிகள் வளைத்துக் கொண்டனர்! பிரெஞ்சு சாம்ராஜ்ய சேனையை உருக்குலைத்த பிஸ்மார்க், ஆயுதமேந்தின சுயசிரம ஜீவிகளுக்குத் தலை வணங்க நேர்ந்தது! புரட்சிக் கோட்டையைத் தவிடுபொடியாக்க விரும்பின பிஸ்மார்க், புரட்சிக் கோட்டை இருக்கும் திக்கை நோக்கி வணங்கினார்!

பாரிஸ் சரணாகதி அடைந்தபிறகு தியேர்ஸ் தலைமையில் சரணாகதி சர்க்கார் ஸ்தாபிக்கப்பட்டது. இந்தச் சர்க்கார் பாரிஸில் இருக்கத் துணியவில்லை. எனவே, தியேர்ஸ் கம்பெனியார் மார்சேல்சுக்குச் சென்றனர்.

பாரிஸ் தொழிலாளர்கள் ஆயுதபாணிகளாக இருக்கும் வரையில் முதலாளித்வம் நிம்மதியாக வாழ முடியாது

என்பது தியேர்சுக்குத் தெரியும். எனவே, அவர் நேஷனல் கார்டைக் கலைக்க முயன்றார். மார்ச்சு மாதம் பதினெட்டாம் தேதி நேஷனல் கார்டுக்குச் சொந்தமான பீரங்கிகளைக் கைப்பற்ற அவர் சிப்பாய்களை அனுப்பினார். இந்தப் பீரங்கிகள் தொழிலாளர்களுக்குச் சொந்தம். பாரிஸ் முற்றுகையிடப் பட்டபொழுது, அவர்கள் நன்கொடை வசூலித்துப் பீரங்கிகள் வாங்கினர். இந்தப் பீரங்கிகளைப் பிடுங்க முயன்றார் தியேர்ஸ்! ஆனால், பாரிஸ் தொழிலாளர்கள் இந்த முயற்சியை எதிர்த்தனர். 1871ஆம் வருடம் மார்ச்சு மாதம் பதினெட்டாம் தேதி அதிகாலையில் "கம்யூன் நீடூழி வாழ்க!" என்னும் வெற்றிக் கோஷம் வானைப் பிளந்தது.

"தோல்விகளும், அதிகார வர்க்கத்தின் துரோகங்களும் ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்தின: நிலைமையைச் சமாளிக்க வேண்டுமானால் பாரிஸ் சுயசிரம ஜீவிகள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்...சர்க்காரைக் கைப்பற்றி, தங்கள் எதிர் காலத்தை நிர்ணயிக்கத் தங்களுக்குப் பரிபூரண உரிமை உண்டு என்பதை அவர்கள் உணர்ந்தனர்! பாரிஸ் தொழிலாளர்கள் வீறு கொண்டு எழுந்தனர்; உலகம் அதுவரையில் கண்டிராத ஒரு புது உலகம் பிறந்தது. சாம்ராஜ்யத்தின் நேரடியான எதிர்மறை கம்யூன்" என்கிறார் மார்க்ஸ்.

அதிகாரத்தைக் கைப்பற்றின பிறகு, தொழிலாளி வர்க்கம் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தது. மார்ச்சுமாதம் 30ஆம் தேதி முதலாளித்வத்தின் கூலிப் பட்டாளத்தை ரத்துச் செய்தது கம்யூன். கூலிப்பட்டாளத்திற்குப் பதிலாக ஜனங்களின் ராணுவம் பிறந்தது' புதிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தையும் நிர்ணயித்தது. 6000 பிராங்குக்கு அதிகமாக யாருக்கும் சம்பளம் கொடுக்கக்கூடாது என்றது புதிய சம்பளச் சட்டம். இதேபோன்று குறைந்த பட்சச் சம்பளத்தையும் கம்யூன் நிர்ணயித்தது. உழைப்புக்கு அது மதிப்புக் கொடுத்தது; வேலைக்கு உத்தரவாதம் அளித்தது. ஏப்ரல் மாதம் ஆறும்தேதி சர்க்காரிலிருந்து சர்ச்சைப் பிரித்தது கம்யூன். மத விஷயங்களுக்குச் சர்க்கார் கொடுத்துவந்த

மானியம் நிறுத்தப்பட்டது; சர்ச்சுகளின் சொத்து, தேசத்தின் சொத்தாக்கப் பட்டது. பள்ளிக் கூடங்களில் மதக் கல்வி புகட்டக் கூடாதென்னும் சட்டம் ஏப்ரல் மாதம் எட்டாம்தேதி பிறந்தது. கொடுமையின் சின்னமாக விளங்கின தூக்குமரம் பகிரங்கமாக எரிக்கப்பட்டது. போராட்ட காலத்தில் முதலாளிகள் மூடின தொழிற் சாலைகளை மீண்டும் திறந்தது கம்யூன். கூட்டுமுறையில் தொழிற் சாலைகளைத் தொழிலாளர்கள் நிர்வகிக்கவேண்டு மென்றும் கம்யூன் கட்டளையிட்டது. ஏப்ரல்மாதம் 20ஆம்தேதி பிறப்பிக்கப்பட்ட சட்டம் தொழிலாளர் களின் வேலை நேரத்தை நிர்ணயித்தது. வட்டிக்கடை களை மூடும்படி 30ஆம்தேதி கம்யூன் கட்டளையிட்டது.

கம்யூன் தொழிலாளி வர்க்கத்தின் சிருஷ்டி. தொழிலாளர்களோ, அல்லது அவர்கள் பிரதிநிதிகளோ கம்யூனை நடத்தினர். தொழிலாளர் ஆட்சி எத்தகையதாக இருக்கும் என்பதைப் பாரிஸ் கம்யூன் தெளிவு படுத்திற்று.

தியேர்ஸ், கம்யூனை உக்ரமாக எதிர்த்தார். கம்யூனை ரத்தவெள்ளத்தில் அமிழ்த்துவதற்காகச் சீடானில் சரணாகதி அடைந்த சிப்பாய்களை விடுதலை செய்யும்படி தியேர்ஸ் பிஸ்மார்க்கைக் கெஞ்சிக் கேட்டார். முதலாளித்வத்தை அச்சுறுத்தின கம்யூனை அழிக்க, பிஸ்மார்க் பிரெஞ்சு முதலாளிகளுக்கு உதவி புரிந்தார். மே மாதம் 21ஆம் தேதி தியேர்ஸ் சேனை, பாரிஸில் பிரவேசித்தது. எனினும், கம்யூன் வீரர்கள் எட்டு நாட்கள் முதலாளித்வ சேனையை எதிர்த்துப் போர்புரிந்தனர். போராட்டத்தில் பிறந்த பாரிஸ் கம்யூன் போர்க்களத்தில் மடிந்தது. "தொழிலாளர்களின் பாரிஸ், கம்யூனைக் கண்ட பாரிஸ் புதிய சமூகத்தின் முன்னோடியாக விளங்கும்; அதன் தியாகிகள் தொழிலாளர்களின் ஹிருதயங்களில் என்றும் கோயில் கொள்ளுவார்கள்" என்கிறார் மார்க்ஸ்.

பாரிஸ் கம்யூன் இன்னொரு உண்மையையும் தெளிவு படுத்திற்று. தொழிலாளிவர்க்கம் அதிகாரத்தைக் கைப் பற்றினபிறகு, அது பழைய அரசியல் அமைப்பைப் பயன் படுத்திக்கொள்ள முடியுமா என்னும் கேள்விக்கு, பாரிஸ்

கம்யூன் தெளிவாகப் பதில் அளித்தது. "தனது திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்காக முதலாளித்வ அரசியல் அமைப்பைத் தொழிலாளிவர்க்கம் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்பதைப் பாரிஸ் கம்யூன் தெளிவு படுத்திற்று" என்கிறார் மார்க்ஸ்.

முதலாளித்வ சர்வாதிகாரத்தின் சின்னம், முதலாளித்வ சர்க்கார். தொழிலாளி வர்க்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவும், தொழிலாளி வர்க்கத்தை இரக்கமின்றிச் சுரண்டவும் முதலாளிகள் உருவகப்படுத்தின ஆட்சி முறை நவீன சர்க்கார். எனவே, தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றினதும், முதலாளித்வ சர்க்காரை அடித்துத் தகர்க்கவேண்டும் என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். இதைச்செய்தது பாரிஸ் கம்யூன். "சுயசிரம ஜீவிகளின் புரட்சி கண்டுபிடித்த புதிய ஆட்சிமுறை கம்யூன். முதலாளித்வ சர்க்காரையும், அதைச் சார்ந்து நிற்கும் அரசியல் வடிவங்களையும் தகர்த்த பிறகு புதிய ஆட்சி முறை தோன்ற வேண்டுமல்லவா? அந்தப் புதிய ஆட்சி முறைதான் கம்யூன்" என்கிறார் லெனின்.

புதிய சமூக நியதியை அமுலுக்குக் கொண்டுவந்த கம்யூன், செங்கொடியின் கீழே போர்புரிந்த கம்யூன் தோல்வி அடைந்ததேன்? பாரிஸ் மக்கள் அத்தனைபேரும்- ஆண்கள், பெண்கள், வயோதிகர்கள்—தீரத்துடன் போர் புரிந்தும், தங்கள் ஆட்சியைக் காக்கக் கம்யூன் வீரர்கள் மகத்தான தியாகம் செய்தும் முதலாளித்வம் வெற்றி பெற்றதேன்?

பிளாங்கியிஸ்டுகளும், பிரௌதோனிஸ்டுகளும் கம்யூனில் அங்கம் வகித்தனர். முதலாவது இன்டர்நேஷனலைச் சேர்ந்த ஒரு சிலரும் கம்யூனில் அங்கம் வகித்தனர். பிளாங்கியிஸ்டுகளும் புரட்சிக்காரர்கள்; உணர்ச்சி வழியில் சோஷலிஸத்தை விரும்புகிறவர்கள். அவர்கள் விஞ்ஞான சோஷலிஸ்டுகளல்ல. எனவே, அரசியல் துறையில் அவர்கள் பல தவறுகள் செய்தனர். அதே போன்று, பொருளாதாரத் துறையில் கம்யூன் செய்திருக்க வேண்டிய பல வேலைகளைக் கம்யூன் செய்யத் தவறினதற்குக் கார

ணம் பிரௌதோனிஸ்டுகள். ஒன்றுபட்ட கருத்துடையவர்கள் நெருக்கடியான காலத்தில் கம்யூனை நடத்தவில்லை.

"பிரெஞ்சு பாங்கிக்கு முன் அவர்கள் பயபக்தியுடன் நின்றதற்குக் காரணம் விளங்கவில்லை. அதுமிகப் பெரிய அரசியல் தவறு. இந்தப் பாங்கி பத்தாயிரம் ஜாமீன் கைதிகளைவிட மதிப்புடையது. இந்தப் பாங்கி, கம்யூன் நிர்வாகத்தில் இருந்தால், கம்யூனுடன் சமரசம் செய்து கொள்ளும்படி பிரெஞ்சு முதலாளிகள் வெர்சேல்ஸ் சர்க்காரை நிர்ப்பந்தப் படுத்துவார்கள்" என்கிறார் எங்கல்ஸ். கம்யூன் செய்த இரண்டாவது தவறு இது.

கம்யூன் சில தவறுகள் செய்தாலும், கம்யூன் ஒருசில நாட்களில் சாதித்த சாதனைகள் வியக்கத் தக்கவை. மாறுபட்ட கொள்கை உடையவர்களைக் கொண்ட கம்யூன் பிரமாதமான காரியங்களைச் செய்தது என்பது தொழிலாளி வர்க்கம் பெருமைப் படத்தக்க விஷயம்.

இளம் கம்யூன் முதலாளித்வத்தின் ஏகோபித்த தாக்குதலை எதிர்த்து நிற்க முடியவில்லை. கிராமங்களும் சிறு நகரங்களும் போரில் இழுக்கப்படவில்லை. கம்யூன் பிரான்ஸ் முழுவதும் பரவவில்லை. எனவே, கம்யூன் விழுந்தது. 1871 ஆம் வருடம் விழுந்த பாரிஸ் கம்யூன் 1917 ஆம் வருடம் ரஷ்யாவில் சோவியத் வடிவத்தில் மீண்டும் உருவெடுத்தது. ஆம்; புது உலகத்தின் முன்னோடி பாரிஸ் கம்யூன். கம்யூன் வாழ்க!

பாரிஸ் கம்யூனைப் பற்றி மார்க்ஸ் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தில் நிகழ்த்தின சொற்பொழிவின் சாரம் வருமாறு:

"தொழிலாளி வர்க்கம் அமுலிலுள்ள சர்க்காரைக் கைப்பற்றி, அந்தச் சர்க்காரைத் தனது நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகப் பயன் படுத்திக் கொள்ள முடியாது.

"தொழில் பிரிவினை ஏற்பட்ட பிறகு அமுலுக்கு வந்த நிரந்தர ராணுவம், போலீஸ், ஆளும்வர்க்கம், மதகுருக்கள், சட்டம் முதலியவைகளைத் தன்னுட் கொண்ட,

மையமாக்கப் பட்ட சர்க்கார் அதிகாரம் முடியாட்சியின் காலத்தில் பிறந்தது. பிரபுத்வத்தை எதிர்த்து மத்திய வர்க்கம் நடத்தின போராட்டத்தில் இது மத்திய வர்க்கத்திற்குத் துணை புரிந்தது. எனினும், மத்திய காலப் பழக்க வழக்கங்களும், நில உரிமைகளும், சலுகைகளும், முனிசிபல் ஆதிக்கங்களும், மாகாண ஸ்தாபனங்களும் இதன் வளர்ச்சிக்குக் குறுக்கே நின்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் நடந்த மகிமை பொருந்தின பிரெஞ்சுப் புரட்சி பழங்காலச் சின்னங்களைத் தகர்த்து, நவீன சர்க்கார் தோன்ற இடம் அளித்தது. முதலாவது சாம்ராஜ்யம் என்னும் அஸ்திவாரத்தில் நவீன சர்க்கார் எழுந்தது. பிரபுத்வத்தின் பிடியிலிருந்து முற்றிலும் விடுபடாத பழைய ஐரோப்பா, புதிய பிரான்ஸை எதிர்த்து நடத்தின யுத்தங்களில் பிறந்தது முதலாவது சாம்ராஜ்யம்.

"சாம்ராஜ்யத்தின் (மூன்றாவது நெப்போலியன் என்று அழைக்கப்படும் லூயி போனபார்ட்டின் இரண்டாவது சாம்ராஜ்யம்) நேரடியான எதிர்முறை கம்யூன்.

"வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முனிசிபல் கௌன்சிலர்களால் ஆக்கப்பட்டது கம்யூன். இவர்களைப் பதவியிலிருந்து நீக்கவும் ஜனங்களுக்கு உரிமை இருந்தது. அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் தொழிலாளர்கள், அல்லது தொழிலாளர்களின் உண்மையான பிரதிநிதிகள். கம்யூன் செயலாற்றும் கமிட்டி, வெறும் சட்டமியற்றும் பார்லிமெண்டரி கமிட்டி அல்ல. அதற்குச் சட்டம் இயற்றவும், இயற்றும் சட்டங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவும் அதிகாரம் இருந்தது. போலீசின் அரசியல் தன்மை ரத்துச் செய்யப்பட்டது; மத்திய சர்க்காரின் ஏஜண்ட் என்ற உரிமையையும் போலீஸ் இழந்தது. போலீஸ், கம்யூனின் நேரடியான ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டது. போலீஸைக் கலைக்கவும் கம்யூனுக்கு அதிகாரம் இருந்தது. ஏனைய அதிகாரிகளின் நிலையும் இதுதான். கம்யூன் அங்கத்தினர்கள் முதல் சாதாரண மனிதன் வரையில் எல்லோருக்கும் தொழிலாளியின் கூலிதான் கொடுக்கப்பட்டது. சலுகை படைத்தவர்கள் மறைந்தார்கள்; சலுகைகளும் மறைந்

தன. பொது வேலையை மத்திய சர்க்கார் நிர்வகிக்க வேண்டும் என்னும் நியதி மறைந்தது. முனிசிபல் நிர்வாகம் மாத்திரமல்ல, அதுவரையில் மத்திய சர்க்காரின் நிர்வாகத்தில் இருந்த எல்லாம், கம்யூன் நிர்வாகத்திற்கு உட்படுத்தப்பட்டது.

"மூன்று வருடங்களுக்கு ஒரு முறையோ, அல்லது ஆறு வருடங்களுக்கு ஒரு முறையோ ஆளும் வர்க்கத்தின் எந்த அங்கத்தினர் ஜனங்கள் பெயரில் சட்ட சபையில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதை முடிவு செய்வது வழக்கம். அந்த முறை மாறி, ஒரு முதலாளி தனக்குத் தேவையான தொழிலாளர்களையும், மானேஜர்களையும் தேர்ந்தெடுப்பதைப் போன்று, சர்வ வியாபகமான ஓட்டுரிமை மூலம் தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பிரதிநிதிகளை ஜனங்கள் தேர்ந்தெடுக்கும் முறை அமுலுக்கு வந்தது.

"கம்யூன் உடனே அற்புதங்களைச் செய்துவிடுமென்று ஜனங்கள் எதிர்பார்க்கவில்லை. சட்டத்தின் மூலம் புதிய திட்டத்தைப் புகுத்திவிட முடியுமென்றும் அவர்கள் கனவு காணவில்லை. தங்கள் விடுதலைக்காகவும், சமூகத்தை உன்னதமான ஸ்தானத்திற்கு உயர்த்துவதற்காகவும் (பொருளாதார நிலை சமூகத்தை இந்தத் திசையை நோக்கித் தள்ளுகிறது) பல போராட்டங்கள் நடத்த வேண்டி இருக்கும் என்பதும், சரித்திர ரீதியான பல படிகளைத் தாண்ட வேண்டி இருக்கும் என்பதும், நிலைமையையும், மக்களையும் மாற்ற வேண்டி இருக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியும்...இடிந்து தகரும் பழைய முதலாளித்வ சமூகத்தின் கருவில் இருக்கும் புதிய சமூகத்தின் அம்சங்களை அவர்கள் விடுதலை செய்ய வேண்டும்......

"புரட்சியை நிர்வகிக்கும் பொறுப்பைப் பாரிஸ் கம்யூன் ஏற்றபொழுது, 'இயற்கையான யஜமானர்களின்' அரசாளும் உரிமையில் சாதாரண உழைப்பாளிகள் தலையிடத் துணிந்தபொழுது, மிகக் கஷ்டமான காலத்தில் அடக்கமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், திறமையாகவும் தங்கள் வேலைகளைச் செய்த பொழுது, ஒரு நகரப் பள்ளிக்

கூட போர்டின் காரியதரிசிக்குக் குறைந்த பக்ஷம் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் ஆதார பூர்வமாகக் கூறினார்களோ அதில் ஐந்தில் ஒரு பகுதிக்குமேல் யாரும் சம்பளம் வாங்காமல் எல்லோரும் வேலை செய்தபொழுது பழைய உலகம் கோபத்தால் துடித்தது. செங்கொடி—தொழிலாளர் குடியரசின் சின்னம்—ஹோட்டல் தெவில் மாளிகையை அலங்கரித்ததைக் கண்டு பழைய உலகம் துடி துடித்தது.

"எனினும், சமூக ரீதியில் துணிந்து செயலாற்றும் சக்தி படைத்த வர்க்கம் தொழிலாளி வர்க்கம்தான் என்பதை, பாரிஸ் மத்திய வகுப்பார்—கடைக்காரர்கள், வியாபாரிகள் முதலியோர்—பகிரங்கமாக ஒப்புக்கொண்டனர். பெரிய முதலாளிகள் மாத்திரம்தான் இந்த உண்மையை ஒப்புக்கொள்ள வில்லை......இரண்டு முறைகளில் ஏதேனும் ஒன்றுதான்—கம்யூன், அல்லது சாம்ராஜ்யம்—அமுலுக்கு வரமுடியும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். சாம்ராஜ்யம் பொதுச் செல்வத்தைச் சூறையாடி அவர்களைப் பொருளாதார ரீதியில் அழித்தது......

"பிரெஞ்சு சமூகத்தின் நல்ல அம்சங்களின் பிரதிநிதி கம்யூன்; இதுதான் உண்மையான தேசீய சர்க்கார். அதே சமயத்தில், கம்யூன் தொழிலாளர்களின் சர்க்கார் என்ற முறையில், அது சர்வதேசத் தன்மை பெற்றது. இரண்டு பிரெஞ்சு மாகாணங்களை ஜெர்மனியுடன் இணைத்த ப்ரஷ்ய ராணுவத்தின் கண் முன்னே உலகத் தொழிலாளர்களை, பிரான்சுடன் இணைத்தது கம்யூன்...கம்யூன் ஜெர்மன் தொழிலாளியைத் தொழில் மந்திரியாக நியமித்தது. தியேர்சும், முதலாளிகளும், இரண்டாவது சாம்ராஜ்யமும் வாயளவில் போலந்துக்கு அனுதாபம் செலுத்திவிட்டு, உண்மையில் போலந்தை ரஷியாவுக்குக் காட்டிக் கொடுத்தனர். ஆனால், பாரிஸைப் பாதுகாக்கும் சேனையின் தலைவர்களாகப் போலீஷ்காரர்களை நியமித்து, தீரம் மிகுந்த போலீஷ் வீரர்களைக் கௌரவித்தது கம்யூன்.

"புதிய, உன்னதமான சமூகத்தைச் சிருஷ்டிக்க முயன்ற தன்னலத் தியாகிகள்மீது வெற்றி கண்ட, தொழி

லாளர்களை அடிமைப் படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அந்தத் தீமை நிறைந்த நாகரிகம், உலகம் எங்கும் எதிரொலித்த தப்புப் பிரசாரத்தின் மூலம் போருக்கு இரையானவர்களின் முனகலை அமிழ்த்திற்று. தீரம் மிகுந்த பாரிஸ் தொழிலாளர்களின் கம்யூனைக் குழப்பத்திற்கு உட்படுத்தின, 'நியதியின்' வேட்டை நாய்கள். இந்தப் பிரமாதமான மாற்றம் உலக முதலாளிகளின் மனத்தில் எத்தகைய மாற்றத்தை உண்டு பண்ணிற்று? ஏன், கம்யூன் நாகரிகத்திற்கு எதிராகச் சதி செய்தது! சரித்திரம் அதுவரையில் கண்ட எந்தப் போரிலும் மடியாத அவ்வளவு அதிகமான பாரிஸ் மக்கள் கம்யூனுக்காக உற்சாகத்துடன் மடிந்தார்கள். இதன் பொருள் என்ன? ஏன், கம்யூன் ஜனங்களின் சர்க்காரல்ல, ஒருசில காலிகளின் சர்க்கார்! தூக்கு மரத்திலும், போர்க்களத்திலும் பெண்கள் மகிழ்ச்சியுடன் மடிந்தார்கள். இதன் அர்த்தம் என்ன? கம்யூன் பூதம் அவர்களை மெகாரலாகவும், ஹெகாடஸாகவும் மாற்றி விட்டது!

"சர்வதேசத் தொழிலாளர் சங்கம் சதி செய்வதாகவும், பல்வேறு நாடுகளில் புரட்சியை ஆரம்பிக்கும்படி அதன் மத்தியக் கமிட்டி அடிக்கடி உத்தரவு இடுவதாகவும் போலீஸ் மனப் பான்மையில் தோய்த்தெடுத்த முதலாளிகளின் மனம் முடிவு செய்கிறது. நாகரிகம் அடைந்த பல்வேறு நாடுகளில் உள்ள அபிவிருத்தி அடைந்த தொழிலாளர்களை ஒன்று படுத்தும் ஸ்தாபனம் நமது சங்கம். எந்த நிலையில், எந்த வடிவத்தில், எங்கே வர்க்கப் போராட்டம் ஆரம்பமானாலும் நமது சங்க அங்கத்தினர்கள் முன்னணியில் நிற்க வேண்டும். நவீன சமூகம் என்னும் விளைநிலத்தில் தோன்றும், வர்க்கப் போராட்டம். அடக்குமுறையால் இதை அடக்க முடியாது. இதை அடக்க வேண்டுமானால், தொழிலாளர்மீது முதலாளிகள் செலுத்தும் ஆதிக்கத்தைச் சர்க்கார் அழிக்கவேண்டும்.

"தொழிலாளர்களின் பாரிஸ், கம்யூனைக் கண்ட பாரிஸ், புதிய சமூகத்தின் முன்னோடியாக என்றும் கொண்டாடப்படும்."

பாரிஸ் கம்யூன் தோன்றின விதத்தையும், அதன் தன்மையையும், அது வீழ்ந்ததன் காரணத்தையும் "பிரான்சில் உள்நாட்டு யுத்தம்" என்னும் நூலில் மார்க்ஸ் மிகத் தெளிவாக விளக்குகிறார்.

பாரிஸ் கம்யூன் முதலாவது இன்டர் நேஷனலின் குழந்தை. "கம்யூனைச் சிருஷ்டிக்க முதலாவது இன்டர் நேஷனல் நேரடியாக முயலவில்லை என்றாலும், முதலாவது இன்டர் நேஷனலின் குழந்தை, பாரிஸ் கம்யூன்" என்றார் எங்கல்ஸ். பாரிஸ் கம்யூனின் வெற்றி, முதலாவது இன்டர் நேஷனலின் வெற்றியாகும். எனவே, ஐரோப்பாவில் முதலாவது இன்டர் நேஷனலின் செல்வாக்கு அதிகரித்தது. இதைத் தொடர்ந்து அபிப்பிராய வேற்றுமை அதிகரித்தது. கொள்கைப் போரின் வேகம் உச்ச நிலையை அடைந்தது. முதலாவது இன்டர் நேஷனலில் அங்கம் வகித்த பல்வேறு அரசியல் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் கொள்கையை ஆதரித்துப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்தனர். மார்க்ஸிஸ்டுகளும், பிரௌதோனிஸ்டுகளும் பக்கூனிஸ்டுகளும் அதிகாரத்திற்காகப் போர் புரிந்தனர். பிரௌதோனிஸ்டுகளும், பக்கூனிஸ்டுகளும் முதலாவது இன்டர் நேஷனலின் வாழ்க்கையை அசாத்திய மாக்கினர்.

முதலாவது இன்டர் நேஷனலின் நோக்கத்தை விளக்கி மார்க்ஸ் போல்டேக்கு 1871 ஆம் வருடம் நவம்பர் மாதம் 23 ஆம் தேதி எழுதின கடிதத்தின் சாரம் வருமாறு:

"சோஷலிஸ்டு அல்லது அரைகுறைச் சோஷலிஸ்டு கட்சிகளுக்குப் பதிலாகத் தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான போராட்ட ஸ்தாபனத்தைச் சிருஷ்டிப்பதற்காக இன்டர் நேஷனல் ஸ்தாபிக்கப்பட்டது. முதலாவது இன்டர் நேஷனலின் திறப்பு விழாப் பிரசங்கமும், அதன் சட்டங்களும் இந்த உண்மையைத் தெளிவு படுத்துகின்றன. வகுப்புவாத முறையைச் சரித்திரம் அழித்திருக்கவில்லை யென்றால், சர்வதேச வாதிகள் தங்கள் நிலையைப் பாதுகாத்துக்கொண் டிருக்க முடியாது. சரித்திர ரீதியாக இந்த வகுப்புகளுக்கு அவசியம் இருக்கும் வரை

யில், தொழிலாளி வர்க்கம் சுயேச்சையான இயக்கத்தை நடத்த முடியாது. தொழிலாளி வர்க்கம் பக்குவம் அடையும்பொழுது வகுப்புகள் பிற்போக்குச் சக்திகளாக மாறும். எனினும், சரித்திரம் காட்டின நிலை இன்டர்நேஷனலிலும் இடம் பெற்றிருக்கிறது. புதிய வடிவத்தில் பழைய நிலையை நிலைநிறுத்த வகுப்புகள் முயலுகின்றன.

"தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான இயக்கத்திற்கு விரோதமாக வேலை செய்ய முயன்ற வகுப்புகளுக்கு எதிராக ஜெனரல் கௌன்சில் தொடர்ச்சியாக நடத்தின போராட்டத்தின் சரித்திரம்தான் இன்டர்நேஷனலின் சரித்திரம்.

"பாரிஸில், இன்டர்நேஷனலின் கூட்டு ஸ்தாபகர்களான பிரௌதோனிஸ்டுகளிடம் ஆரம்பத்தில் அதிகாரம் இருந்தது. காலக்கிரமத்தில், இவர்களை எதிர்க்கும் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றின."

"ஜெர்மனியில் லாஸேலிஸ்டுகள் ஆதிக்கம் செலுத்தினர்......"

"1868 ஆம் வருடம் பக்கூனின் இன்டர்நேஷனலில் சேர்ந்தார். 'சோஷல்—டெமாக்ரடிக் கூட்டுறவு' என்னும் பெயருடன், தம் தலைமையில் இரண்டாவது இன்டர்நேஷனலை ஸ்தாபிப்பது இவர் நோக்கம். தத்துவத்தைப் பற்றி இவருக்கு ஒன்றும் தெரியாது. எனினும், இன்டர்நேஷனலின் விஞ்ஞான ரீதியான தன்மையை இந்த ஸ்தாபனம் விளக்குமென்றும், இன்டர்நேஷனலுக்குள் இயங்கும் இரண்டாவது இன்டர்நேஷனலின் முக்கிய நோக்கம் இதுதான் என்றும் இவர் பாசாங்கு செய்கிறார்.

"இவர் திட்டம் அசட்டுத்தனமானது. வர்க்கங்களின் ஒற்றுமை (!), பிதுரார்ஜித உரிமையை ரத்துச் செய்வது (ஸைமனின் முட்டாள்தனமான திட்டம்), நாஸ்திகம், அரசியல் இயக்கத்திலிருந்து விலகி நிற்பது முதலியன இவர் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்.

"இந்த அரிச்சுவடியை, தொழிலாளர் இயக்கம் வளராத இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஆதரித்தன.

பிரான்ஸ், சுவிட்ஜர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகளி லுள்ள சில வரட்டுத் தத்துவ வாதிகளும் ஆதரித்தனர்.

"இந்தச் சதியை எதிர்த்து ஜெனரல் கௌன்சில் போர் புரிய நேர்ந்தது. இறுதியில், இதற்குச் சாவு மணி அடிக்கப்பட்டது.

"தொழிலாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி யின் நோக்கம். தொழிலாளி வர்க்கத்தின் பொருளா தாரப் போராட்டத்தில் பிறந்து வளர்ந்த ஒரு ஸ்தாபனம் இதற்கு அவசியம்.

"ஆளும் வர்க்கத்திற்கு எதிராக, ஒரு வர்க்கம் என்ற முறையில் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் அரசியல் போராட்டமாகும். உதாரணமாக, ஒரு குறிப் பிட்ட பாக்டரியிலோ, அல்லது தொழிலிலோ வேலை செய் யும் தொழிலாளர்கள் வேலை நேரத்தைக் குறைக்கும்படி முதலாளிகளை வேலை நிறுத்தத்தின் மூலம் நிர்ப்பந்தப் படுத்துவது பொருளாதாரப் போராட்டமாகும். ஆனால், எட்டு மணி நேர வேலையைச் சட்டமாக்குவதற் காகத் தொழிலாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் அரசி யல் போராட்டமாகும். தனிப்பட்ட பொருளாதாரப் போராட்டங்களி லிருந்து அரசியல் இயக்கம் பிறக்கும்....

"ஆளும் வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தை எதிர்த்து முடிவான போர் நடத்தப் போதிய அளவு தொழிலாளி வர்க்கம் அபிவிருத்தி அடையாத இடங்களில், ஆளும் வர்க்கத்தின் விபரீதமான போக்கை விளக்கி இடை விடாது பிரசாரம் செய்து, அவர்களை இதற்குத் தயார் செய்ய வேண்டும்."

அன்று பல்வேறு தேசங்களி லிருந்த சோஷலிஸ்டு அல்லது அரைகுறைச் சோஷலிஸ்டு பிரிவுகளுக்குப் பதி லாக, தொழிலாளி வர்க்கத்தின் உண்மையான போராட்ட ஸ்தாபனத்தை உருவகப்படுத்துவதுதான் முதலாவது இன் டர் நேஷனலின் நோக்கம். இந்த நோக்கம் விரைவில் நிறை வேறிற்று. பத்து வருட காலம் அது ஐரோப்பாவில் பெருமையுடன் வேலை செய்தது. கம்யூனுக்குப் பிறகு,

தொழிலாளர்களின் போராட்ட ஸ்தாபனத்தைச் சிருஷ்டித்த பிறகு, அது அவசியமற்றதாயிற்று. "பழைய வடிவத்தில் இன்டர் நேஷனல் இனித் தேவையில்லை...... மார்க்சின் கொள்கை பரவின பிறகு தோன்றும் அடுத்த இன்டர் நேஷனல், கம்யூனிஸ்டு இன்டர் நேஷனலாக இருக்குமென்றும், அது நமது கொள்கைகளைப் பகிரங்கமாகச் சொல்லுமென்றும் நினைக்கிறேன்" என்றார் ஏங்கல்ஸ்.

முதலாவது இன்டர் நேஷனல், சோஷலிஸப் போராட்டத்திற்கு அஸ்திவாரக் கல் நட்டது. இந்த நோக்கம் பூர்த்தியானதும் முதலாவது இன்டர் நேஷனல் கலைக்கப்பட்டது.

பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு ஜெர்மன் சோஷலிஸ்டுகள் ஒரு ஐக்கிய முன்னணியைச் சிருஷ்டிக்க முயன்றனர். ஜெர்மன் சோஷல் டெமாக்ரடிக்குகளை ஒன்றுபடுத்துவதற்காக, கோத்தாவில் 1875 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதியிலிருந்து 27 ஆம் தேதி வரையில் ஒற்றுமைக் காங்கிரஸ் நடந்தது. இந்தக் காங்கிரஸில் லாஸேலிஸ்டுகள் கலந்து கொண்டனர். ஆனால், இந்தக் காங்கிரஸ் உண்மையான ஒற்றுமையை உண்டுபண்ணவில்லை. இந்தக் காங்கிரஸ் வகுத்த திட்டத்திலுள்ள குறைகளை, "கோத்தா திட்ட விமர்சனம்" என்னும் நூலில் மார்க்ஸ் தெளிவாக எடுத்துக் காட்டினர். சுயசிரம ஜீவிகளின் கட்சி எந்த அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட வேண்டும் என்பதை இந்த நூல் தெளிவாக விளக்குகிறது. ஒற்றுமைக்காகக் கொள்கையைத் தியாகம் செய்வது ஆபத்து என்பதை மார்க்ஸ் இந்த நூலில் வலியுறுத்தினர். ஒற்றுமை அவசியம்தான்; ஆனால், இந்த ஒற்றுமைக்கு விலையாகக் கொள்கையைத் தியாகம் செய்யலாகாது.

• ஜெர்மன் சோஷல் டெமாக்ரடிக் கட்சித் தலைவர்கள் பல தவறுகள் செய்தனர். தத்துவத் துறையிலும், திட்டத்திலும் அவர்கள் செய்த தவறுகளை, "கோத்தா திட்ட விமர்சனத்தில்" மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். அன்று ஜெர்மனியில் இரண்டு தொழிலாளர் கட்சிகள்

இருந்தன: பெபலையும், லீப்னெட்டையும் தலைவராகக் கொண்ட ஜெர்மன் சோஷல் டெமாக்ரடிக் தொழிலாளர் கட்சி; ஹாஸன்க்ளேவர், ஹாஸெல்மான், டோல்கே ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட ஜெர்மன்தொழிலாளர் சங்கம். இந்த இரண்டு கட்சிகளையும் ஒன்றுபடுத்துவதற்காகத்தான் கோத்தா காங்கிரஸ் நடந்தது. ஐக்கிய ஜெர்மன் சர்க்காரை ஸ்தாபிக்கும் பிரச்னை முடிவு செய்யப்படாத காலத்தில் இந்த இரண்டு கட்சிகளும் தோன்றின. சுயசிரம ஜீவிகளின் தலைமையில் புரட்சி செய்து ஐக்கிய ஜெர்மன் குடியரசை ஸ்தாபிப்பதன் மூலமோ, அல்லது ஜமீந்தார்களின் ஆதிக்கத்தை உறுதிப் படுத்துவதன் மூலமோதான் இந்தப் பிரச்னையைத்தீர்க்க முடியும்.

புரட்சியின் மூலம் ஜெர்மன் குடியரசை ஸ்தாபிப்பதை மார்க்ஸிஸ்டுகளான லீப்னெட்டும், பெபலும் ஆதரித்தனர். லாஸேலிஸ்டுகள் (ஜெர்மன் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்) ஜமீந்தார்களின் வழியில் சென்றனர். இவர்களை "விசுவாசமுள்ள ப்ரஷ்ய சோஷலிஸ்டுகள்" என்று வர்ணித்தார் மார்க்ஸ். தொடர்ந்த யுத்தங்களாலும், ஜெர்மன் தொழிலாளர்களின் பக்குவம் இன்மையாலும் ஜமீந்தார்களின் உதவியால் ஐக்கிய ஜெர்மனியை பிஸ்மார்க்கால் ஸ்தாபிக்க முடிந்தது. இரண்டு கட்சிகளுக்கு இடையே நிலவின அரசியல் வேற்றுமை இதனால் மறைந்தது. எனவே, இரண்டு கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்என்று அங்கத்தினர்களில்பெரும்பான்மையோர் கருதினர். இதை மார்க்ஸ் எதிர்க்கவில்லை. ஆனால், இதில் ஆபத்து இருப்பதை அவர் எடுத்துக் காட்டினார். கொள்கைத் தெளிவுடன் வேலைத்திட்டத்தை வகுக்கவில்லை என்றால், சந்தர்ப்ப வாதம் கட்சியில் இடம் பெறும் என்பதை மார்க்ஸ் சுட்டிக் காட்டினார். இதன் விளைவுதான் "கோத்தா திட்ட விமர்சனம்."

உழைப்பு சம்பந்தமாகவும்,செல்வம் சம்பந்தமாகவும், தொழிலாளர் விமோசனம் சம்பந்தமாகவும், சர்க்கார் சம்பந்தமாகவும் கோத்தா திட்டம் செய்த தவறுகளை எடுத்துக் காட்டிவிட்டு, மார்க்ஸ் கம்யூனிஸத்தின் வளர்ச்சியை இந்த நூலில் விரிவாக ஆராய்கிறார். கம்யூனிஸ்டு

சமுதாயத்தின் ஆரம்ப நிலைக்கும், உயர்ந்த நிலைக்குமுள்ள வித்தியாசத்தை அவர் தெளிவு படுத்தினர். சமூகத்தைச் சீர்குலைக்கும் முதலாளித்வ அமைப்புத் தகர்ந்த பிறகு சுய சிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வம் தோன்றும். இந்தச் சர்வாதிகாரத்வம் நிரந்தரமானதாயிராது. சோஷலிஸ்டு சமூக நிர்மாணமான வேலை பூர்த்தியானதும் சர்க்கார் மங்கி மறையும்.

கம்யூனிஸ்டு சமுதாயம் பரிபூரண வளர்ச்சி அடையக் காலதாமதமாகும். முதலாளித்வ அமைப்பைப் பரிபூரணமாகத் தகர்த்துவிட்டு, மனிதன் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு உற்பத்தி சக்திகளை வளர்க்கக் காலதாமதமாகும். ஆனல், சுயசிரம ஜீவிகளின் சர்வாதிகாரத்வம் ஏற்பட்டதும் உற்பத்திச் சாதனங்கள் சமூகத்திற்குச் சொந்தமாகும்; மனிதனை மனிதன் சுரண்டும் முறை சாகும். எனினும், பரிபூரண சமத்வம் சமூகத்தில் இடம் பெறக் காலதாமதமாகும். பரிபூரண சமத்வம் கம்யூனிஸ்டு சமுதாயம் வளர்ச்சியின் சிகரத்தை அடையும்பொழுது, கம்யூனிஸ்டு சமுதாயம் உயர்ந்த நிலையை அடையும் பொழுது மாத்திரம்தான் சாத்தியமாகும். இந்த உண்மையை ஜெர்மன் சோஷல் டெமாக்ரடிக்குகள் உணரவில்லை. முதலாளித்வம் மறைந்ததும் பரிபூரண சமத்வம் சமூகத்தில் இடம் பெற வேண்டுமென்று கோத்தா காங்கிரஸ் முடிவு செய்தது.

இந்த முடிவு தவறு என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினர். நீண்டகாலப் பிரசவ வேதனைக்குப் பிறகு முதலாளித்வ சமூகத்திலிருந்து வெளியில் வரும் கம்யூனிஸ்டு சமுதாயம் ஆரம்பத்திலேயே வர்க்க வேற்றுமைக்கு விடை கொடுக்கும்; உழைப்பைக் கௌரவிக்கும். ஆனல், பரிபூரண சமத்வம் நிலவாது. இந்த நிலை எப்பொழுது ஏற்படும்?

"தொழில் பிரிவினையும், தேக உழைப்புக்கும் மூளை உழைப்புக்குமுள்ள முரண்பாடும் மறைந்த பிறகு, உழைப்பு வாழ்க்கைச் சாதனமாக மாத்திரம் இராமல் வாழ்க்கையின் அவசியமான அம்சமாகமாறின பிறகு,

மனிதன் வளருவதைத் தொடர்ந்து உற்பத்தி சக்திகளும் வளர்ந்த பிறகு, கூட்டுச் செல்வம் ஏராளமாகக் குவியும் பொழுதுதான் முதலாளித்வ உரிமை என்னும் குறுகின அடிவானத்தைக் கடந்து சமூகம் முன்னேற முடியும்; அதன் பிறகுதான் சக்திக்குத் தகுந்த உழைப்பு, தேவைக் குத் தகுந்த ஊதியம் என்னும் நியதி சமூகத்தில் இடம் பெறும்'' என்கிறார் மார்க்ஸ்.

''கோத்தா திட்ட விமர்சனத்தில்'' கம்யூனிஸ்டு கட்சி எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதையும் மார்க்ஸ் தெளிவாக விளக்கினார். சந்தர்ப்ப வாதிகளுடன் சமரசம் செய்து கொள்வது புரட்சிக்கே ஆபத்து என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். இந்த நூல் மார்க்சிஸ்டு கட்சிக்கு அஸ்திவாரம் அமைத்தது எனல் மிகையாகாது.

இடைவிடாத உழைப்பால் மார்க்ஸ் நோய்வாய்ப்பட் டார். அவர் தேக நிலையைக் கண்டு நண்பர்கள் கலங்கி னர். ஜென்னி அப்பொழுது கான்ஸர் நோயால் வாடி னாள். இவ்வளவு துன்பத்திற்கு மத்தியிலும் உலகிலே தலைசிறந்த அந்தச் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்த வில்லை. அவர் சிந்தித்தார், இடைவிடாது சிந்தித்தார். ஆனால், அவர் மரணத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப் பதை உணர்ந்த நண்பர்கள் அவரை ஓய்வெடுத்துக்கொள் ளும்படி வேண்டினர். அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கி மார்க்ஸ் பல நாட்கள் தமது புதல்வி எலீனருடன் கடற்கரையில் வசித்தார். ஆனால், அங்கும் அவர் சும்மா இருக்கவில்லை. பல இளம் புரட்சிக்காரர்களும், ஆசிரியர் களும் அவரைச் சந்தித்து, புரட்சியைப் பற்றியும், தத்து வத்தைப் பற்றியும் அவருடன் விவாதித்தனர். உடல் நலம் குன்றியிருந்த காலத்தில்கூட ருஷியப் புரட்சிக்காரர் களுடனும், ஜெர்மன் புரட்சிக்காரர்களுடனும் அவர் நெருங்கின தொடர்புவைத்துக் கொண்டார். அன்றும் அவர் ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார்.

அன்று ருஷியாவில் புரட்சி இயக்கம் பிறந்தது. பல ருஷிய வாலிபர்கள் புரட்சிப் போர்க்களத்தில் குதித்தனர்.

அவர்கள் தொழிற்சாலைகளுக்கும், கிராமங்களுக்கும் சென்று ருஷியாவின் உண்மையான நிலைமையைத் தெரிந்து கொள்ள முயன்றனர். அவர்கள் மார்க்ஸ் வரைந்த நூல்களை ஆர்வத்துடன் படித்தனர். மார்க்சின் "கம்யூனிஸ்டு மானிபெஸ்டோவும்," "மூலதனமும்" ருஷிய பாஷையில் வெளிவந்தன. இந்த நூல்களை மொழிபெயர்த்த டானியேல்ஸன் என்பவருடன் மார்க்ஸ் தொடர்பு வைத்துக் கொண்டார். ருஷியப் புரட்சி இயக்கத் தலைவர்களான லாவ்ரோவ், வீரா ஸாஸூலிச் ஆகியோருடனும் மார்க்ஸ், புரட்சியைப்பற்றி விவாதித்தார். விவசாயிகள் இயக்கத்தைப் பற்றியும், கம்யூன் முறைகளைப் பற்றியும் அவர்கள் மார்க்சுடன் விவாதித்தனர். அன்று ருஷியாவிலிருந்த கம்யூன்களிலிருந்து கம்யூனிஸ்டு சமூகத்திற்கு மனித சமூகம் தாவ முடியுமென்று ஹெர்ஸன், பக்கூனின் முதலியோர் பிரசாரம் செய்தனர். இந்தக் கருத்துத் தவறு என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். ருஷியப் புரட்சி ஐரோப்பிய சமூகப் புரட்சியின் ஆரம்பமாக இருக்குமானல் ருஷியா அரைகுறைப் பிரபுத்வ சமூக நிலையிலிருந்து சோஷலிஸ்டு சமூகத்திற்குத் தாவுமென்று மார்க்ஸ் கருதினார். ருஷியப் புரட்சிக்காரர்களும், பெபல், பேர்ன்ஸ்டீன், காரல் காட்ஸ்கி (பின் கூறப்பட்ட இருவரும் பிற்காலத்தில் மார்க்சிஸத்திற்குத் துரோகம் செய்தனர்.) முதலிய ஜெர்மன் புரட்சிக்காரர்களும் மார்க்ஸை அடிக்கடி சந்தித்து, அரசியல் விஷயங்களை விவாதித்தனர்.

பாரிஸ் கம்யூனுக்குப்பிறகு பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் சும்மா இருக்கவில்லை. அவர்கள் மீண்டும் ஸ்தாபன ரீதியாக ஒன்று பட்டனர். பிரெஞ்சு சோஷல் டெமாக்ரடிக் கட்சியின் திட்டத்தை ஜூலியஸ் குவெஸ்டே தயாரித்தார். அந்தத் திட்டத்தை அவர் மார்க்சுக்கு அனுப்பினார், பரிசீலனைக்காக. மார்க்ஸ் அந்தத் திட்டத்தில் பல முக்கியமான திருத்தங்கள் செய்தார். பிரான்சிலும் சோஷலிஸ்ட் இயக்கம் வளர்ந்தது. இத்தாலி, சுவிட்ஜர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் மார்க்சிஸம் பரவிற்று. உலக அரங்கத்தில் மார்க்சிஸம் நிரந்தர இடம் பெற்றது.

வழக்கம்போல் தேகபலம் குன்றியிருந்த காலத்திலும் மார்க்ஸ் நாள்முழுதும் எழுதுவார், அல்லது படிப்பார். இறுதிக்காலம் நெருங்க நெருங்க, படிக்க வேண்டுமென்னும் ஆசையும் அதிகரித்தது.

வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் மார்க்ஸைத் தாங்கின ஜென்னி 1881 ஆம் வருடம் இறந்தார். இந்த மரணம் மார்க்ஸையும் மரணத்தை நோக்கி இழுத்துச் சென்றது. ஏனெனில், இந்தப் பேரடியை அவரால் தாங்கமுடியவில்லை. அவர் வாழ்க்கையை அலங்கரித்த ஜோதி அணைந்தது. "அவளுடன் மூரும் (மூர் என்று நெருங்கின நண்பர்கள் மார்க்ஸை அழைத்தனர்.) இறந்து விட்டார்" என்று மார்க்சின் புதல்வி எலீனரிடம் கூறினார் எங்கல்ஸ். இது உண்மை. ஜென்னி இறந்த பிறகு இரண்டு வருடங்கள்தான் மார்க்ஸ் உயிருடன் இருந்தார். உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தின, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு புரட்சிகரமான தத்துவத்தை உலகத்திற்கு அளித்த, சோஷலிஸத்தை விஞ்ஞான அஸ்திவாரத்தில் அமைத்த, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியை உருவகப்படுத்தின காரல் மார்க்ஸ் 1883 ஆம் வருடம் மார்ச்சு மாதம் 14 ஆம் தேதி சிந்திப்பதை நிறுத்தினார்.

மார்க்ஸ் மடிந்தார். ஆனால், உலகம் இருக்கும் வரையில் மார்க்ஸ் வாழ்வார், மார்க்சிஸமும் வாழும்.

1883 ஆம் வருடம் மார்ச்சு மாதம் பதினேழாம் தேதி ஹைகேட் மயானத்தில் ஜென்னிக்கு அருகில் மார்க்ஸையும் அடக்கம் செய்தார்கள். அப்பொழுது எங்கல்ஸ் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு:

"மார்ச்சு மாதம் பதினாலாம் தேதி இரண்டேமுக்கால் மணிக்கு தலைசிறந்த சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்தினார்......அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலுமுள்ள போர் உணர்ச்சி படைத்த சுயசிரம ஜீவிகளும், சரித்திர சாஸ்திரமும் இவர் மரணத்தால் அடைந்த நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாது........

"ஜீவராசிகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதை டார்வின் கண்டு பிடித்ததுபோல், மனித சமூகத்தின் இயக்க விதிகளை மார்க்ஸ் கண்டுபிடித்தார். எங்கும் மலிந்திருந்த ஆத்மார்த்திகவாதம் ஒரு சாதாரண உண்மையைத் திரையிட்டு மறைத்தது. அந்த உண்மை என்ன? அரசியல், விஞ்ஞானம், மதம், கலை ஆகிய துறைகளில் மனித சமூகம் கவனம் செலுத்துமுன், அது உண்ணவும், உறங்கவும், உடைகள் அணியவும் வேண்டும் என்ற உண்மையை மார்க்ஸ்தான் முதன் முதல் கண்டு பிடித்தார். எனவே, லோகாயதப் பொருள்களை எத்தகைய கருவிகள் உற்பத்தி செய்கின்றன, ஒரு குறிப்பிட்ட காலத்தில் மனித சமூகம் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் எவ்வளவு தூரம் முன்னேறி யிருக்கிறது என்பனவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் அரசியல் ஸ்தாபனங்களும், சட்ட சம்பந்தமான எண்ணங்களும், கலை மதம் சம்பந்தமான கோட்பாடுகளும் உருவாகும். இந்த அடிப்படையில் தான் இத்தகைய விஷயங்களை விளக்க வேண்டும். இது வரையில் இதற்கு நேர் முரணான வழியைச் சிந்தனையாளர்கள் மேற்கொண்டனர். அவர்கள் லோகாயதப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு விஷயங்களை விளக்கவில்லை. இது தவறு.

"அத்துடன், முதலாளித்வ உற்பத்திமுறையின் தன்மையையும், இந்த உற்பத்திமுறை சிருஷ்டித்திருக்கும் முதலாளித்வ சமூகத்தை இயக்குவிக்கும் நியதிகளையும் மார்க்ஸ் கண்டுபிடித்தார். மார்க்சுக்கு முந்தின பொருளாதார சாஸ்திரிகளும், சோஷலிஸ்டுகளும் லாபம் எவ்வாறு கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் திணறினர். அதிக மதிப்பின் தத்துவத்தைக் கண்டுபிடித்ததன் மூலம் இந்தச் சிக்கலைச் சிக்கறுத்தார் மார்க்ஸ்.

"விஞ்ஞான சாஸ்திர நிபுணராக விளங்கின மார்க்ஸ் பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். ஆனால், அவர் எல்லையற்ற அறிவின் ஒரு பகுதிதான் இவை. சரித்திர பூர்வமான, ஜீவன் நிறைந்த, புரட்சிகரமான சக்தியாக விஞ்ஞானத்தை மதித்தார் மார்க்ஸ். விஞ்ஞான சாஸ்திரம் கண்டுபிடிக்கும் உண்மைகளை—அவைகளை உடனே

அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியவில்லை என்றாலும்—மார்க்ஸ் குதூகலத்துடன் வரவேற்றார். இந்த உண்மைகள் உற்பத்தி முறையிலும், சரித்திரத்தின் போக்கிலும் ஏதேனும் மாற்றத்தை உண்டு பண்ணினால் மார்க்ஸ் மட்டற்ற மகிழ்ச்சி அடைவார். உதாரணமாக, மின்சாரம் சம்பந்தமாகப் பல நிபுணர்கள் நடத்தின ஆராய்ச்சியை—குறிப்பாக, மார்ஸெல் டெப்ரிஸ் ஆராய்ச்சியை—மார்க்ஸ் நுட்பமாகக் கவனித்தார்.

"எல்லாவற்றிலும் மேலாக, மார்க்ஸ் புரட்சிக்காரர் என்ற உண்மையை யாரும் மறக்கக்கூடாது. முதலாளித்வ சமுதாயத்தைத் தகர்த்து, முதலாளித்வம் சிருஷ்டித்திருக்கும் அரசியல் ஸ்தாபனங்களை வீழ்த்தி, சுயசிரம ஜீவிகளை அடிமைத் தளைகளிலிருந்து விடுவிப்பது மார்க்சின் லட்சியம். தனது தேவைகளையும், கடமைகளையும் தொழிலாளி வர்க்கம் தெளிவாக உணரும்படி செய்தவர் மார்க்ஸ்தான். தொழிலாளி வர்க்கம் எந்தநிலையில் வெற்றி பெற முடியும் என்பதையும் மார்க்ஸ்தான் தெளிவு படுத்தினார். போராடும் மனிதர் மார்க்ஸ். பிறர் போட்டிபோட முடியாதவாறு, ஆர்வத்துடனும், தெம்புடனும், வெற்றிகரமாகவும் அவர் காலமெல்லாம் போராடினார்......

"நமது காலத்தில் மார்க்ஸைப் போன்று தூஷிக்கப் பட்டவரும், வெறுக்கப்பட்டவரும் வேறுயாரும் இல்லை. முடியரசும், குடியரசும் அவரைத் தேசப் பிரஷ்டம் செய்தன. பிற்போக்காளர்களும், தீவிர வாதிகளும், ஜன நாயகவாதிகளும், முதலாளிகளும் போட்டி போட்டுக் கொண்டு மார்க்ஸைத் தூஷித்தனர். இவைகளை யெல்லாம் மார்க்ஸ் பொருட்படுத்தவில்லை. ஆனால், அவசியமான சந்தர்ப்பங்களில் தப்புப் பிரசாரத்திற்கு ஆணித்தரமாகப் பதில் கூறினார்.

"இன்று மார்க்ஸ் நம்மைப் பிரிந்துவிட்டார். மார்க்ஸ் கோடானுகோடி சுயசிரம ஜீவிகளால் நேசிக்கப் படுகிறார்—கௌரவிக்கப் படுகிறார். எல்லோரும் இன்று கண்ணீர் வடிக்கிறார்கள். ஸைபீரியாவிலுள்ள சுரங்கத் தொழிலாளர்கள் முதல் கலிபோர்னியாவிலுள்ள

தொழிலாளர்கள் வரையில் எல்லோரும் இன்று துக்கக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஒன்று மட்டும் நான் உறுதியாகச் சொல்லுவேன்: அவருக்கு ஏராளமான எதிரிகள் இருக்கலாம்; ஆனால், தனிப்பட்ட முறையில் அவருக்கு ஒரு எதிரிகூட இல்லை.

"அவர் பெயர் அமரத்வம் பெறும்; அவர் நூல்கள் சிரஞ்சீவித்வம் பெறும்."

1918-ஆம் வருடம் நவம்பர் மாதம் ஏழாம் தேதி மார்க்ஸ், எங்கல்ஸ் ஞாபகச் சின்னத்தைத் திறந்து வைத்து, லெனின் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம் வருமாறு:

"உலகத் தொழிலாளர் புரட்சி இயக்கத் தலைவர்களின்—மார்க்சும், எங்கல்சும்—ஞாபகச் சின்னத்தை இன்று நாம் திறந்து வைக்கிறோம்.

"விரல் விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர் நீண்ட நெடுங்காலம் கோடானு கோடி உழைப்பவர்களைச் சித்திரவதை செய்தார்கள்; மனித சமுதாயம் இவர்கள் அடக்குமுறையால் கஷ்டக் கண்ணீர் வடித்தது. ஒற்றுமையற்ற, சிதறிக் கிடந்த, விஷய ஞானமற்ற விவசாயிகளைக் கடந்த சகாப்தத்தில் நிலச்சுவான்தார்கள் சுரண்டினார்கள். ஆனால், புதிய சகாப்தத்தில் வாழும் சுரண்டுகிறவர்கள் விழுந்து கிடக்கும் சமூகத்தில் அதன் முன்னணிப் படையைக் காண்கிறார்கள்: அந்த முன்னணிப் படை தான் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள். தொழிற்சாலை அவர்களை ஒன்றுபடுத்திற்று; நகர வாழ்க்கை அவர்கள் அறிவை வளர்த்தது; வேலை நிறுத்தப் போராட்டமும், புரட்சிச் செயலும் அவர்களைப் பண்படுத்தின.

"முதலாளித்வம் அழியும் என்பதையும், மனிதனை மனிதன் சுரண்டாத கம்யூனிஸ்டு சமுதாயம் தோன்றும் என்பதையும் மார்க்சும், எங்கல்சும் விஞ்ஞான ரீதியாக நிரூபித்தனர். இது உலகத்திற்கு அவர்கள் செய்த சரித்திர முக்கியத்வம் வாய்ந்த சேவை.

"உலகத் தொழிலாளர்களின் ஸ்தானத்தையும், கடமையையும், தேவைகளையும் மார்க்சும், ஏங்கல்சும் சுட்டிக் காட்டினர். மூலதனத்தை எதிர்த்து முதலில் சுயசிரம ஜீவிகள்தான் புரட்சி செய்வார்கள் என்பதையும், இந்தப் போரில் அவர்கள் சுரண்டப்படுகிறவர்களையெல்லாம் ஒன்று படுத்துவார்கள் என்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டினர். இது உலகத்திற்கு அவர்கள் செய்த மகத்தான சேவை.

"அந்த மகிமைபொருந்தின சோஷலிஸ்டுகளின் தீர்க்க தரிசனம் மெய்யாகும் இன்பகரமான காலத்தில் நாம் வாழுகிறோம். பல நாடுகளில் சோஷலிஸ்டு புரட்சி மலருவதை நாம் காண்கிறோம். ஏகாதிபத்தியங்களின் விவரிக்க முடியாத படுகொலை, அடக்கப்பட்ட ஜனங்களின் தீரம் மிகுந்த எழுச்சியைத் தூண்டி விடுகிறது; விடுதலைப் போரில் இது ஜனங்களின் சக்தியைப் பத்து மடங்கு அதிகப்படுத்துகிறது.

"போராட்டத்தில் நாம் தனியே நிற்கவில்லை என்பதை மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஞாபகச் சின்னம் கோடானு கோடித் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஞாபகப் படுத்தட்டும். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் நம்முடன் தோளோடு தோள் நிற்கிறார்கள். நாமும், அவர்களும் இன்னும் பல கடுமையான போராட்டங்களில் ஈடுபட வேண்டும். பொதுப் போராட்டத்தில் முதலாளித்வம் தகரும்; இறுதியில், சோஷலிஸம் வெற்றி பெறும்!"

3286.



சக்தி